**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

*வெளியீடு :* 20-6-2014 Issued : 20-6-2014

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வியாழக்கிழமை, பிப்ரவரி 20, 2014—தொகுதி 62—எண் 2**

**Thursday, the 20th February 2014—Volume 62—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

**20–2–2014**

**உள்ளடக்கம்**


*பக்கங்கள்*

**1. வினாக்கள்–விடைகள்**— 143-192

*உடுக்குறியிட்ட வினாக்கள்*

**2. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)**—

*(அ) தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியின்மையைத் தடுக்கும்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2014*

*மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்* 193

*(ஆ) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014*

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா* 194

*(இ) நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான இழப்பீடு மற்றும் ஒளிவு மறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு உரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014*

*மாண்புமிகு திரு. பி.வி. ரமணா* 195

*(ஈ) தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014*

*மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்* 196

*(உ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2014* 215-216

*மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்* 215, 216

*(ஊ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2014* 222-223

*மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்* 222, 223

*பக்கங்கள்*

**3. முன்பண மானியக் கோரிக்கைகள், 2014–2015, அளித்தல்—** 196-201

*மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்* 196

**4. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 2013–2014, அளித்தல்—** 201-208

*மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்* 201-204

**5. அறிவிப்புகள்—**

*(அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2013-2014, முன்மொழிதல் (ஆ.செ.)* 209

*(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2014 (ஆ.இ.)* 215

*(இ) முன்பண மானியக் கோரிக்கைகள், 2014-2015, முன்மொழிதல் (ஆ.செ.)* 216

*(ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2014 (ஆ.இ.)* 222

**6. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2013–2014, வாக்கெடுப்பு—** 209-214

*மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்* 209

**7. முன்பண மானியக் கோரிக்கைகள், 2014–2015, வாக்கெடுப்பு—** 216-221

*மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்* 216

**8. வரவு–செலவுத் திட்டம், 2014–2015, பொது விவாதமும் பதிலுரையும்—** 223-285

*திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்* 223-244, 246-249, 253-256

*மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்* 224-229,233, 257,285





*பக்கங்கள்*

**8. வரவு–செலவுத் திட்டம், 2014–2015, பொது விவாதமும் பதிலுரையும்**—*தொடர்ச்சி*

*மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா* 229-232, 234-236

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி* 232, 234, 237-241

*திரு. ப. பார்த்தசாரதி* 239

*மாண்புமிகு திரு. பி.வி. ரமணா* 242-243

*மாண்புமிகு திரு. பி. தங்கமணி* 244, 247-252

*மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்* 245

*மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு* 245-246

*மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்* 250

**9. அரசினர் தீர்மானங்கள்—**

*(அ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்* 286

*(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்* 305

**10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—**

*(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2014* 287-289

*மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்* 287, 288

*(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2014* 289-291

*மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்* 289, 290

*(இ) சென்னை மாநகர காவல் (சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி மாநகரங்களுக்கு நீட்டிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவு, 2014* 291-293

*பக்கங்கள்*


**10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**—
*தொடர்ச்சி*

*மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா* 291, 292-293

*(ஈ) தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியின்மையைத் தடுக்கும்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2014* 293-295

*மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்* 293, 295

*(உ) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014* 295, 297

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா* 295, 297

*(ஊ)நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான இழப்பீடு மற்றும் ஒளிவு மறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு உரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014* 297-301

*மாண்புமிகு திரு. பி.வி. ரமணா* 297, 299, 300

*திரு. க. பாலகிருஷ்ணன்* 298

*(எ) தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014* 301-303

*மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்* 301, 303

**11. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் பாராட்டு** 303-304

**12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 305-306

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## விஜய, மாசி 8, திருவள்ளுவர் ஆண்டு—2045

## 2014 பிப்ரவரி 20, வியாழக்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு*
*இறைஎன்று வைக்கப் படும்."*

*நீதி நெறிமுறைகள் தவறாமல் குடிமக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளரை மக்கள் ஒப்பற்ற தெய்வம் என்று மதித்துப் போற்றுவார்கள்.*

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 85, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**85—**

### துணை மின் நிலையம்

***36079—திரு. எம்.கே. அசோக்:**

*மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2014 பிப்ரவரி 20

*(அ) வேளச்சேரி தொகுதி, வேளச்சேரியில் 110 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) ஆம். வேளச்சேரி பகுதிக்கு தற்போது வேளச்சேரி 110/33/11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து மின் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. பெருகிவரும் மின் பளுவைக் கருத்தில் கொண்டு வேளச்சேரியில் 110/33/11 கி.வோ. துணை மின் நிலையம்* Indoor Sub-station *அமைக்கத் திட்டமிடப்பட்டு, நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. நிருவாக அனுமதி பெறப்பட்டவுடன் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் தொடங்கும். இப்பணிகள் 2014-2015 ஆம் நிதியாண்டில் முடிவடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக் அவர்கள்.*

**திரு. எம்.கே. அசோக்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்லோரைக் காண்பதுவும் நன்றே; நலம் மிக்க நல்லோர் சொல் கேட்பதுவும் நன்றே; நல்ல குணங்கள் உரைப்பதுவும் நன்றே; நம் இதய தெய்வம் அம்மா அவர்களால் தமிழ்நாடும் நன்றே! (மேசையைத் தட்டும் ஒலி)*

*"வயிற்றுக்குச் சோறிட வேண்டும்-இங்கு*

*வாழும் மனிதருக்கெல்லாம்*

*பயிற்றுப் பலகல்வி தந்து-இந்தப்*

*பாரை உயர்த்திடல் வேண்டும்"*

*என்ற பாரதியின் சொல்லுக்கேற்ப, வயிற்றுக்குச் சோறிட்டாய் தாயே! அம்மா உணவகம் தந்து. பயிற்று பல கல்வி தந்து இந்தப் பாரை உயர்த்திடச் செய்தாய் அம்மா லேப்டாப் தந்து! தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்; தமிழர் வாழ்வு வளம் செழிக்கும் என்பார்; அம்மா, மாசியில் நீங்கள் பிறந்ததால், இந்தியா வாழும்;*



2014 பிப்ரவரி 20]

*இருள் அகலும். மாசியில் பிறந்த நல் மாணிக்கமே! இந்தியாவில் இனி அம்மா, உங்கள் ஆதிக்கமே! (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு வேளச்சேரி பகுதியில் வெங்கடேஸ்வரா நகர், விஜய நகர், எம்.ஜி.ஆர். நகர், பிருந்தாவன் நகர், அம்பேத்கர் நகர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு, நேரு நகர் போன்ற பகுதிகளிலெல்லாம் நாளுக்கு நாள் குடியிருப்புகளும், வணிக வளாகங்களும் அதிகரித்து வருவதால், மின் பற்றாக்குறை நிலவுகிறது. இந்த மின் பற்றாக்குறையைச் சரிசெய்வதற்கு, மேற்கு வேளச்சேரியில் புதிதாக 110 கே.வி. திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்கும் பணி விரைவில் தொடங்கும் என்று கூறிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மேலும், சென்னைப் பெருநகரிலுள்ள பிற பகுதிகளிலும் துணை மின் நிலையம் அமைக்கும் உத்தேசம் உள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரி பகுதியில் தற்பொழுது வேளச்சேரி 110/33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்திலிருந்து மின் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த மின் நிலையத்தில் 16 எம்.வி.ஏ. திறன் கொண்ட மூன்று மின்மாற்றிகளுடன், 110/11 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையம் இயங்கி வருகின்றது. அதனுடைய உச்ச மின் பளு தேவை 45.3 எம்.வி.ஏ. ஆகும். ஏறத்தாழ அங்கே இருக்கின்ற மின் கட்டமைப்பு வசதிகளும், மின் பளுவும் சம நிலையிலே இருக்கின்ற காரணத்தினால், அங்கே புதிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விரைவாகச் செயல்பட்டு, 25 எம்.வி.ஏ. திறன் கொண்ட இரண்டு மின்மாற்றிகளுடனும், 110/33 கிலோ வோல்ட் திறன் கொண்ட, புதிய* Indoor Substation *அமைப்பதற்கு, 16 எம்.வி.ஏ. திறன் கொண்ட இரண்டு மின்மாற்றிகளுடன் 110/11 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைப்பதற்கும் திட்டமிடப்பட்டு,*

வேளச்சேரி Bye-pass Road-ல் உள்ள Classic Mall என்ற இடத்தில் சுமார் 24 சென்ட் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட இடத்தில் 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துணை மின் நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான மதிப்பீடுகளெல்லாம் தயாரிக்கப்பட்டுள்ளது. நிருவாக அனுமதி பெற்றவுடன், இந்த ஆண்டிலேயே துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

அதோடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மற்றொன்றையும் இங்கே கேட்டிருக்கிறார். வேளச்சேரி தவிர சென்னைப் பெருநகரில் வேறு துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு வேண்டிய திட்டங்கள் ஏதாவது இருக்கிறதா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். வேளச்சேரியில் மட்டுமல்ல; சென்னைப் பெருநகரிலே வளர்ந்துவரும் மின் தேவையைக் கருத்தில் கொண்டு, மொத்தம் 41 புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டு, திட்டமிடப்பட்டு, அந்தப் பணிகள் தொடங்கப்படவிருக்கின்றன. ஓரிரு பணிகள் முடிவுற்று இருக்கின்றன. சில பணிகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. சில பணிகளுக்கு வேண்டிய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு தொடங்கப்படவிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, 400 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையங்கள் 2-ம், 230 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையங்கள் 8-ம், 110 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையங்கள் 7-ம், 31 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையங்கள் 24-ம், ஆக 41 துணை மின் நிலையங்கள் சென்னைப் பெருநகரிலே அமைக்கப்படவிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எந்தெந்த இடங்கள் என்று சொன்னால், அந்த 41 துணை மின் நிலையத்திற்கும் பட்டியல் கொடுக்கலாம், அதற்கு நேரம் ஆகும். உதாரணத்திற்கு கிண்டியில் 400/230 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்க ரூபாய் 256.52 கோடி மதிப்பீட்டில் அனுமதி பெறப்பட்டு, 2014-2015 ஆம் ஆண்டில் பணிகள் தொடங்கவிருக்கின்றன. அதேபோல் கிண்டியிலும் ரூபாய் 424.55 கோடி மதிப்பீட்டில் 230/110 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்கின்ற பணிகள் நடைபெறவிருக்கிறது. கொரட்டூரில் 400/230 கிலோ வோல்ட் திறன்கொண்ட புதிய துணை மின் நிலையம் அமைக்கின்ற பணி 511.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவிருக்கிறது. இதுபோன்று சென்னைப் பெருநகரில் மொத்தம் ஏறத்தாழ 2,963.34 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 41 துணை மின் நிலையங்கள் இந்த ஆண்டிலும், 2014-2015 ஆம் ஆண்டிலும் தொடங்கப்படவிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பணிகள் முடிவடைந்ததற்குப் பின்பு சென்னைப் பெருநகரிலே மின்தடை என்ற பிரச்சினை எழாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உற்பத்தியைப் பெருக்குகின்ற அதேநேரத்தில்—— உற்பத்தியைப் பெருக்கிவிட்டால் மட்டும் போதாது, அதை விநியோகிப்பதற்கும், முறையான கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக ஒரே நேரத்தில் உற்பத்தியைப் பெருக்குகின்றபொழுது, அதற்கேற்ப கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துகின்ற பணிகளையும் இப்பொழுது ஒருசேர தொடங்கி செய்து வருவதால், இந்த மின்சாரப் பிரச்சினைகள், அதாவது மின் தடை, மின் பற்றாக்குறை போன்ற பிரச்சினைகள் எழாத அளவிற்கு முன்கூட்டியே தற்காலத்திற்கு மட்டுமல்ல வருங்காலத்திற்கும் தொலைநோக்குப் பார்வையோடு திட்டங்களைத் தீட்டி, இன்றைக்குத் தமிழகத்திலே செயலாற்றி வருகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, தமிழகத்திலே இனிமேல் வருங்காலத்தில் மின்சாரப் பிரச்சினை இருக்காது என்ற அளவிற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக் அவர்கள்.

**திரு. எம்.கே. அசோக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் 2,000 கோடி ரூபாய்க்கு மேல் மின் திட்டங்களை அறிவித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைக் கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

[2014 பிப்ரவரி 20

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு திருத்தம். 2,000 கோடி ரூபாய் அல்ல, 2,963.34 கோடி ரூபாய். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 2,000 கோடி ரூபாய் என்று சொன்னது 2,963.34 கோடி ரூபாய் என்று திருத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

**திரு. ஆ. நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஒன்றியம், இலாங்குளம் ஊராட்சி, தொரப்பாடியில் 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எந்தவொரு பணிகளும் தொடங்கப்படவில்லை. இத்திட்டம் செயல்பட்டால் 70 கிராமங்கள் பயன்பெறும். இத்திட்டத்தை விரைவாகச் செயல்படுத்த ஆவன செய்ய வேண்டுமெனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல அந்தப் பணிக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தால், அந்தப் பணிகளை விரைந்து முடிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. முருகேசன் அவர்கள்.

முற்பகல் 10-10

**திரு. து. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு தொகுதியில் வளர்ந்து வரும் ஊரப்பாக்கம் ஊராட்சியில் சுமார் 25,000 மக்கள் வசிக்கின்றார்கள். அந்தப் பகுதியில் குறைந்த மின்னழுத்தத்தின் காரணமாக அந்தப் பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். ஏற்கெனவே, சட்டமன்றத்தில் கேள்வி நேரத்தின்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று சொன்னார்கள். அந்தத் துணை மின் நிலையம் அமைப்பதற்கான இடமும் இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துணை மின் நிலையம் அமைத்துக் கொடுக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2014 பிப்ரவரி 20]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட பகுதி மட்டுமல்ல, எங்கெங்கு தேவை இருக்கிறதோ, தேவைகளுக்கேற்ப ஆய்வுகளை மேற்கொண்டு, தேவை ஏற்படின் புதிய துணை மின் நிலையங்கள், புதிய மின்மாற்றிகள் அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தவகையில், இப்போதுகூட சொன்னேன், சென்னைப் பெருநகரில் 41 துணை மின் நிலையங்கள் அமைக்க ஏறத்தாழ ரூபாய் 3,000 கோடி அளவில் பணிகள் நடைபெற இருக்கின்றன என்று. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட பகுதியில் மட்டுமல்ல, மாநிலம் முழுவதும் எந்தெந்த இடங்களில் மின் பளு அதிகரித்திருக்கிறது, தேவை அதிகரித்திருக்கிறது என்றெல்லாம் ஆய்வு செய்து, அந்த ஆய்வின் அடிப்படையில் தேவைக்கேற்ப, முன்னுரிமைக்கேற்ப, நிதிநிலைக்கேற்ப அந்தப் பணிகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தவகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியிலும் தேவை ஏற்படின் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, மின் பளு பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட கடையாலுமூடு பேரூராட்சியில் வலியஏலா என்ற பகுதி ஏற்கெனவே ரெவன்யூ நிலமாக பல ஆண்டுகளுக்கு முன்பு இருந்து, பின்னர் அது வனப் பகுதியாக ஆக்கப்பட்டது. ஆனால், மக்கள் கிட்டத்தட்ட 142 வீடுகளில் 80 ஆண்டுகாலமாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு மின் இணைப்பு இதுவரை

[2014 பிப்ரவரி 20

வழங்கப்படவில்லை. கடந்த ஆட்சிக் காலத்தில் அங்கு 25 நபர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டு தற்போது பயன்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து, மீதமுள்ள நபர்களும் மின் இணைப்புக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இடையில் மின்சாரத் துறைமூலம் கம்பங்களை நட்டார்கள்; ஆனால், அதற்கிடையில் வனத் துறை ஏதோ பிரச்சினை செய்ததால், அந்தப் பணி நிறுத்தப்பட்டுவிட்டது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். தற்போது மக்களின் அத்தியாவசியத் தேவைகளின் அடிப்படையில், சட்டமும் அதற்கு உறுதுணையாக இருக்கிறது. இதுபோன்று மின் இணைப்புத் தரலாம் என்ற விதியும் இருக்கிறது. அந்தவகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலித்து, அங்கு மின் இணைப்பை வழங்க வேண்டும். பேரூராட்சி பட்டாவிற்குத் தீர்மானம் போட்டு மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி பட்டாவிற்குப் பரிந்துரை செய்திருக்கிறது. ஆகையால், அவசர முக்கியத்துவம் கருதி வனத் துறையிடம் அனுமதி பெற்று உடனடியாக மின் இணைப்பை செய்து தருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் பொதுப்படையாக மின் இணைப்பில் இருக்கின்ற பிரச்சினைகளைச் சொல்கிறேன். வீடு மற்றும் தனியார் பயன்படுத்துகின்ற மின் இணைப்பைப் பெறுவதற்கு அந்த நில உரிமையாளர் சான்றிதழ் வழங்க வேண்டும். சில இடங்களிலே, கோயிலுக்குச் சொந்தமான இடங்களில் சமீபத்தில் ஒரு பிரச்சினை வந்ததாகச் சொன்னார்கள். அந்த நிலத்தினுடைய உரிமையாளர் மறுப்பு தெரிவித்ததால், அந்த இடங்களிலே மின் இணைப்பு வழங்கப்படவில்லை. ஏனென்று சொன்னால் அந்த நிலத்தின் உரிமையாளர்கள் தடையில்லா சான்றிதழ் அளிக்க வேண்டும். அரசு புறம்போக்கு இடங்களாக இருந்தால் அந்த நிலத்தில் ஆட்சேபனை இல்லை என்று தாசில்தார் சான்றிதழ் அளிக்க வேண்டும். தனியார் இடமாக இருந்தால் அந்தத் தனியார் நில ஆதாரங்களுடன் தடையில்லா சான்றிதழ் அளிக்க வேண்டும். அந்தவகையிலே சில இடங்களில்



2014 பிப்ரவரி 20]

அரசு புறம்போக்கு இடங்களில், ஹைவேஸ், கோயிலுக்குச் சம்பந்தப்பட்ட நிலங்களை ஆக்கிரமிப்பு செய்துள்ள இடங்களில் சம்பந்தப்பட்ட துறை தடையில்லா சான்றிதழ் வழங்காததன் காரணமாக மின் இணைப்பு வழங்க இயலவில்லை, சம்பந்தப்பட்ட துறைகள் தடையில்லா சான்றிதழ் கொடுக்கும்பட்சத்தில், தமிழ்நாடு மின்சார வாரியம் மின் இணைப்புக் கொடுப்பதற்கு எந்தத் தடையும் கிடையாது.

இப்படிப்பட்ட பொதுப் பிரச்சினைகளைத் தவிர மற்ற எல்லா இடங்களிலும் மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது, வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள விளவங்கோடு பகுதியிலே, அவரே சொல்கிறார் வனத் துறையின் அனுமதி கிடைக்காததால் அந்தப் பகுதியிலே வழங்கமுடியவில்லை என்று சொல்கிறார். வனத் துறை, மத்திய அரசு உங்கள் கட்சியின் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது, வனத் துறையின் அனுமதி பெறுவதற்கு மத்திய அரசின் சட்டம்தான் தடையாகவும் இருக்கிறது. ஆகவே, மக்களுடைய அத்தியாவசியத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு வனத் துறையில் நடைமுறையில் இருக்கின்ற சட்டங்களைத் திருத்தி மக்கள் பயன்பாட்டிற்கு வருகின்ற அளவிற்கு மின் இணைப்பை தடைசெய்யக்கூடாது என்ற பொது விதியை எளிமைப்படுத்த வேண்டும். இது உங்கள் மத்திய அரசின் கையில்தான் இருக்கிறது. சில மலைப்பகுதி கிராமங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படாமைக்குக் காரணம் வனத் துறை அதற்கு அனுமதி அளிக்காததுதான். அதற்கு மின்சார வாரியமோ, தமிழ்நாடு அரசோ காரணம் இல்லை. ஆகவேதான், மத்திய வனத் துறையின் அனுமதியைப் பெறுவதற்கான தொடர் முயற்சிகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுத்து வருகிறது, அதற்கு நீங்களும் ஒத்துழைப்பு கொடுத்து, வனத் துறையின் அனுமதியைப் பெற்றுத் தருவீர்களானால், நிச்சயமாக அந்தப் பகுதிக்கு மின் இணைப்பு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 86, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

[2014 பிப்ரவரி 20

**86—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***19676—திரு. வெ. பொன்னுப்பாண்டி:**

*மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, திருவண்ணாமலை ஊராட்சி, ஜீவா நகரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

*(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியம், திருவண்ணாமலை ஊராட்சி, ஜீவா நகரில் ஆழ்துளைக் கிணற்றுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் மற்றும் 10,000 லிட்டர் கொள்ளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணிகள் ரூ.9,98,000 மதிப்பீட்டில் 2013-2014 ஆம் ஆண்டில் செயல்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.*

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்கள் மட்டும் அல்ல, உலக மக்கள் அனைவரும் வியக்கின்ற அளவிற்கு, நீண்டகாலம் சிறையில் இருந்த முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி உட்பட ஏழு பேரையும் விடுதலை செய்திட ஏதுவாக நேற்றையதினம் வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கையை மேற்கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*



2014 பிப்ரவரி 20]

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, திருவண்ணாமலை சிற்றூராட்சி, ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியை ஒட்டிய பகுதியாகும். இந்த சிற்றூராட்சியில் தொடர்ந்து குடிநீர்ப் பிரச்சினை இருந்து வருகின்றது. நான் இங்கே குறிப்பிட்டுள்ள ஜீவா நகரும் இந்தப் பகுதியில்தான் அமைந்துள்ளது. இங்கு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற்கு இதுவரை வராமல் உள்ளது. எனவே, குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்கின்ற அளவில் அதனுடைய அவசியத்தை உணர்ந்து ஜீவா நகர் பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றிட, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013-2014 ஆம் நிதியாண்டில், ரூ.9,98,000 முதலீடு செய்து 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு, தனி மின்விசை பம்பு போடப்பட்டு, நீரேற்றப்பட்டு பயன்பாட்டிற்கு வந்திருக்கின்றது என்பதை மீண்டும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.*

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியம் குடிநீர்ப் பிரச்சினைகளால் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றது. நமது மாநில அரசும் சரி, மாவட்ட நிருவாகமும் சரி, குடிநீர்ப் பிரச்சினைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையில் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வருவது*

[2014 பிப்ரவரி 20

*மிகவும் பாராட்டத்தக்க விஷயம். ஆனால், தற்போதுள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றிய நிருவாகம் கடந்த உள்ளாட்சித் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க-வினுடைய அதிகாரபூர்வ வேட்பாளரை எதிர்த்து போட்டியிட்டு வெற்றி பெற்ற நிருவாகமாக இருக்கின்றது. அந்த நிருவாகம், திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் புதிய தமிழகம் ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர்களின் ஆதரவோடு செயல்படுகின்ற காரணத்தினால், கடந்த இரண்டரை ஆண்டுகளில் ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து வேறு எந்தப் பணிகளையும் மேற்கொள்ளாமல் 'சின்டெக்ஸ் டேங்க்' மட்டும் அமைத்து குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றதுபோல ஒரு தோற்றத்தை உருவாக்கி வருகின்றது. கிராமந்தோறும் விளம்பரப் பலகை அமைப்பதைப்போல தண்ணீர் இல்லாத இடங்களில் 'சின்டெக்ஸ் டேங்குகள்' வைத்து நடவடிக்கை மேற்கொள்வதால் கிராமங்களில் உள்ள மக்கள் முகம் சுளிக்கின்ற நிலை ஏற்பட்டு வருகின்றது. எனவே, ஸ்ரீவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்பட்டிருக்கின்ற இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைக்கின்ற கோரிக்கைக்கு முன்பாகவே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்று 6 மாத காலத்திற்குள்ளாக விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம், சிவகாசி ஆகிய தொகுதிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான பணி ஆணை 29-12-2011-ல் வழங்கப்பட்டது. எவ்வளவு விரைவாக பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதற்காக நான் இதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். 29-12-2011-ல் பணி ஆணை வழங்கப்பட்டு, 18-1-2012-ல் பணிகள் துவக்கப்பட்டிருக்கின்றன. 173 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த மூன்று தொகுதிகளிலும், அதிலும் குறிப்பாக ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதிக்குட்பட்ட 3 ஊராட்சிகளுக்கும், 7 பேரூராட்சிகளுக்கும், 3 ஊராட்சி*



2014 பிப்ரவரி 20]

*ஒன்றியங்களுக்கும் உட்பட்ட 395 ஊரகக் குடியிருப்புகளுக்கு தண்ணீர் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, பணிகள் முடிவடைகின்ற தருவாயில் இருக்கின்றன. இந்த மார்ச் மாதம் முடிகின்ற நிலையில் பணிகள் முழுவதுமாக முடிக்கப்படும். பணிகள் முடிக்கப்பட்ட பின்பு, அந்த பைப் லைன்களையெல்லாம் சீர் செய்வதற்காக தண்ணீர் விட்டு ஆறு மாத காலம் அந்தப் பகுதியிலே தூய்மையான தண்ணீர் வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, முறையாகத் தண்ணீர் வருவதற்கு நடவடிக்கை எடுத்து, செப்டம்பர் மாதத்திற்குள் உங்களுக்கு தண்ணீர் கிடைப்பதற்குரிய சூழ்நிலையை உருவாக்குவோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.*

**திரு. அ. பாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி தொகுதி, தடங்கம் ஊராட்சி, அவ்வை நகர் அலுவலகக் குடியிருப்பு பழைய குவார்ட்டர்ஸில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும். ஏனென்றால் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினருடைய தருமபுரி தொகுதிக்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒகேனக்கல் குடிநீர் திட்டத்தின் வாயிலாக நிறைவான காவேரி ஆற்றின் தண்ணீரைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதிக்கும் அந்தத் தண்ணீர் வரும் என்று கருதுகிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் வைத்திருக்கின்ற கோரிக்கையை பரிசீலனை செய்து, அங்கு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி தேவைப்படுகின்றபட்சத்தில், நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, அங்கே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு, தண்ணீர் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2014 பிப்ரவரி 20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல தருமபுரி மாவட்டம் முழுவதும் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமலாக்கப்பட்டு இன்றைக்கு மக்கள் பயன்பாட்டிற்கு வந்து, தண்ணீரைக் குடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே கட்டப்பட்டிருக்கின்ற பெரும்பாலான நீர்த்தேக்கத் தொட்டிகளில் போதிய அளவிற்கு ஒகேனக்கல் தண்ணீரைத் தேக்கி வைத்துக்கொள்ள முடியாததனால், புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? அதேபோல், நல்லம்பள்ளி ஒன்றியத்தில் உள்ள எர்ரப்பட்டி கிராமத்தில் 370 வீடுகள் உள்ளன. அந்தக் கிராமத்திற்காகக் கட்டப்பட்டிருக்கக்கூடிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, மாவட்டத் தொழில் மையத்திற்கும், சிட்கோவிற்கும் முழுமையாகப் பயன்படுத்தப்படுகிறது. இதுவரை அந்தக் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியே இல்லை. நடுநிலைப் பள்ளிக்கூடத்திலிருந்து மக்கள் தண்ணீரைக் குடித்துக் கொண்டிருக்கிறார்கள். இதுவரை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இல்லாத எர்ரப்பட்டி கிராமத்திற்கு புதியதாக 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு தொட்டியைக் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் மாண்புமிகு உறுப்பினர் பாஸ்கர் அவர்கள் சொன்ன பகுதிகுறித்துதான் அனேகமாக நீங்களும் கேட்கிறீர்கள் என்று கருதுகிறேன். அதை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும். அதோடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல ஒரு வினாவை எழுப்பியிருக்கிறார்கள். ஏற்கெனவே கொண்டுவரப்பட்ட திட்டத்தின் வாயிலாக, ஏற்கெனவே இருக்கின்ற மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளினுடைய கொள்ளளவுகளை ஆய்வு செய்து, அந்த ஆய்வின் அடிப்படையில் அந்தப் பகுதிக்குத் தேவையான தண்ணீரைக் கொடுப்பதோடு மட்டுமல்லாமல், மற்ற பகுதிகளுக்கும் தண்ணீர் கொடுக்க வேண்டிய கட்டாயத்தால், இந்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டிருக்கின்றன. அதனடிப்படையில் மாண்புமிகு உறுப்பினருடைய சந்தேகத்தையும் ஆய்வு செய்து, அவ்வாறு அங்கு தண்ணீரின் கொள்ளளவு போதவில்லை என்றால், நிச்சயமாக கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு, தண்ணீர் விநியோகிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2014 பிப்ரவரி 20]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல் துறை கண்காணிப்பாளர்கள் மாநாட்டின்போது, திருத்துறைப்பூண்டி தொகுதியில் நிலத்தடி நீரைப் பாதுகாக்கின்ற வகையில், ஏரிகளைத் தூர் வாருகின்ற வகையில், என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய மங்கலூர், வீரன்வயல், மேலப்பெருமலை, கருப்புகிளார் ஆகிய ஏரிகளைத் தூர் வாரவும், புதிதாக ஓவரேரியில் ஏரி அமைப்பதற்கும், திருத்துறைப்பூண்டி நகரத்தில் இருக்கக்கூடிய செங்கமலத்தாயார் குளத்தைத் தூர் வாருவதற்கும் ஆணையிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு என் சார்பிலும், என் தொகுதி மக்களின் சார்பிலும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-25*

அதுபோல, திருத்துறைப்பூண்டி தொகுதி முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் தொண்டியக்காடு ஊராட்சிக்கு உட்பட்ட தொண்டியக்காடு, மேலதொண்டியக்காடு, மேலக்காடு ஆகிய கிராமங்களுக்குக் கொள்ளிடம்-வேதாரண்யம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம் எடையூர் 'சம்ப்'-லிருந்து தண்ணீர் ஏற்றப்படுகிறது. இது விளாங்காடு, கரையாங்காடு, கற்பகநாதர்குளம் ஆகிய ஊராட்சிகளைச் சென்றடைந்து செல்கிற நேரத்தில் தொண்டியக்காடு பகுதிக்குத் தண்ணீர் போதிய அளவில் வராத நிலை இருக்கிறது. அதிலும் மேலதொண்டியக்காடு, மேலக்காடு ஆகிய கிராமங்களுக்கு முழுமையாகச் செல்லாத நிலை

[2014 பிப்ரவரி 20

ஏற்பட்டுள்ளது. ஆகவே அப்பகுதி மக்கள் பல்வேறு இயக்கங்கள் மூலம் போராட்டங்கள் நடத்தியபோது, குடிநீர் வடிகால் வாரிய அதிகாரியைச் சந்தித்து, அதற்காக எத்தகைய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று கேட்கிறபோது, விளாங்காடு, ஜாம்புவானோடை, இடும்பாவனம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், துணை வினாவினைக் கேளுங்கள்.

**திரு. கே. உலகநாதன்:** இடும்பாவனம் வழியாக மேலக்காடு வழியாக அங்கே தண்ணீர் கொண்டு சென்றால், 4 கிலோ மீட்டர் தூரமும் குறையும். ஆகவே அதற்கான ஏற்பாட்டைச் செய்யலாம் என்று சொன்னார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கான நிதியினை வழங்கி, அந்தப் பணியைச் செய்வதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைக்கின்ற கோரிக்கை ஆய்வு செய்யப்படும். ஏனென்று சொன்னால், கடைமடைப் பகுதிகளுக்கு, விவசாயத்திற்குத் தண்ணீர் எவ்வாறு செல்ல முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறதோ, அதைப்போல, குடிதண்ணீரும் சில சூழ்நிலைகளின் காரணமாக, அந்தப் 'பிரஷர்' குறைகின்றபோது, அந்தப் பகுதிகளுக்குத் தண்ணீர் செல்வதில்லை. அதை ஆய்வு செய்து, வேறு இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி, அங்கிருந்து விசைப் பம்புகள் மூலம் தண்ணீர் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி செய்வோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட முட்டம் ஊராட்சியில் தண்ணீர் பற்றாக்குறை இருக்கிறது. இதுவரை அந்தப்



2014 பிப்ரவரி 20]

பகுதிக்கு குழித்துறை கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலமாகத்தான் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. வாரத்திற்கு இரண்டு முறைதான் தண்ணீரைச் சேமித்து வைக்கமுடியும். அந்தப் பகுதியிலே அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்தவேண்டும். அதுமட்டுமல்ல, அந்தப் பகுதியில் தண்ணீரைச் சேமித்து வைப்பதற்கு 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக்கொடுத்தால் நன்றாக இருக்கும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்று வருகின்றபோது, ஏற்கெனவே விரிவான திட்டம் தயாரிக்கப்பட்டு, எவ்வளவு எம்.எல்.டி. தண்ணீர் எடுக்கப்படுகிறது, அந்தளவு தண்ணீர் எங்கெங்கெல்லாம் குழாயின் வாயிலாக அனுப்பப்படுகிறது என்பதை ஆய்வு செய்து, அதற்கேற்றவாறு பைப்புகளை அமைத்து தண்ணீரை வழங்கிக்கொண்டிருக்கிறோம். அதற்கு எத்தனை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் தேவைப்படுகின்றன என்பதையும், ஏற்கெனவே முடிவு செய்து அந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும் கட்டப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே நடைமுறையில் உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் புதியதாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கோரியிருக்கிறார். ஆய்வு செய்து, அவ்வாறு தேவைப்படுகின்ற பட்சத்தில் அங்கே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள

[2014 பிப்ரவரி 20

பாலமலை ஊராட்சியில் சுமார் 33 குக்கிராமங்களில் மலைவாழ் மக்கள் வசித்து வருகிறார்கள். அந்த மக்கள் 50 ஆண்டு காலமாக குடிநீர் வேண்டி பல்வேறு காலகட்டங்களில் போராடி வருகிறார்கள். தற்போது பாலமலைக்கு மண் சாலை அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அந்த மலையில் வாழ்கிற 7,000 மலைவாழ் மக்களின் குடிநீர்த் தேவையைக் கருத்தில்கொண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுத்தால் மிகச் சிறப்பாக இருக்கும். அந்த வகையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்த மலைவாழ் மக்களுக்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசால் சாலை வசதி செய்யப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் கூறியிருக்கிறார்கள். தொடர்ந்து அந்தப் பகுதி மக்களுக்காக உடனடியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு குடிதண்ணீரும் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 14-வது சட்டமன்றப் பேரவையில் வினாக்கள்-விடைகள் நேரத்தில், மூல வினா, குறுகிய கால வினா, துணை வினா உட்பட 4,000-வது வினாவினைக் கேட்கும் வாய்ப்பைப் பெற்ற மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா திரு. ஆர். மனோகரன் அவர்கள்.

முற்பகல் 10-30

**திரு. ஆர். மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வாரம் திருச்சி மாநகர மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக, 220 கோடி ரூபாய் செலவிலே கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை ஏற்பாடு



2014 பிப்ரவரி 20]

செய்து, காணொளிக் காட்சிமூலம் திறந்து வைத்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டம் தொடங்கியதற்கு பின்னாலே, புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு, அதாவது 61-வது முதல் 65-வது வரையுள்ள வார்டுகளுக்கு இதுபோன்ற பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே திருச்சி மாநகராட்சிக்கு உட்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் குடிதண்ணீர் வழங்க வேண்டுமென்பதற்காகத்தான் அந்தத் திட்டத்தைத் தயார்செய்து, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆணையின்பேரில், விரைவாகச் செயல்படுத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலனை செய்து, இந்தத் திட்டத்தின் வாயிலாகவே அந்தப் பகுதிகளுக்கு குடிதண்ணீர் வழங்கப்படக்கூடிய ஒரு சூழ்நிலை வருகின்றபட்சத்தில், அதை உடனடியாக நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவ்வாறு அந்தப் பகுதிகளுக்கு இந்தக் குடிதண்ணீர் செல்வதற்குரிய தண்ணீர் குறைவாக வருகின்றபட்சத்தில், அது ஒரு புதிய திட்டமாக உருவாக்கப்பட்டு, அந்தத் திட்டத்தின் வாயிலாக அந்தப் பகுதிவாழ் மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 87, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

[2014 பிப்ரவரி 20

**87—**

## அங்கன்வாடி மையக் கட்டடம்

***35135—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவில் பேரூராட்சி, காந்தியார் தெருவில் உள்ள அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, காட்டுமன்னார்கோவில் பேரூராட்சி, காந்தியார் தெருவில் உள்ள அங்கன்வாடி மையத்திற்குப் புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, இந்த மையம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாளான, வருகிற 24-2-2014 அன்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களாலேயே திறக்கப்படவுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

**திரு. என். முருகுமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றில் குப்தர்களின் காலம் பொற்காலம். தமிழகத்தில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலம் பொற்காலம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆளப் போகின்ற காலம் பொற்காலம். (மேசையைத் தட்டும் ஒலி) உலகத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தியாவை ஆளப் போகின்ற காலம் பொற்காலம் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) வருகின்ற 24-2-2014 அன்று 66-வது பிறந்த நாள் காணும் கழக வாழ்நாள் பொதுச் செயலாளர்,



2014 பிப்ரவரி 20]

மாட்சிமை தங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய திருவடிகளைப் பணிந்து வணங்குகிறேன்.

தந்தை பெரியார் பிறந்தார், நம்மை நமக்குக் காட்டினார்; பேரறிஞர் அண்ணா பிறந்தார், உலகத்தை நமக்குக் காட்டினார்; புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பிறந்தார், தமிழகத்தை உலகத்திற்குக் காட்டினார்; இந்த மூவரின் ஒத்த உருவாக மாண்புமிகு அம்மா அவர்கள் பிறந்தார்கள், தமிழ் இனத்தையே உலகிற்குக் காட்டினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, இன்று செயின்ட் ஜார்ஜ் கோட்டையை ஆளுகின்ற நீங்கள்; நாளை செங்கோட்டையை ஆளப் போகின்றீர்கள் என உரக்கச் சொல்லி; (மேசையைத் தட்டும் ஒலி) மல்லிகைப் பந்தலின்கீழ் மன்னர்கள் வருவார்கள் என்ற நிலை மாறி; ஆழிப் பேரலை அடித்தபோதும்; தானே புயல் வீசியபோதும்; வெயிலிலும், மழையிலும்; கோடையிலும், வாடையிலும் தமிழ்ச் சமுதாயத்தை கைம்மாறு கருதாமல் தாங்குகின்ற தாயே! நீங்கள்தான் எங்களுக்கு ஏணி!. நீங்கள்தான் எங்களுக்குத் தோணி. தங்களுக்குச் செய்நன்றி மறவாது செஞ்சோற்றுக் கடன் தீர்க்க; எங்கள் அனைவரின் ஒட்டுமொத்த ஆயுட்காலமும் உங்களுடையதாக ஆக்குகின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி மணலினும் பல நூற்றாண்டுக் காலம் நீங்கள் நோய் இன்றி வாழ்ந்து வரலாறு படைத்திட, இந்தியத் திருநாட்டை நாளை முடிசூடி ஆண்டிட எல்லாம்வல்ல தில்லை நடராசன் திருவடிகளை வணங்குகிறேன்.

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவில் பேரூராட்சியில், காந்தியார் தெருவில், புதிய அங்கன்வாடி கட்டடத்தைக் கட்டி முடித்து, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பிறந்த பொன்னாளில் திறக்கப்படும் என்று அறிவித்த, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய சார்பாகவும், தொகுதி மக்களுடைய சார்பாகவும் நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவில் பேரூராட்சி, கோட்டைமேட்டில், ஆர்.சி. தெருவில் உள்ள மாதா கோவில் அங்கன்வாடி மையத்திற்கு சமூக நலத் துறையின்மூலம் புதிய கட்டடம் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2014 பிப்ரவரி 20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவு திட்ட அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவைப் பெற்று, அங்கன்வாடி மையம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

**திரு. என். முருகுமாறன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அம்மா இல்லாமல் தமிழகம் இல்லை; நாளை அம்மா இல்லாமல் பாரதம் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைய தமிழகத்தின் வேத மந்திரம், நாளைய பாரதத்தின் இராஜதந்திரம் அம்மா, அம்மா, அம்மா; இனி தமிழகத்தில் மற்றவர்களெல்லாம் சும்மா, சும்மா எனச் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*அங்கன்வாடி மையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுத்து, பரிசீலனை செய்யப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.*

**செல்வி கே. பாலபாரதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கன்வாடிகளில், சத்துணவு மையங்களில் பணி புரியக்கூடிய சத்துணவு அமைப்பாளர்கள், ஊழியர்கள் ஆகியோர் ஆசிரியர் பயிற்சி முடித்திருந்தால், அவர்களுக்குச் சிறப்புத் தேர்வு வைத்து, அவர்களுக்கு ஆசிரியர் பணி கடந்த காலங்களில் வழங்கப்பட்டு வந்தது. அதேபோன்று, அரசு ஊழியர்களுக்கான தனித் தேர்வும் வைக்கப்பட்டு, அதற்கான வாய்ப்புகளும் வழங்கப்பட்டிருந்தன. அத்தகைய சலுகையும், வாய்ப்பும் தற்போது நடைமுறையில் இருக்கிறதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*



2014 பிப்ரவரி 20]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதிவாய்ந்த சத்துணவுப் பணியாளர்கள் மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்கள் உரிய கல்வித் தகுதி பெற்றிருப்பின், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக, இதுவரை மூன்று முறை சிறப்புத் தேர்வு நடத்தி, இதுவரை 800 பணியாளர்களுக்கு ஆசிரியர் பதவி அளிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னவாறு, ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம் தகுதியானவர்களைத் தேர்வு செய்து, அவர்களுக்குப் பதவி உயர்வு அளித்து ஆசிரியர் பணியிலே நியமிக்கப்படுவது நடைமுறையில் இருந்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 88, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**88—**

## தொழிற்பயிற்சி நிலையம்

***24006—திரு. டி.ஆர்.பி. ராஜா:**

*மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி நகர் பகுதியில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி நகர் பகுதியில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் அவசியம் எழவில்லை.*

[2014 பிப்ரவரி 20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா இருக்கையில் இல்லை.*

*வினா வரிசை எண் 89, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**89—**

**பயணியர் மாளிகை**

*__8606—திருமதி ர. சுபா:__

*மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கெங்கவல்லி தொகுதி, கெங்கவல்லியில் பயணியர் மாளிகை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*சேலம் மாவட்டம், கெங்கவல்லி தொகுதி, கெங்கவல்லியில் பயணியர் மாளிகை கட்டுவதற்கு தற்சமயம் சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.*

**திருமதி ர. சுபா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெங்கவல்லி தொகுதியானது தாலுகா தலைமையிடமாகும். எனவே, இங்கு புதிய பயணியர் மாளிகையை நெடுஞ்சாலைத் துறையின்மூலம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம், நெடுஞ்சாலைத் துறை கோட்டத்தில், ஆத்தூரில் பயணியர் மாளிகை அமைந்துள்ளது. ஆத்தூருக்கும், கெங்கவல்லிக்கும் இடையில் உள்ள தூரம் 12 கிலோ மீட்டர் என்பதால், கெங்கவல்லியில் பயணியர் மாளிகை கட்ட தற்சமயம் சாத்தியக் கூறுகள் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



2014 பிப்ரவரி 20]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.*

**திருமதி ர. சுபா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கெங்கவல்லி தொகுதியில், பச்சமலை ஊராட்சியில் அதிக அளவில் சுற்றுலா பயணிகள் மற்றும் அரசு அதிகாரிகள் அடிக்கடி மக்கள் குறை கேட்பதற்காக வந்து செல்கிறார்கள். அவர்கள் அங்கு வந்து செல்வதற்கே அரை நாள் ஆகிவிடுகிறது. அதனால் மக்களிடம் முழுமையாகக் குறைகளைக் கேட்கமுடியாமல் போய்விடுகிறது. எனவே, அங்கு தங்கள் துறையின்மூலம் புதிய பயணியர் மாளிகை அமைத்துத் தர வேண்டுமென்பது அப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாகும்.*

*அதேபோல, தலைவாசல் பஸ் நிலையம் எதிர்புறம், தங்கள் துறையின்கீழ் உள்ள பழுதடைந்த பயணியர் மாளிகையைச் சீரமைத்து, அதைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூருக்கும், கெங்கவல்லிக்கும் இடையே உள்ள தூரம் 12 கிலோ மீட்டர். ஆத்தூரில் ஏற்கெனவே பயணியர் மாளிகை இருக்கின்றது, தங்கும் விடுதியும் இருக்கின்றது. ஆகவே, அங்கு ஆய்வு மேற்கொள்ள வருகின்ற நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் அங்கேயே தங்கிக் கொள்ளலாம். அங்கு பயன்பாட்டைப் பொறுத்துத்தான் பயணியர் மாளிகை கட்டப்பட்டு வருகிறது. ஆகவே, அருகில் உள்ள ஆத்தூரிலேயே, அவர்கள் தங்குவதற்கு வசதி வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.*

*தலைவாசலில் பழைய கட்டடம் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். வருகின்ற*

[2014 பிப்ரவரி 20

*2014-2015 ஆம் நிதியாண்டில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு புதிதாக கட்டடம் கட்டுவது பரிசீலனையில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 90, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**90—**

**கால்நடை மருத்துவமனை**

***34480—திரு. இரா. இராஜேந்திரன்:**

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*குறிஞ்சிப்பாடி தொகுதி, வெள்ளக்கரை ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற வெள்ளக்கரை ஊராட்சியில் கால்நடைத் துறை விதிகளிலே குறிப்பிட்டிருக்கின்ற அளவுக்கு கால்நடைகளின் எண்ணிக்கை இல்லாத காரணத்தால், அங்கே கால்நடைக் கிளை நிலையம் அமைக்க வாய்ப்பு இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.*

**திரு. இரா. இராஜேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆன்மிகச் செம்மல்களிலே திலகவதியார், காரைக்கால் அம்மையார் போன்றவர்களாகவும், அன்பிலே அன்னை தெரசாவாகவும், வீரத்திலே வீரமங்கை வேலு நாச்சியாராகவும் மாண்புமிகு அம்மா அவர்கள் திகழ்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இவர்களின் மொத்த உருவமாக தாயே, தாங்கள் இருப்பதால்தான் தானமும், தருமமும், தளராத தாயன்பும்*



2014 பிப்ரவரி 20]

*(மேசையைத் தட்டும் ஒலி) நிலைத்து நிற்கிறது. இதனை உலகுக்கு உணர்த்தும் வகையில், நேற்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைமையில் அமைச்சரவை கூடி பேரறிவாளன், சாந்தன், முருகன், நளினி, ஜெயக்குமார், ரவிச்சந்திரன், ராபர்ட் பயஸ் ஆகியோரை விடுதலை செய்வது என எடுத்த முடிவை அறிவித்ததன்மூலம் தங்களை நாடும், நாட்டு மக்களும், நல்லவர்களும், நடுநிலையாளர்களும் போற்றுகிறார்கள், பாராட்டுகிறார்கள், நன்றி தெரிவிக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்நாளில் தமிழ்த் தாயின் காலடியை நன்றியோடு வணங்குகிறேன்.*

*குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வெள்ளக்கரை ஊராட்சி மிகப் பெரிய ஊராட்சியாகும். பக்கத்திலே இருக்கிற இராமாபுரம், வெள்ளக்கரை, கொடுக்கன்பாளையம் ஆகிய ஊராட்சிகள் அதிக மக்கள்தொகையை உள்ளடக்கி இருக்கிற பகுதியாகும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, அங்கே கால்நடை மருத்துவமனை அமைக்க ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற வெள்ளக்கரை ஊராட்சி மற்றும் அதன் அருகிலே இருக்கின்ற சில ஊராட்சிகளையும் இணைத்து, அங்கே விதிகளுக்குட்பட்டு கால்நடைகள் போதிய எண்ணிக்கையில் இருக்குமானால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அங்கு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.*

**திரு. இரா. இராஜேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடும், நாட்டு மக்களும் நலம் பெற, வளம் பெற,*

[2014 பிப்ரவரி 20

நாளும் உழைத்திடும் ஒப்பில்லா முதலமைச்சர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்குகிறேன். சூழ்நிலைக்கு ஏற்ப அந்தப் பகுதியை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, கால்நடை மருத்துவமனை அமைக்க பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிவித்திருக்கிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 91, மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**91—**

## சமுதாய நலக் கூடம்

***22077—திருமதி த. இந்திராகாந்தி:**

*மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) துறையூர் தொகுதி, கண்ணனூர் கிராமத்திலுள்ள ஆதி திராவிடர்களுக்கு சமுதாய நலக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) தமிழர்களின் உயிர் காத்து, உலகத் தமிழர்களிடத்தில் தமிழகத்தின் பெருமையை நிலைநாட்டிய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்வில் ஒளியேற்றிட நல்ல பல திட்டங்கள் உருவாக்கி, செயல்படுத்தி வருகிறார்கள் என்பதை உலகறியும். திருச்சி மாவட்டம், துறையூர் தொகுதி, கண்ணனூர் கிராமத்திலுள்ள ஆதி திராவிட மக்களுக்கு சமுதாயக் கூடம் கட்டுவதற்குத் தேவையான இடம் கண்டறியப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



2014 பிப்ரவரி 20]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.*

*முற்பகல் 10-45*

**திருமதி த. இந்திராகாந்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்ச வருவதும் இல்லை" என்ற அப்பர் பெருமானின் வாக்கிற்கிணங்க, அஞ்சாமை, அறிவு, துணிவு, ஈகை குணங்களோடு தமிழர்களின் உயிரைக் காக்கவும், உரிமையை மீட்கவும், தன்னை முழுமையாக அர்ப்பணித்து, தரணி போற்றும் தன்னலமில்லா தலைவியே! அமைதி, வளம், வளர்ச்சி என்ற இந்தியத் திருநாட்டை வழிநடத்தப் போகும் நாளைய பாரதமே! மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். எனது துறையூர் தொகுதிக்குட்பட்ட கடலூர் ஒன்றியம், கண்ணனூர் கிராமத்தில் சுமார் 1,600-க்கும் மேற்பட்ட ஏழையெளிய ஆதி திராவிட மக்கள் வசித்து வருகின்றனர். அவர்களுடைய சுப காரியங்கள் மற்றும் பொதுக் காரியங்களைச் செய்ய அவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அவர்களுடைய நீண்ட நாள் கோரிக்கை இது. இந்தக் கிராமத்தில் சர்வே எண் 691/8, காலி கிராம நத்தம் புறம்போக்கு நிலம் சுமார் 300 சதுரடியில் உள்ளது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையான கண்ணனூரில் சமுதாய நலக் கூடம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் குடியிருப்புகளிலுள்ள ஆதி*

*திராவிட மக்களின் திருமணங்கள், சமுதாய விழாக்கள் மற்றும் கூட்டங்கள் போன்ற நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக அம்மக்களின் வசிப்பிடங்களில் சமுதாயக் கூடங்கள் படிப்படியாக கட்டப்பட்டு வருகின்றன. 2011-2012 ஆம் ஆண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் அதிகமாக வசிக்கும் குடியிருப்புப் பகுதிகளில் 100 இலட்சம் ரூபாய் செலவில் 10 சமுதாயக் கூடங்களும், 2012-2013 ஆம் ஆண்டு 150 இலட்சம் ரூபாய் செலவில் 10 சமுதாயக் கூடங்களும், 2013-2014 ஆம் ஆண்டில் 45 இலட்சம் ரூபாய் செலவில் மூன்று சமுதாயக் கூடங்களும் கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது. சமுதாயக் கூடம் வேண்டி அனைத்து மாவட்டங்களிலிருந்தும் விண்ணப்பங்கள் வந்தவண்ணமுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியைக் கொண்டு எல்லா மாவட்டங்களிலும் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்க இயலாத நிலையுள்ளது. இருப்பினும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் சட்டமன்றத் தொகுதி, கண்ணனூர் கிராமத்திலுள்ள ஆதி திராவிட மக்களின் தேவையின் முக்கியத்துவம் கருதி சமுதாயக் கூடம் கட்ட இடவசதி இருக்கிறதென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.*

**திருமதி த. இந்திராகாந்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணனூர் பகுதிவாழ் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் எனது நன்றியை கூறி விடைபெறுகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 92, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*





**92—**

## குளிர்சாதனப் பேருந்து

***4232—திரு. பி.வி. கதிரவன்:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டியிலிருந்து பெங்களூருவுக்கு குளிர்சாதனப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில் எப்போது?*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) உசிலம்பட்டி-பெங்களூரு பேருந்து இயக்க தடம் தமிழ்நாடு மற்றும் கர்நாடகம் ஆகிய இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்டிருப்பதால், மேற்படி தடத்தில் குளிர்சாதனப் பேருந்து இயக்குவது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உத்தரவினைப் பெற்று, தமிழ்நாடு மற்றும் கர்நாடகம் ஆகிய இரு மாநில ஒப்பந்த பேச்சு வார்த்தையின்போது இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.*

**திரு. பி.வி. கதிரவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், அரசு போக்குவரத்துத் துறையில் பணிபுரிகின்ற தொழிலாளர்கள் 53,129 பேர் பல உயிர்களைக் காக்க கிட்டத்தட்ட 20,000 லிட்டர் அளவிற்கு இரத்த தானம் கொடுத்து கின்னஸ் சாதனை புரிந்திருக்கின்ற தொழிலாளர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 2010-லே அரியானா மாநிலத்திலே*

[2014 பிப்ரவரி 20

இதுவரை 43,732 பேர் இரத்த தானம் கொடுத்திருக்கிறார்கள். அதை மிஞ்சுகின்ற வகையிலே 53,129 பேர் இரத்த தானம் கொடுத்து பெரிய சாதனை புரிந்திருப்பது மிகவும் பாராட்டத் தகுந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டியிலிருந்து பெங்களூருவுக்கு குளிர்சாதனப் பேருந்து இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலிருந்தும் சென்னைக்கு குளிர்சாதனப் பேருந்துகளை இயக்க வேண்டுமென்றும், அதில் படிப்படியாக அனைத்து மாவட்டங்களிலும் இயக்கக்கூடிய வகையில், முதல்கட்டமாக கோயம்புத்தூர் மற்றும் மதுரையிலிருந்து சென்னைக்கு குளிர்சாதனப் பேருந்துகளை இயக்குவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு இன்று அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உசிலம்பட்டி-பெங்களூரு வழித்தடத்தில் குளிர்சாதனப் பேருந்து இயக்குவதற்காக, அது இரு மாநிலங்களுக்கிடையேயான Inter-state agreement, சம்பந்தப்பட்ட நிகழ்வு குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவினைப் பெற்று, அடுத்து நடைபெறுகின்ற தமிழ்நாடு-கர்நாடக மாநில ஒப்பந்த பேச்சுவார்த்தையின்போது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவோடு பேருந்து இயக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

முற்பகல் 10-50

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு



2014 பிப்ரவரி 20]

நன்றி. மேலும், உசிலம்பட்டியிலிருந்து சென்னைக்கு இரண்டு பேருந்துகள் இப்போது வந்து கொண்டிருக்கின்றன. அதிலே ஒரு பேருந்து குளிர்சாதனப் பேருந்தாக இயக்கப்பட வேண்டுமென்றும், உசிலம்பட்டியிலிருந்து பட்டுக்கோட்டைக்குத் தொடர்ந்து மக்கள் சென்று வருவதற்கு ஏதுவாக ஒரு பேருந்தும் இயக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, ஏழுமலையிலிருந்து தொழிலாளர்கள் அதிக அளவிற்கு திருப்பூர் பகுதிக்குச் சென்று வேலை செய்து வருவதால், ஏழுமலையிலிருந்து திருப்பூருக்கு பேருந்து இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, லிங்கப்பநாயக்கனூர் பகுதியிலே ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து லிங்கப்பநாயக்கனூர் பகுதியில் இருக்கிற அந்தப் பள்ளிக்கூடத்திற்கு மாணவர்களும், ஆசிரியப் பெருந்தகைகளும் சென்று வருவதற்கு உதவியாக இருக்கின்ற வகையிலே பேருந்து ஒன்றும் இயக்கிட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிற வழித்தடத்தில் பயணிகளுடைய எண்ணிக்கை ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, பேருந்து இயக்கிட உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோவிலூர் பேரூராட்சி, அந்தத் தாலுகாவினுடைய தலைமையிடமாக இருக்கிறது. 140 ஊராட்சிகளையும், 3 பேரூராட்சிகளையும் உள்ளடக்கியது அந்தத் தாலுகா. திருக்கோவிலூர் கிராமங்கள் சூழ்ந்த பகுதியாக இருப்பதால், வியாபாரம் அங்கே அதிகமாக நடைபெறுகிறது. வியாபாரிகள் கொள்முதலுக்காக சென்னைக்கு வரவேண்டியிருக்கிறது. எனவே, நீண்டநாள் கோரிக்கை இது.

திருக்கோவிலூரிலிருந்து விழுப்புரம் வழியாகச் சென்னைக்குப் பொது மக்களும், வியாபாரிகளும் வந்து செல்வதற்கு ஏதுவாக, ஒரு குளிர்சாதனப் பேருந்தினை இயக்க அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துப் பகுதி மக்களும் சிறப்பான பேருந்து வசதிகளைப் பெறவேண்டுமென்ற சீரிய நோக்கத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 6 ஆயிரம் புதிய பேருந்துகளை வழங்குவதற்கு உத்தரவிட்டு, படிப்படியாக மக்களுடைய பயன்பாட்டிற்கு அந்தப் பேருந்துகள் கொண்டு வரப்படுகின்றன. அந்த வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், சென்னையில் சரித்திர சாதனையாக, இதுவரை சென்னை மக்கள் கனவிலும் நினைத்துப் பார்க்கமுடியாத வகையில், வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டமாக, ஏற்கெனவே 50 சிற்றுந்துகளை இயக்கி வைத்திருக்கிறார்கள். அதேபோன்று, நேற்று 50 சிற்றுந்துகளையும், 185 புதிய பேருந்துகளையும், 109 புனரமைக்கப்பட்ட பேருந்துகள் என, 344 பேருந்துகளை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், தன்னுடைய திருக்கரங்களால் கொடியசைத்து மக்களுடைய பயன்பாட்டிற்காக வழங்கியிருக்கிறார்கள். எஞ்சியிருக்கின்ற பேருந்துகளுக்குண்டான கூண்டு கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இன்னும் எந்தெந்தப் பகுதிகளில் பேருந்து வசதிகள் தேவை என்பது துறையின்மூலம் ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ள வழித்தடங்களிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

**திரு. மு.வீ. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், சோழவந்தான் பேரூராட்சி,





வரலாற்றுச் சிறப்புமிக்க பேரூராட்சியாகச் செயல்பட்டு வருகிறது. அந்தப் பேரூராட்சிப் பகுதியிலிருந்து, திருப்பதி தேவஸ்தானக் கோயிலுக்குச் சென்று வர ஏதுவாக, குளிர்சாதனப் பேருந்து வசதி செய்து கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இந்தக் கோரிக்கையை வைத்திருக்கின்றார். அது துறையினுடைய ஆய்வில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையில் கேரள மாநிலத்தைச் சார்ந்திருக்கக்கூடிய மக்கள் அதிகமாக வசித்து வருகிறார்கள். தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களாக அந்தப் பகுதியிலே கேரளாவைச் சார்ந்தவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். எனவே, வால்பாறையிலிருந்து எர்ணாகுளத்திற்கும், வால்பாறையிலிருந்து பாலக்காட்டிற்கும் அரசுப் பேருந்துகள் இயக்குவதற்கான குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா? அவற்றை இயக்குவதற்கான முயற்சியில் அரசு ஈடுபடுமா என்பதனைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு மாநிலங்கள் சம்பந்தப்பட்ட பேருந்துகள் இயக்கக்கூடிய வழித்தடங்களில், அந்தப் பகுதியில் இருக்கிற மக்களுக்குத் தேவை ஏற்படுகின்றபட்சத்தில், அந்தப் பகுதிக்குச் செல்லுகின்ற பயணிகளுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கும்பட்சத்தில், அது தொடர்பாகத் துறையின் சார்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அந்தப் பயணிகளுடைய வசதிகளுக்கேற்ப

[2014 பிப்ரவரி 20

இரு மாநிலங்களுக்கிடையே ஒப்பந்தப் பேச்சுவார்த்தை நடைபெறுகிறபோது, துறையின் சார்பாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, அதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அங்குள்ள பயணிகளுடைய தேவைகள், பயணிகளுடைய எண்ணிக்கை, அடர்வுகள் உரிய அளவில் இருக்கவேண்டும். எந்தெந்தப் பகுதிகளில் பயணிகளின் அடர்வு தேவையான அளவில் இருக்கிறதோ, அந்தப் பகுதிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, முன்னுரிமை கொடுத்து பேருந்துகள் இயக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவைப்பெற்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற வழித்தடத்தில் துறையின் சார்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

*முற்பகல் 10-55*

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகெங்கும் வாழ்கின்ற தமிழர்களைக் காப்பதற்கு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அம்மா அவர்கள் இருக்கிறார் என்றும், தமிழினத்தின் ஒரே காவலராகத் திகழ்ந்துகொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருமங்கலம் சட்டமன்றத் தொகுதி, திருமங்கலத்திலிருந்து சென்னைக்கு ஒரு ஹைடெக் பேருந்து வேண்டுமென்பதை நீண்ட நாள் கோரிக்கையாக அந்தப் பகுதி மக்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், திருமங்கலத்திலிருந்து நேரடியாகச் சென்னைக்கு வருவதற்கு ஒரு புதிய பேருந்து வழித்தடத்தை உருவாக்கித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இந்தக் கோரிக்கையை வைத்திருக்கின்றார். மாண்புமிகு



2014 பிப்ரவரி 20]

முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டதையடுத்து, அல்ட்ரா டீலக்ஸ் பேருந்துகளை புதிதாக இயக்குவதற்குண்டான பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற திருமங்கலம்-சென்னைக்கு அல்ட்ரா டீலக்ஸ் பேருந்துகளை விரைவில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் திருக்கரங்களால் கொடியசைத்து மக்களுடைய பயன்பாட்டிற்கு இயக்குவதற்குத் தயாராகி வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாகனங்கள் என்று சொன்னாலே விபத்துகள் ஏற்படும், பிறருக்குத் துன்பங்கள் ஏற்படும் என்ற நிலையை மாற்றி, வாகன ஓட்டுனர்களும், நடத்துனர்களும் பிறருக்கு உதவியாக இரத்த தானம் செய்வார்கள் என்ற சாதனையை படைத்திருப்பதற்காக இந்த அரசுக்கு முதலில் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். போக்குவரத்துத் துறையில் புதிய, புதிய திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்திக் கொண்டிருக்கும் நிலையில், சென்னையில் மினி பேருந்துகள் இயக்கப்படுவதைப்போல கிராமப்புறங்களிலும் மினி பேருந்துகள் இயக்கப்படுமா?

இன்னொன்று, பள்ளிகளுக்குச் செல்வதற்காக மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கப்படுகிறது. ஆனால் குறித்த நேரத்தில் சில பகுதிகளில் நகரப் பேருந்துகள் இல்லாமல் mofussil பேருந்துகள் இயக்கப்படும்போது, mofussil பேருந்துகளிலும் இலவச பஸ் பாஸ் வழங்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரைப் பொறுத்தவரையில் பல்வேறு இடங்களில் சாலைகள் மிகவும் குறுகலாக இருக்கின்ற காரணத்தினால் அந்தந்தப் பகுதி மக்கள், சென்னையில் இருக்கின்ற

[2014 பிப்ரவரி 20

குறுகலான சாலைகளில் வசிக்கின்ற மக்கள் 2 கி.மீ., 3 கி.மீ., 4 கி.மீ. என்று நெடுந்தூரம் நடந்து வந்து பேருந்துகளில் பயணம் செய்ய வேண்டிய நிலையை மாற்றி, அவரவர் இல்லத்திற்கு முன்பாகவே கையை அசைத்தவுடன் பேருந்தை நிறுத்தி, அவர்கள் அப்பேருந்தில் ஏறி தாங்கள் செல்லக்கூடிய பகுதிகளுக்குச் செல்ல வேண்டுமென்ற சிந்தனையோடு (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்னையில் சிற்றுந்துகள் திட்டத்தை வழங்கியிருக்கின்றார்கள். சென்னையில் இத்திட்டம் மக்களிடத்தில் வரவேற்பைப் பெற்றதன் காரணமாகத்தான் 100 நாட்களில் 37 இலட்சம் பயணிகள் 50 சிற்றுந்துகளில் பயணிக்கும் அளவுக்கு, மிகப் பெரிய வரலாற்றுச் சாதனையை, வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டத்தின் மூலமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் படைத்திருக்கிறார்கள்.

சில தலைவர்கள் வரலாறைப் படிப்பார்கள். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வரலாறைப் படைப்பவர்கள் என்பதற்கு சான்றாக (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு சாதனைத் திட்டங்களை வழங்கியிருக்கின்றார்கள். சென்ற வாரம்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சட்டமன்றத் தொகுதியில் பல்வேறு வழித்தடங்களில் மக்களின் தேவைக்காக மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவோடு பேருந்துகள் இயக்கப்பட்டிருக்கின்றன. மேலும் கூடுதலாக, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியபடி, பள்ளி நேரத்தில் செல்லக்கூடிய சாதாரண பேருந்துகள் எந்தெந்த வழித் தடங்களில் வேண்டுமென்று சொல்கிறாரோ அந்தப் பகுதிகளில், வழித் தடங்களில் ஆய்வு செய்து மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவோடு பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள எல்லையில் அமைந்திருக்கின்ற குமுளி பேருந்து பணிமனை தற்சமயம் lower camp பகுதிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில் அனைத்துப் பேருந்துகளும் நெடுஞ்சாலையில் நின்று செல்லக்கூடிய ஒரு அவல நிலை இருக்கிறது. இதனால்



2014 பிப்ரவரி 20]

சுற்றுலா பயணிகள், ஐயப்ப பக்தர்கள், வியாபாரிகள் மிகவும் சிரமத்துக்குள்ளாகிறார்கள். ஆகவே, குமுளியில் உள்ள பேருந்துப் பணிமனையை பேருந்து நிலையமாக எவ்வளவு விரைவில் மாற்ற முடியுமோ அவ்வளவு விரைவாக மாற்றி, பொதுமக்களுக்கு நன்மை செய்ய மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சட்டமன்றத் தொகுதியில் புதியதாக பணிமனை வேண்டுமென்று கோரிக்கை வைத்து மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டு, விரைவில் பேருந்து பணிமனைக்கான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, ஒப்பந்தப் புள்ளிகள் கோரும் பணிகள் நடைபெற்று, விரைவில் அவர்கள் அந்தப் பணிகளைத் தொடங்கவுள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இந்தக் கோரிக்கையை சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். அந்தப் போக்குவரத்துப் பணிமனை அமைப்பதற்கான பணிகள் நிறைவு பெற்ற பிறகு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவோடு அந்தப் பணிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நீதி ஆள்வோருக்கு உகந்தது அல்ல என்றும் ஆளப்படும் மக்களுடையது என்கின்ற அடிப்படையில் தமிழகத்தில் சிறப்பாக ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற நமது மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதியில் பேருந்து பணிமனையை அமைத்து, தனது பொற்கரங்களால் நேற்றையதினம் திறந்து வைத்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்

காலடியில் (மேசையைத் தட்டும் ஒலி) நெய்வேலி தொகுதி மக்களின் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் கோடானுகோடி நன்றி மலர்களை சமர்ப்பிக்கிறேன். நெய்வேலி-சென்னைக்கு புதிதாக குளிர்சாதனப் பேருந்து ஒன்றை இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய ஐந்து ஆண்டுகால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட பணிமனைகளினுடைய எண்ணிக்கை வெறும் பத்தாகும். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், நெய்வேலிக்கு மட்டுமல்ல, பேருந்துகளுடைய எண்ணிக்கைகளுக்கேற்ப கூடுதலாக பணிமனைகள் அமைக்கப்பட்டால், அந்தப் பணிமனைகளின்மூலம் பேருந்துகளை சுத்தமாகப் பராமரிக்கவும், பழுதுகளை சரி செய்யவும் வசதியாக இருக்கும் என்ற தொலைநோக்குப் பார்வையோடு இந்த மூன்று ஆண்டுகளில் 68 புதிய போக்குவரத்து பணிமனைகளை அமைப்பதற்கு உத்தரவிட்டு, நேற்று நெய்வேலி உட்பட 7 புதிய பணிமனைகளைத் தனது திருக்கரங்களால் தொடங்கி வைத்து, போக்குவரத்துக் கழகங்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். போக்குவரத்துக் கழகங்களின் பணிமனைகளை நேற்று முதல் செயல்பாட்டிற்கு வருவதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். புதிய பணிமனைகளின்மூலம் பேருந்துகளை இயக்குகின்றபோது, அந்தந்த பகுதியில், சுற்றுப்புறத்தில் இருக்கின்ற மக்களின் தேவைகளுக்கேற்ப புதிய கூடுதல் வசதிகளை வழங்க ஏதுவாக இருக்கும் என்பதால் மாண்புமிகு அம்மா அவர்கள் அப்பணிமனைகளை வழங்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குளிர்சாதனப் பேருந்து வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளார். மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியுள்ள பணிமனைகளின்மூலம், சென்னைக்கு குளிர்சாதனப் பேருந்து இயக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவோடு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத்



தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரத்தில் நகரப் பேருந்துகளுடைய இயக்கம் 35 கிலோ மீட்டர் தூரம் வரைதான் அனுமதிக்கப்படுகிறது. மதுரை நகரம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளதால் நகரப் பேருந்தின் எல்லை 35 கிலோ மீட்டர் தூரம் என்பதற்கு பதிலாக 50 கிலோ மீட்டர் தூரம் என உயர்த்தப்பட்டால், அங்கு 13 புதிய வழித்தடங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதன்மூலம் அரசுக்குக் கூடுதல் வருவாய் வர வாய்ப்புள்ளது என்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஏற்பாடு செய்ய முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் மட்டும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 30 புதிய வழித்தடங்களில் பேருந்துகளை இயக்குவதற்கு உத்தரவிட்டு, இன்று மக்களுடைய பயன்பாட்டிற்கு அந்தப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், கூடுதலாக எந்தெந்த இடங்களில் பேருந்து வசதிகள் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினால், மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று, அதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய கருத்து மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார் அவர்கள்.

**திரு. வி. முத்துக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் நகரத்தில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி உள்ளது. சுமார்

2,000 மாணவியர் அப்பள்ளியில் படிக்கின்றனர். இப்பள்ளி, பேருந்து நிலையத்திலிருந்து 4 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. ஆகையால், மாணவிகள் பள்ளிக்கு பேருந்தின் மூலமாகத்தான் செல்ல வேண்டியுள்ளது. பேருந்துகள் அதிகம் இல்லாத காரணத்தினால், பேருந்தில் செல்வதற்கு மாணவிகள் பெரும் துன்பப்படுகின்றனர். இல்லையென்றால் அவர்கள் மணிமுத்தாற்றின் குறுக்கே நடந்து செல்ல வேண்டியுள்ளது. அவ்வாறு குறுக்கே செல்லும்போது, சமூக விரோத சக்திகள் மூலமும் அவர்கள் பெரும் துன்பம் அடைகின்றனர். ஏற்கெனவே, அந்த மாணவிகளுக்கு காலையிலும், மாலையிலும் பேருந்துவிட வேண்டுமென்று நான் கிளை மேலாளர் அவர்களிடம் மனு கொடுத்துள்ளேன். இதுநாள் வரையில் அந்தக் கோரிக்கை நிறைவேறவில்லை. காலை, மாலை இரு வேளைகளிலும் மாணவிகளுக்கென்று ஒரு சிறப்புப் பேருந்தை விட வேண்டுமென்று மாணவிகளும், பொதுமக்களும் இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று கோரி வருகின்றனர். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிதாக மாணவிகளுக்கென்று சிறப்புப் பேருந்தை விட நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-05

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வினாவை எழுப்புவதற்கு முன்பு மாண்புமிகு உறுப்பினருடைய சட்டமன்றத் தொகுதியில் ஒரு கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பில் விருத்தாசலம் வட்டாரப் போக்குவரத்து பகுதி அலுவலகத்திற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு, ஓட்டுநர் பேருந்துத் தளம் அமைப்பதற்கு நிதியைக் கொடுத்து அந்தப் பணிகள் நிறைவு பெற்று, மக்கள் பயன்பாட்டிற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அதற்கு நன்றி தெரிவிப்பார் என்று நினைத்தேன். இருந்தபோதிலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற அந்த வழித்தடத்தை எடுத்துச் செல்வோம். அதிலும் குறிப்பாக அவர் சொல்கின்றபோது





குறிப்பிட்டதற்கு மாறாக, பேருந்தில் பயணம் செய்கின்றபோது யாரும் அச்சப்படத் தேவையில்லை, யாரும் அச்சப்படுவதாகவும் இல்லை. சுதந்திரமாக, தைரியமாக மக்கள் பேருந்தில் தாராளமாக பயணம் செய்யக்கூடிய மக்களாட்சியை நடத்தக்கூடிய மக்கள் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பள்ளி நேரத்தில் கூடுதல் பேருந்து வசதி தேவை என்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவோடு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட மார்த்தாண்டம்-அருமனை, குரூர் வழி செல்லும் 86ஜே பேருந்து போன ஆண்டு எனது கோரிக்கையின்பேரில் புதிய வழித்தடமாகக் கொடுக்கப்பட்டு அரசு அதை நிறைவேற்றியது. அதற்கு நன்றியை ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன். நான்கு மாதங்களாக அந்தப் பேருந்து இப்போது நடைமுறையில் இல்லை. அது அங்கிருக்கக்கூடிய பிற்பட்ட மலைப்பகுதி. அங்கு இந்தப் பேருந்து வசதியில்லாமல் மக்கள் மிகவும் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். மீண்டும் அந்தப் பேருந்தை தொடர்ந்து இயக்க வேண்டுமென்றும், மார்த்தாண்டம்-குலசேகரத்திற்கு ஒரு புதிய பேருந்து, திக்குறிச்சி, சிதறால் வழியாக இயக்க வேண்டுமென்றும் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு வழித்தடத்தில் இயக்கப்பட்ட பேருந்தை மட்டும் சுட்டிக்காட்டினார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உத்தரவோடு விளவங்கோடு தொகுதியில் 5 புதிய வழித்தடங்களில் பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்தப் பேருந்துகள் மக்களுடைய பயன்பாட்டில் இருக்கின்றன. அதேபோல, விளவங்கோடு தொகுதியில் மட்டும் 5

*வழித்தடங்கள் மட்டுமல்லாமல், 12 பேருந்துகள் வழித்தட நீட்டிப்புகள் செய்யப்பட்டு, மக்களுடைய பயன்பாட்டிற்காக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கி, இன்று மக்களுக்காக அந்தப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் கூடுதலாகத் தெரிவிக்கப்பட்ட அந்த வழித்தடங்கள் ஆய்வு செய்யப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொண்டு, முழுமையாக விளவங்கோடு தொகுதியில் மட்டும் 5 புதிய வழித்தடங்களையும், 12 புதிய வழித்தட நீட்டிப்புகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கி, மக்களுடைய பயன்பாட்டிற்கு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.*

**செல்வி கே. பாலபாரதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரயில் பயணத்தில் 5 வயதுக் குழந்தைகளுக்கு கட்டணம் இல்லை. நம்முடைய பேருந்தில், நீண்டதூரப் பேருந்தில் 3 வயதுக் குழந்தைகளுக்கு அரை டிக்கெட் எடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அதுகுறித்தும், 60 வயதிற்கு மேற்பட்ட சீனியர் சிட்டிசன்கள் இலவசமாகப் பயணம் செய்வது குறித்தும் உள்ள இந்த இரண்டு கோரிக்கைகளையும் வரக்கூடிய காலங்களில் பரிசீலிப்பீர்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொல்லும் சொல்லை வெல்லும் சொல் இவ்வுலகில் இல்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேர்தல் நேரத்தில் அறிவிக்கப்பட்ட அனைத்துத் திட்டங்களையும் முழுமையாக நிறைவேற்றி வருகின்றார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள்.*

**திரு. கடம்பூர் ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் வரலாற்றில் இடம் பெறுகின்றவண்ணம் கருணையோடும், காருண்யத்தோடும், வள்ளலாரை மிஞ்சுகின்ற அளவிலே உயிர்களைப் பாதுகாக்கின்ற வகையில், வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பை அறிவித்த உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவியாக விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த அமைதி, வளம், வளர்ச்சியோடு கூடிய புதிய பாராளுமன்றம் என்கின்ற வாசகத்தை அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளிலே எழுதிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்து மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 93, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

**93—**

### மாசுக் கட்டுப்பாடு

***36220—திரு. மு.வீ. கருப்பையா:**

*மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சோழவந்தான் தொகுதி, மேட்டுப்பட்டி தேசிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் கழிவுநீர் அப்பகுதியிலுள்ள கண்மாய் மற்றும் ஊருணியில் கலப்பதைத் தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனிதப் பாதங்களைப் பணிவுடன் வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) சோழவந்தான் தொகுதி, மேட்டுப்பட்டி தேசிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் கழிவுநீர் சுத்திகரிப்பு செய்யப்பட்டு, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் அறிவுரைப்படி சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர், ஆலையின் வளாகத்திற்குள் கரும்பு விவசாயத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எந்தவிதமான கழிவுநீரும் கண்மாயிலோ, ஊருணியிலோ கலந்ததாக எந்தவிதமான புகாரும் பெறப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

**திரு. மு.வீ. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில், எனது சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட வாடிப்பட்டியில் நீதிமன்றம் கட்டுவதற்கு நிலத்தை வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றிகளைத் தொகுதி மக்களின் சார்பாகத் தெரிவித்து, தமிழகத்தை மின்மிகை மாநிலமாக உருவாக்கிடவும், தேசிய நதிநீர் உரிமைகளைப் பெற்று தமிழகத்தின் விவசாயம் வளம் பெற, இந்திய நாடு வல்லரசாக, தேசத்தின் பாதுகாப்பு, தேவைகள் நிறைவேற வலுவான மத்திய அரசும், வளமான தமிழ்நாடும், வலுவான இராணுவமும் வேண்டுமென்ற நிலையில் அதை இயக்கக்கூடிய அறிவு, கனிவு, துணிவு பெற்ற ஆற்றல் மிக்க ஒருவர்தான் நம் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நம் பாரத நாட்டின் பிரதமராக வருவதன்மூலம் நாடு நலம் பெறும், ஏழைகளின் வாழ்வு வளம் பெறும். திட்டங்களும் சட்டங்களும் உருவாக்கிட, ஒருமைப்பாட்டை, வலுவான இந்தியாவை உருவாக்கிட, தெற்கு தேயாமல் காத்திட, தமிழ்நாட்டை இந்தியாவின் முதல் மாநிலமாக உருவாக்கிட, தொலைநோக்குத் திட்டங்கள் தந்துவரும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.





தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலையிலிருந்து வெளியேறும் கழிவுநீரால் குடிநீர் மற்றும் விவசாயம் சார்ந்த கண்மாய் மற்றும் ஊருணிகளில் சுற்றுச்சூழல் மாசுபடுவதோடு தொற்றுநோய்கள் பரவும் நிலையும் இருந்து வந்தது. அதனை மாற்ற நல்ல நடவடிக்கை எடுத்து அங்கு கழிவுநீர் கலப்பதைத் தடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வராக இருக்கின்ற காலமெல்லாம் சுற்றுச்சூழல் துறையின் பொற்காலம் என்ற வகையில் உலகளவில் பனியன் ஏற்றுமதியில் முதலிடம் வகித்துக்கொண்டிருக்கின்ற திருப்பூர் சாயப் பட்டறை உரிமையாளர்களுடைய கோரிக்கையை ஏற்று பொது சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதற்காக 200 கோடி ரூபாய் வட்டியில்லாத கடனாக (மேசையைத் தட்டும் ஒலி) தாயுள்ளத்தோடு வழங்கி, கடந்த ஆட்சியில் சாயத் தண்ணீர் ஓடிய நொய்யலாற்றில் சாகுபடித் தண்ணீரை ஓடச்செய்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்தியாவிலேயே கழிவுநீர் வெளியேற்றத்தில் ஜீரோ டிஸ்சார்ஜ் என்று சொல்லக்கூடிய பூஜ்ய நிலையை அடையக்கூடிய திட்டத்தை தமிழகத்தில் செயல்படுத்திய முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்கிறேன்.

கூட்டுறவு ஆலைகளின் கழிவுநீரை சுத்திகரிப்பு செய்து கழிவுநீரை ஆலையின் வளாகத்திற்குள் இருக்கின்ற காலி இடங்களில் கரும்பு பயிர் செய்து விவசாயத்திற்குப் பயன்படுத்த

[2014 பிப்ரவரி 20

வேண்டும் என்கிற அரசு உத்தரவை சம்பந்தப்பட்ட ஆலை முழுமையாகக் கடைப்பிடித்துக்கொண்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன சோழவந்தான் பேரூராட்சி, சமயநல்லூர், தேனூர் ஆகிய பகுதிகளில் கழிவுநீர் கலக்கின்றதா என குடிநீர் மாதிரி எடுத்து ஆய்வு செய்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 94, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**94—**

### நூலகம்

***28168—திரு. அ. சவுந்தரராசன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் தொகுதி, 34-வது வட்டம், எவரெடி காலனியில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து எனது பணிவான வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாவட்டம், பெரம்பூர் தொகுதி, 34-வது வட்டம், எவரெடி காலனியில் கொடுங்கையூர் எவரெடி நகர் தொழிலாளர்கள் குடியிருப்போர் பகுதியில் பகுதிநேர நூலகம் வாடகையில்லா இலவசக் கட்டடத்தில் தற்போது செயல்பட்டு வருகிறது. மேற்படி, பகுதிநேர நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட யூனியன் கார்பைடு பணியாளர்கள் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் லிமிடெட் சார்பில் எவரெடி காலனியில் 2,556 சதுர அடி கொண்ட காலி மனை தானமாகப் பெறப்பட்டுள்ளது. புதிய கட்டடம் கட்டுவதற்கான திருத்திய வரைபடம் மற்றும் மதிப்பீடு



2014 பிப்ரவரி 20]

அறிக்கை பொதுப் பணித் துறையிடமிருந்து பெற்று விரைவில் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

புதிய நூலகக் கட்டடம் கட்ட சென்னை மாவட்ட நூலக ஆணைக் குழுவில் போதிய நிதியாதாரம் உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்ற முன்வந்த தமிழக அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி. அதை முழுநேர நூலகமாகச் செயல்படுத்த வேண்டுமென்பது எங்களுடைய ஒரு வேண்டுகோள். அந்தக் குடியிருப்போர் நலச் சங்கம், கூட்டுறவு அமைப்பு மூலமாகக் கொடுத்திருக்கிற அந்த நிலமும் அதற்குப் போதுமானதாக இருக்கிறது. அதைச் சுற்றியிருக்கிற பகுதிகளிலும் புதிதாக வளர்ந்திருக்கிற நகர விரிவாக்கப் பகுதி. அங்கே குடியிருப்பும் மிக அடர்த்தியாக இருக்கிறது. அங்கே reference புத்தகங்கள் போன்றவற்றையெல்லாம் பெறமுடியாத அளவுக்கு ஏழை மாணவர்கள் இருக்கிறார்கள், இப்போதைய competitive examinations இருக்கிற சூழ்நிலையிலே அந்தப் புத்தகங்களும் அதிலே இடம் பெறத்தக்க அளவிலே முழுநேர நூலகமாக மாற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு அப்பகுதியின் முக்கியத்துவம் கருதி, ஆய்விலே முக்கியத்துவத்தை உணர்ந்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று அதை முழுநேர நூலகமாக மாற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

**திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் போலவே 35-வது வட்டம், 37-வது வட்டம், சத்தியமூர்த்தி நகர், மகாகவி பாரதி நகர், கண்ணதாசன் நகர், முத்தமிழ் நகர் போன்ற மிக அடர்த்தியாக மக்கள் வாழக்கூடிய பகுதிகளில் 50,00-க்கும் மேற்பட்ட மக்கள் குடியிருக்கிற பகுதிகளிலே நூலகம் இல்லாத ஒரு குறை இருக்கிறது. இந்தப் பகுதிக்கும் இன்னொரு நூலகத்தைக் கட்டித் தர அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன். அறிவித்த அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக ஒரு நூலகம் அமைக்கப்படவேண்டுமென்றால், குறைந்தது 200 உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டும். 5 செண்ட் இடம் தானமாகத் தர வேண்டும். புரவலர்களாகக் குறைந்தது ஆயிரம் ரூபாய் கட்டி 2 உறுப்பினர்கள் உருவாக்கப்பட வேண்டும். அதுமட்டுமல்லாமல் புதிதாக அமைக்கக்கூடிய அந்த நூலகத்திற்கு வாடகை இல்லாத கட்டடத்தைக் கொடுக்க வேண்டும். மேசை, நாற்காலி போன்ற தளவாடப் பொருட்களை எல்லாம் கொடுக்கப்படுமேயானால், அந்தப் பகுதியிலே புதிய நூலகம் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]





## 2. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியின்மையைத் தடுக்கும்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2014

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியின்மையைத் தடுக்கும்) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான அனுமதியோடு*

*"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியின்மையைத் தடுக்கும்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

## (ஆ) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

*முற்பகல் 11-20*

## (இ) நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான இழப்பீடு மற்றும் ஒளிவு மறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு உரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2014 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான இழப்பீடு மற்றும் ஒளிவு மறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு உரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*





**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான இழப்பீடு மற்றும் ஒளிவு மறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு உரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஈ) தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 3. முன்பண மானியக் கோரிக்கைகள், 2014–2015, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2014-2015 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைத்தல், மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014-2015 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைக்கின்றேன்.



## 2014–2015 ஆம் ஆண்டு உடனடிச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

| | கோரிக்கை | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 1 | மாநிலச் சட்டமன்றம் | 20,14,41 | - | 50,00 |
| 2 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 14,05,10 | - | - |
| 3 | நீதி நிருவாகம் | 330,91,73 | - | - |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 897,50,42 | 99,57,50 | 1 |
| 5 | வேளாண்மைத் துறை | 2,536,05,61 | 68,84,24 | 75,25,00 |
| 6 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 507,21,86 | 27,40,38 | 1 |
| 7 | மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 169,84,66 | 86,07,57 | - |
| 8 | பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 26,76,30 | - | 8,57,06 |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 413,33,84 | 80,14,98 | 1 |
| 10 | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 168,68,13 | - | 1 |
| 11 | முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 146,41,02 | - | - |

| கோரிக்கை | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|
| | வருவாய் | மூலதனம் | கடன் |
| 12 கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 239,47,64 | 81,40,52 | 8,13,04 |
| 13 உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 2,718,33,32 | 262,27,93 | 1 |
| 14 எரிசக்தித் துறை | 4,108,50,12 | 1,964,60,01 | 950,00,06 |
| 15 சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 5,79,07 | 50,00,01 | 10,00,00 |
| 16 நிதித் துறை | 439,48,99 | 1,000,00,00 | 45,40,12 |
| 17 கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 505,88,62 | 1 | 10,33,03 |
| 18 கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 72,58,82 | 1,10,00 | 1 |
| 19 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 3,378,50,60 | 123,49,44 | 1 |
| 20 உயர் கல்வித் துறை | 1,669,86,42 | 144,10,10 | 1 |
| 21 நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | 894,53,71 | 2,999,97,66 | 75,00,00 |
| 22 காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 2,207,81,38 | 285,83,50 | 98,35,12 |



| கோரிக்கை | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|
| | வருவாய் | மூலதனம் | கடன் |
| 23 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 94,82,20 | 1 | - |
| 24 சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 97,32,74 | 2 | - |
| 25 இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 96,19,30 | 32,92,00 | - |
| 26 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 533,51,96 | 131,16,53 | 85,00,01 |
| 27 தொழில் துறை | 841,66,06 | 15,02 | 250,00,04 |
| 28 செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 31,65,24 | 1 | - |
| 29 சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | 51,46,99 | 37,78,66 | 1 |
| 30 எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 39,14,64 | 1 | - |
| 31 தகவல் தொழில்நுட்பவியல் துறை | 68,87,08 | 1 | 1 |
| 32 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 428,72,25 | 12,88,04 | 40,00 |

| கோரிக்கை | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|
| | வருவாய் | மூலதனம் | கடன் |
| 33 சட்டத் துறை | 11,17,90 | - | 1 |
| 34 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 3,355,24,22 | 1,659,10,31 | 74,48,37 |
| 35 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 35,13,34 | 6,15,00 | - |
| 36 திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 47,87,64 | 41,64,16 | 1 |
| 37 மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 47,25,02 | - | - |
| 38 பொதுத் துறை | 433,37,94 | 3 | 38,00,01 |
| 39 கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | 113,38,57 | 451,33,85 | 1 |
| 40 பாசனம் (பொதுப் பணித் துறை) | 730,42,08 | 1,103,97,76 | - |
| 41 வருவாய்த் துறை | 2,951,46,19 | 95,01,74 | 1 |
| 42 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 4,891,84,18 | 1,582,98,70 | 12,50 |
| 43 பள்ளிக் கல்வித் துறை | 8,740,19,81 | 125,63,02 | 2,70 |
| 44 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | 147,26,12 | 32,68,51 | 1 |
| 45 சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 1,925,75,99 | 1,55,92 | 1 |
| 46 தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 19,64,49 | - | 1 |



| கோரிக்கை | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|
| | வருவாய் | மூலதனம் | கடன் |
| 47 இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | 47,18,86 | 1 | - |
| 48 போக்குவரத்துத் துறை | 453,91,08 | 100,07,54 | 2 |
| 49 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 73,32,00 | - | 1 |
| 50 ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 8,770,53,12 | - | - |
| 51 இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 181,25,59 | - | - |
| 52 மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | 141,69,34 | 45,00 | 1 |
| 53 சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை | 1,551,09,22 | - | 1 |
| 54 வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 194,51,54 | 130,94,79 | - |
| **பெருமொத்தம்** | **58,618,64,47** | **12,821,30,50** | **1,729,57,28** |

## 4. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 2013–2014, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2013-2014 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்கள் குறித்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கையைப் பேரவைக்கு அளித்தல். மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013-2014 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை

மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின்முன் வைக்கிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவானதொரு அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகள், மொத்தம் 5,937.66 கோடி ரூபாய் அளவிலான நிதியை ஒதுக்குவதற்கு வகை செய்கின்றன. இதில், 2,709.34 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், 3,228.32 கோடி ரூபாய் மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

2. 2013-2014 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை சட்டமன்றப் பேரவையில் 2013 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25 ஆம் நாளன்று தாக்கல் செய்யப்பட்ட பின்னர், 'புதுப் பணிகள்' மற்றும் 'புதுத் துணைப் பணிகள்' குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட இனங்களுக்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவதும், இத்திட்டங்களுக்காக எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து விடுவிக்கப்பட்ட தொகையினை அந்நிதிக்கு ஈடுசெய்வதும்தான் இந்தத் துணை மானியக் கோரிக்கையின் முக்கிய நோக்கங்களாகும்.

3. முதியோர் ஓய்வூதியம், மாண்புமிகு முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் உள்ளிட்ட சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கு 2013-2014 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டைவிட 743.24 கோடி ரூபாய் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 41-வருவாய்த் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

4. அனைத்து அரிசி அட்டைதாரர்களுக்கும் நியாய விலைக் கடைகள் மூலமாக சிறப்புப் பொங்கல் பரிசுப் பைகள் வழங்குவதற்காக 281 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்தக் கூடுதல் தொகை "மானியக் கோரிக்கை எண் 13-உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)" என்பதன்கீழ் இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

5. நபார்டு வங்கி நிதியுதவியுடன் பாலங்களை மேம்படுத்துவதற்காக, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கூடுதல் தொகையாக 256 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது.

@ 204 முதல் 208 வரையிலான பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளது.



இதற்கான அடையாள நிதியொதுக்கமாக ரூபாய் 1,000/- "மானியக் கோரிக்கை எண் 21-நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை" என்பதன்கீழ் இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் ஈடுசெய்யப்படும்.

6. திருப்பூரில் பூஜ்ஜியக் கழிவு வெளியேற்றும் அமைப்பை நிறுவுவதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 150 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இந்நிதியாண்டிற்குத் தேவைப்படும் செலவினங்களுக்காக 67.89 கோடி ரூபாய் "மானியக் கோரிக்கை எண் 17-கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)" என்பதன்கீழ் இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் ஈடுசெய்யப்படும்.

முற்பகல் 11-25

7. காஞ்சிபுரம் மாவட்டம் ஓமேகா தொழில் வளாகத்தில் 230/110 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் மற்றும் 110/33-11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் நிறுவுவதற்காக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு 110.57 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இதற்கான அடையாள நிதியொதுக்கமாக ரூபாய் 1,000/- மானியக் கோரிக்கை எண் 14 எரிசக்தித் துறை என்பதன்கீழ் இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் ஈடுசெய்யப்படும்.

8. 2013-2014 ஆம் ஆண்டு நிதிச் சீரமைப்புத் திட்டத்திற்காகத் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 962 கோடி ரூபாய் வட்டியில்லாக் கடனாக அனுமதித்துள்ளது. இத்தொகை மானியக் கோரிக்கை எண் 14 எரிசக்தித் துறை என்பதன்கீழ் இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

9. வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர்கள் மற்றும் குறு வள மைய ஆசிரியர் பயிற்றுநர்களுக்கான சம்பளப் பற்றாக்குறையைக் களைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 125 கோடி ரூபாய் கூடுதலாக அனுமதித்துள்ளது. இதற்கான

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 பிப்ரவரி 20

*அடையாள நிதியொதுக்கமாக ரூபாய் 1,000/- மானியக் கோரிக்கை எண் 43 பள்ளிக் கல்வித் துறை என்பதன்கீழ் இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறுநிதியொதுக்கத்தின்மூலம் ஈடுசெய்யப்படும்.*

*10. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013-2014 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

## 2013-2014 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

| | **கோரிக்கை** | **ரூபாய் ஆயிரத்தில்** | | |
|---|---|---|---|---|
| | | **வருவாய்** | **மூலதனம்** | **கடன்** |
| 1 | மாநிலச் சட்டமன்றம் | 3 | - | 30,80 |
| 2 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 2 | - | - |
| 3 | நீதி நிருவாகம் | 35,77,75 | - | - |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 32 | 3 | 11,29 |
| 5 | வேளாண்மைத் துறை | 88,97,60 | 28,70,38 | 1 |
| 6 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 135,45,55 | 2 | - |
| 7 | மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 22 | 3 | - |
| 8 | பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 5 | - | 99,99 |



2014 பிப்ரவரி 20]

| | **கோரிக்கை** | **ரூபாய் ஆயிரத்தில்** | | |
|---|---|---|---|---|
| | | **வருவாய்** | **மூலதனம்** | **கடன்** |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 108,75,31 | 7 | 7,05 |
| 10 | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 11 | - | 16,99 |
| 11 | முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 12 | - | - |
| 12 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 66,98,47 | 1 | 17,30 |
| 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 379,93,92 | 1 | - |
| 14 | எரிசக்தித் துறை | 4 | 1,153,00,02 | 962,00,00 |
| 15 | சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 3,08,94 | 1 | 1 |
| 16 | நிதித் துறை | 28 | - | 1,21,52 |
| 17 | கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 67,89,26 | 21,09,78 | 32,59,09 |
| 18 | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 4 | - | 36,86,00 |
| 19 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 1,39 | 84,27,81 | 7,49 |

| கோரிக்கை | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|
| | வருவாய் | மூலதனம் | கடன் |
| 20 உயர் கல்வித் துறை | 19,49,52 | 7 | - |
| 21 நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | 45,73,10 | 29 | 1 |
| 22 காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 163,97,79 | 3 | 1 |
| 23 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 31,37,86 | 1,91,10 | - |
| 24 சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 25,91,29 | 61,25,17 | 3,76,43 |
| 25 இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 28,45,10 | 1 | - |
| 26 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 234,26,52 | 2 | 12,80,19 |
| 27 தொழில் துறை | 5 | 8,34,57 | - |
| 28 செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 45,83,19 | 6,49,99 | - |
| 29 சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | 28 | 9,69,68 | - |
| 30 எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 1,16,09 | 24,26,03 | - |



| கோரிக்கை | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|
| | வருவாய் | மூலதனம் | கடன் |
| 31 தகவல் தொழில்நுட்பவியல் துறை | 6 | - | 18,71 |
| 32 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 7,27,87 | 2 | 71,99 |
| 33 சட்டத் துறை | 3,94,49 | - | - |
| 34 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 38 | 216,69,36 | 77,14,34 |
| 35 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 1,82,87 | - | 1,89,99 |
| 36 திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 34,64,20 | 9,90,19 | - |
| 37 மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 5,78,94 | - | - |
| 38 பொதுத் துறை | 89,71,60 | - | 1,06,07 |
| 39 கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | 14 | 23 | 23,22 |
| 40 பாசனம் (பொதுப் பணித் துறை) | 108,75,86 | 1,01 | - |
| 41 வருவாய்த் துறை | 832,94,30 | 1 | 43,99 |
| 42 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 32 | 3 | - |
| 43 பள்ளிக் கல்வித் துறை | 93 | 1 | 87,00,00 |

| **கோரிக்கை** | **ரூபாய் ஆயிரத்தில்** | | |
|---|---|---|---|
| | வருவாய் | மூலதனம் | கடன் |
| 44 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | 6 | 25,67,01 | 21,99 |
| 45 சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 26 | 1,00,00 | 46,00 |
| 46 தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 8,54,99 | - | 55,51 |
| 47 இந்து சமய அறநிலைய துறை (சுற்றுலா, பண்பாடு அறநிலையங்கள் துறை) | 4 | - | - |
| 48 போக்குவரத்துத் துறை | 3,26,83 | 350,01,97 | 18,98 |
| 49 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 41,64,09 | 1 | 12,87 |
| 50 ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 19 | - | - |
| 51 இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 24,34,08 | - | - |
| 52 மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | 31,62,50 | - | - |
| 53 சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை | 1 | - | - |
| 54 வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 17,93,29 | 14 | - |
| **பெருமொத்தம்** | **2,695,38,51** | **2,002,35,12** | **1,221,37,84** |



## 5. அறிவிப்புகள்

### (அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2013–2014, முன்மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2013-2014 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"In pursuance of Clause (2) of Article 205, read with Clause (3) of Article 203, of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the demands for further grants for the Financial Year 2013-2014."

## 6. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2013–2014, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2013-2014 ஆம் ஆண்டின் கூடுதல் செலவினங்கள் குறித்த மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு, மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2013-2014 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 20-2-2014 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள இறுதித் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2013-2014 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

*அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.*

## நிறைவேற்றப்பெற்ற 2013-2014 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

| | கோரிக்கை | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 1 | மாநிலச் சட்டமன்றம் | 3 | - | 30,80 |
| 2 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 2 | - | - |
| 3 | நீதி நிருவாகம் | 35,77,75 | - | - |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 32 | 3 | 11,29 |
| 5 | வேளாண்மைத் துறை | 88,97,60 | 28,70,38 | 1 |
| 6 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 135,45,55 | 2 | - |
| 7 | மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 22 | 3 | - |
| 8 | பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 5 | - | 99,99 |



| | கோரிக்கை | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 108,75,31 | 7 | 7,05 |
| 10 | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 11 | - | 16,99 |
| 11 | முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 12 | - | - |
| 12 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 66,98,47 | 1 | 17,30 |
| 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 379,93,92 | 1 | - |
| 14 | எரிசக்தித் துறை | 4 | 1,153,00,02 | 962,00,00 |
| 15 | சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 3,08,94 | 1 | 1 |
| 16 | நிதித் துறை | 28 | - | 1,21,52 |
| 17 | கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 67,89,26 | 21,09,78 | 32,59,09 |
| 18 | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 4 | - | 36,86,00 |

| கோரிக்கை | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|
| | வருவாய் | மூலதனம் | கடன் |
| 19 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 1,39 | 84,27,81 | 7,49 |
| 20 உயர் கல்வித் துறை | 19,49,52 | 7 | - |
| 21 நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | 45,73,10 | 29 | 1 |
| 22 காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 163,97,79 | 3 | 1 |
| 23 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 31,37,86 | 1,91,10 | - |
| 24 சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 25,91,29 | 61,25,17 | 3,76,43 |
| 25 இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 28,45,10 | 1 | - |
| 26 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 234,26,52 | 2 | 12,80,19 |
| 27 தொழில் துறை | 5 | 8,34,57 | - |
| 28 செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 45,83,19 | 6,49,99 | - |
| 29 சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | 28 | 9,69,68 | - |



| கோரிக்கை | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|
| | வருவாய் | மூலதனம் | கடன் |
| 30 எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 1,16,09 | 24,26,03 | - |
| 31 தகவல் தொழில்நுட்பவியல் துறை | 6 | - | 18,71 |
| 32 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 7,27,87 | 2 | 71,99 |
| 33 சட்டத் துறை | 3,94,49 | - | - |
| 34 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 38 | 216,69,36 | 77,14,34 |
| 35 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 1,82,87 | - | 1,89,99 |
| 36 திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 34,64,20 | 9,90,19 | - |
| 37 மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 5,78,94 | - | - |
| 38 பொதுத் துறை | 89,71,60 | - | 1,06,07 |
| 39 கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | 14 | 23 | 23,22 |
| 40 பாசனம் (பொதுப் பணித் துறை) | 108,75,86 | 1,01 | - |
| 41 வருவாய்த் துறை | 832,94,30 | 1 | 43,99 |
| 42 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 32 | 3 | - |
| 43 பள்ளிக் கல்வித் துறை | 93 | 1 | 87,00,00 |

| | கோரிக்கை | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 44 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | 6 | 25,67,01 | 21,99 |
| 45 | சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 26 | 1,00,00 | 46,00 |
| 46 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 8,54,99 | - | 55,51 |
| 47 | இந்து சமய அறநிலைய துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | 4 | - | - |
| 48 | போக்குவரத்துத் துறை | 3,26,83 | 350,01,97 | 18,98 |
| 49 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 41,64,09 | 1 | 12,87 |
| 50 | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 19 | - | - |
| 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 24,34,08 | - | - |
| 52 | மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | 31,62,50 | - | - |
| 53 | சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை | 1 | - | - |
| 54 | வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 17,93,29 | 14 | - |
| | **பெருமொத்தம்** | **2,695,38,51** | **2,002,35,12** | **1,221,37,84** |



## 5. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2014 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

## 2. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—*தொடர்ச்சி*

### (உ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2014

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

[2014 பிப்ரவரி 20

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) முன்பண மானியக் கோரிக்கைகள், 2014–2015, முன்மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2014-2015 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது

"In pursuance of Clause (2) of Article 206, read with Clause (3) of Article 203, of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the demands for grants in advance, during the Financial Year 2014-2015."

முற்பகல் 11-30

## 7. முன்பண மானியக் கோரிக்கைகள், 2014–2015, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2014-2015 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014-2015 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் அடங்கிய 20-2-2014 தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2014-2015 ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவிற்காக அரசுக்கு முன்பணமாக வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



2014 பிப்ரவரி 20]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

### நிறைவேற்றப்பெற்ற 2014–2015 ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்

| | கோரிக்கை | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|---|
| | | வருவாய் | மூலதனம் | கடன் |
| 1 | மாநிலச் சட்டமன்றம் | 20,14,41 | - | 50,00 |
| 2 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 14,05,10 | - | - |
| 3 | நீதி நிருவாகம் | 330,91,73 | - | - |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 897,50,42 | 99,57,50 | 1 |
| 5 | வேளாண்மைத் துறை | 2,536,05,61 | 68,84,24 | 75,25,00 |
| 6 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 507,21,86 | 27,40,38 | 1 |
| 7 | மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 169,84,66 | 86,07,57 | - |

| கோரிக்கை | | ரூபாய் ஆயிரத்தில் | |
|---|---|---|---|
| | வருவாய் | மூலதனம் | கடன் |
| 8 பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) | 26,76,30 | - | 8,57,06 |
| 9 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 413,33,84 | 80,14,98 | 1 |
| 10 வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 168,68,13 | - | 1 |
| 11 முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | 146,41,02 | - | - |
| 12 கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 239,47,64 | 81,40,52 | 8,13,04 |
| 13 உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | 2,718,33,32 | 262,27,93 | 1 |
| 14 எரிசக்தித் துறை | 4,108,50,12 | 1,964,60,01 | 950,00,06 |
| 15 சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | 5,79,07 | 50,00,01 | 10,00,00 |
| 16 நிதித் துறை | 439,48,99 | 1,000,00,00 | 45,40,12 |
| 17 கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 505,88,62 | 1 | 10,33,03 |



| கோரிக்கை | | ரூபாய் ஆயிரத்தில் | |
|---|---|---|---|
| | வருவாய் | மூலதனம் | கடன் |
| 18 கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) | 72,58,82 | 1,10,00 | 1 |
| 19 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 3,378,50,60 | 123,49,44 | 1 |
| 20 உயர் கல்வித் துறை | 1,669,86,42 | 144,10,10 | 1 |
| 21 நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | 894,53,71 | 2,999,97,66 | 75,00,00 |
| 22 காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 2,207,81,38 | 285,83,50 | 98,35,12 |
| 23 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 94,82,20 | 1 | - |
| 24 சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 97,32,74 | 2 | - |
| 25 இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 96,19,30 | 32,92,00 | - |
| 26 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 533,51,96 | 131,16,53 | 85,00,01 |
| 27 தொழில் துறை | 841,66,06 | 15,02 | 250,00,04 |
| 28 செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 31,65,24 | 1 | - |

| கோரிக்கை | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|
| | வருவாய் | மூலதனம் | கடன் |
| 29 சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | 51,46,99 | 37,78,66 | 1 |
| 30 எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 39,14,64 | 1 | - |
| 31 தகவல் தொழில்நுட்பவியல் துறை | 68,87,08 | 1 | 1 |
| 32 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 428,72,25 | 12,88,04 | 40,00 |
| 33 சட்டத் துறை | 11,17,90 | - | 1 |
| 34 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 3,355,24,22 | 1,659,10,31 | 74,48,37 |
| 35 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 35,13,34 | 6,15,00 | - |
| 36 திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 47,87,64 | 41,64,16 | 1 |
| 37 மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | 47,25,02 | - | - |
| 38 பொதுத் துறை | 433,37,94 | 3 | 38,00,01 |
| 39 கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | 113,38,57 | 451,33,85 | 1 |
| 40 பாசனம் (பொதுப் பணித் துறை) | 730,42,08 | 1,103,97,76 | - |
| 41 வருவாய்த் துறை | 2,951,46,19 | 95,01,74 | 1 |
| 42 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 4,891,84,18 | 1,582,98,70 | 12,50 |



| கோரிக்கை | ரூபாய் ஆயிரத்தில் | | |
|---|---|---|---|
| | வருவாய் | மூலதனம் | கடன் |
| 43 பள்ளிக் கல்வித் துறை | 8,740,19,81 | 125,63,02 | 2,70 |
| 44 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | 147,26,12 | 32,68,51 | 1 |
| 45 சமூக நல மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 1,925,75,99 | 1,55,92 | 1 |
| 46 தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | 19,64,49 | - | 1 |
| 47 இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | 47,18,86 | 1 | - |
| 48 போக்குவரத்துத் துறை | 453,91,08 | 100,07,54 | 2 |
| 49 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 73,32,00 | - | 1 |
| 50 ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 8,770,53,12 | - | - |
| 51 இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 181,25,59 | - | - |
| 52 மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | 141,69,34 | 45,00 | 1 |
| 53 சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை | 1,551,09,22 | - | 1 |
| 54 வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | 194,51,54 | 130,94,79 | - |
| **பெருமொத்தம்** | **58,618,64,47** | **12,821,30,50** | **1,729,57,28** |

[2014 பிப்ரவரி 20

## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2014 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 2. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஊ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2014

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)



2014 பிப்ரவரி 20] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 8. வரவு—செலவுத் திட்டம், 2014—2015, பொது விவாதமும் பதிலுரையும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2014-2015 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின்மீது பொது விவாதம் மற்றும் பதிலுரை. மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களினுடைய குரலினை தமிழக சட்டப் பேரவையிலே தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பிலே எதிரொலிக்க, என்னை சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவராக்கி அழகுபார்த்த எனது அரசியல் ஆசான், தமிழக இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரம், ஏழையெளிய மக்களின் பாதுகாவலன், தாய்மார்களின் தவப் புதல்வன், தமிழக சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, 2014-2015 ஆம் ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்திலே எனது கருத்துகளை இப்பேரவையிலே பதிய வைக்க விழைகின்றேன்.

2014-2015 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே வருவாய் வரவு ரூ.1,27,389.83 கோடியில், வருவாய் செலவினமாக ரூ.1,27,100.47 கோடி போக, மீதமுள்ள தொகை உபரி வருவாய் ரூ.289.36 கோடி எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல கடன் கணக்கிலே விதிகளுக்குட்பட்டு 25,000 கோடி ரூபாய் கடன் பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. விதிகளுக்குட்பட்டிருந்தாலும்கூட, நம் தமிழக அரசு கடனுக்காக நாம் செலுத்துகின்ற வட்டித் தொகை ஏறக்குறைய சுமார் 15,463.90 கோடி ரூபாய் என பொதுமக்களின்மீது கடன் சுமை இந்த ஆண்டும் ஏற்றப்படுகிறது. இந்த ஆட்சி பொறுப்பேற்ற 3 ஆண்டுகளில் மற்றும் இந்த நிதி ஆண்டினையும் சேர்த்து ரூ.50,000 கோடி வட்டியாக பொது மக்களின்மீது சுமையேற்றப்படுகிறது. அதற்கு மாறாக, தமிழகத்திலே வருவாய்

தருகின்ற துறைகளிலே அதிக வருமானம் வரக்கூடிய, அதிகளவு வருவாய் தருகின்ற வணிக வரி வருவாய் குறைந்துள்ளதாகத் தெரிகிறது. அந்த வருவாய் ஏன் குறைந்தது? அந்த வருவாயினை எப்படிப் பெருக்குவது என்பதைத் தமிழக அரசு தெளிவுபடுத்த வேண்டுமென்று விரும்புகின்றேன். அதேபோல, கட்டுமானத் துறையிலும், . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் 2, 3 தினங்களாக மாண்புமிகு உறுப்பினர், நம்முடைய எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் அவையிலே இருந்தபோதே, சில, பல விளக்கங்களை இங்கே அளித்திருக்கின்றேன். எவ்வாறு வரி வருவாய் குறைந்தது, எதனால் குறைந்தது என்பதனையெல்லாம் இங்கே விளக்கமாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு காலகட்டங்களில் இந்தச் சட்டமன்றத்தில் தெரிவித்திருக்கின்றார்கள். உலகளவில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார மந்த சூழ்நிலை இந்தியாவில் மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது. அதற்குக் காரணம் மத்திய அரசினுடைய மிகப் பெரிய பொருளாதாரப் பின்னடைவு, அவர்களுடைய பொருளாதாரக் கொள்கை; இதன் காரணமாக இந்தியாவில் மிகப் பெரிய பொருளாதாரச் சரிவு ஏற்பட்டது. அது, இந்தியாவில் ஒரு மாநிலமாக இருக்கின்ற தமிழ்நாட்டையும் பாதித்திருக்கின்றது என்பதெல்லாம் இங்கே விளக்கமாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால், வாங்கப்படுகின்ற கடன் ஒரு வரம்புக்குள்தான் இருக்கிறது. அதற்குச் செலுத்தப்படுகின்ற வட்டியும், இந்திய அரசு ஏற்படுத்தியிருக்கின்ற வரம்புக்குள்தான் இருக்கிறது என்பதனை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். குறிப்பாக, இந்தியாவில் மூன்று மாநிலங்கள்தான் குறைவான வட்டி செலுத்துகின்ற மாநிலங்களாக இருக்கின்றன. அதில் ஒன்று தமிழ்நாடு என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள்.



**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** அதேபோல கட்டுமானத் துறையிலும், பத்திரப் பதிவுத் துறையிலும் வருவாய் குறைந்துள்ளதாக நிதிநிலை அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த வருவாய் குறைவதற்குக் காரணம், தமிழகத்திலே கட்டுமானப் பொருட்களின் விலை உயர்ந்துவிட்டது. குறிப்பாக மணல் விலை உச்சத்தைத் தொட்டுள்ளதாக தமிழக லாரி உரிமையாளர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். தற்போது, தமிழகமெங்கும் அனைத்து மாவட்டங்களிலும் 34 இடங்களில் மணல் இருப்பு வைத்து விற்பனை செய்வதாகச் சொல்லப்படுகிறது.

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணல் விற்பனையைப் பொறுத்தமட்டில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நல்ல பல சீர்திருத்த நடவடிக்கைகளின் காரணமாக இப்பொழுது விலை கட்டுப்பாட்டுக்குள் அடக்கி வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற சேலம் மாவட்டத்தில் மணல் இல்லை, ஈரோடு மாவட்டத்தில் ஆற்றுப்படுகையில் மணல் இல்லை, கோயம்புத்தூரில் மணல் இல்லை, நீலகிரியில் மணல் இல்லை. நமக்குக் கிடைக்கின்ற மணல் ஆதாரமே காவேரியிலிருந்து கரூர் மாவட்டம், திருச்சி மாவட்டம், நாகப்பட்டினம் மாவட்டத்தில் சில இடங்களில்தான். மற்ற மாவட்டங்களிலிருந்து, மணல் இல்லாத இடங்களிலிருந்து லாரிகள் மிகப் பெரிய அளவில் வந்து கரூர், திருச்சி மாவட்டங்களில் குவியத் தொடங்கின. மாநிலம் முழுவதும் தட்டுப்பாடு இல்லாமல் ஒரே அளவில் சீராக மணலை கிடைக்கச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் எடுத்த நல்ல பல நடவடிக்கைகளின் காரணமாக அனைத்து மாவட்டங்களிலும் stockyards திறக்கப்பட்டிருக்கின்றன. மணல் எல்லாம் எடுத்துக்கொண்டு வந்து அந்த stockyards-ல் வைக்கப்பட்டிருக்கின்றது. Stockyards அனுமதி பெற்றவர்களையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றது. விலைகள் ஏறாத வகையில் இன்றைக்கு அனைத்துப் பகுதிகளிலும் மணல் தாராளமாகக் கிடைக்கின்றது.

தேவைப்படுகின்ற மணலை மாண்புமிகு உறுப்பினர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பெற்றுக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைத்தான் நானும் சொல்ல வருகிறேன். பல இலட்சம் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கின்ற முக்கிய ஆதாரமாக விளங்குகின்ற மணலின் விலையை தமிழக அரசு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழ்நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சி விகிதம் இந்திய நாட்டிலேயே மிகவும் குறைவாக 4.14 சதவீகிதமாக உள்ளது. அதாவது, தேசிய வளர்ச்சி விகிதமான 4.9 சதவீதத்தைவிட இது குறைவாக உள்ளது. இதற்குக் காரணம் தமிழ்நாட்டின் முதுகெலும்பாக உள்ள உற்பத்தித் துறை மற்றும் சேவைத் துறைக்குத் தொடரும் மின் வெட்டுப் பிரச்சினையே என மத்திய திட்ட ஆணையம் தெரிவித்துள்ளது. மாநிலத்தினுடைய மொத்த உற்பத்தி மதிப்பு உயர்வு GDP growth 2010-2011-ல் 13.12 சதவீதமாக இருந்தது. 2011-2012-ல் 7.42 சதவீதமாகவும், இப்பொழுது 4.14 சதவீதமாகவும் தொடர்ந்து குறைந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல பத்திரப் பதிவு வருவாய் குறைவதற்குக் காரணம், தமிழகத்திலே அரசாங்க வழிகாட்டி மதிப்பு மிக அதிகமாக உயர்த்தப்பட்டதுதான் எனத் தெரிகிறது. ஆகவே, அரசு பத்திரப் பதிவு வழிகாட்டி மதிப்பை உரிய அளவில் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

காவல் துறையை நவீனப்படுத்த காவல் துறைக்காக சென்ற ஆண்டைவிட கூடுதலாக சுமார் 5,186.20 கோடி ரூபாய் அளவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், தமிழகத்திலே சட்டம்-ஒழுங்கு இன்னும் சரியாகப் பராமரிக்கப்பட வேண்டும் என்பதைக் குற்றமாகச் சொல்லாமல், குறைகளைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். உதாரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளிலே 4,000 கொலைக் குற்றங்களும், அதிலும் குறிப்பாக



சென்னை, காஞ்சிபுரம் மாவட்டங்களிலே அதிக அளவில் கொலைக் குற்றங்கள் நடந்துள்ளதாகத் தெரிகிறது. கொள்ளைக் குற்றங்கள் 1,100-க்கு அதிகமாகவும், செயின் பறிப்புச் சம்பவங்கள் 953 ஆகவும், திருட்டுக் குற்றங்கள் 1,000-ஐத் தாண்டி நடந்ததாகவும் தெரிகிறது. அதேபோல மாநிலக் காவல் துறையினுடைய தற்போதைய புள்ளிவிவரப்படி அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, தமிழக சட்டமன்றத்திலே கவர்னர் உரை நிகழ்த்திய அன்றே சென்னைப் புறநகர்ப் பகுதிகளில் ஹெல்மெட் அணிந்த கொள்ளையர்களால் 7 இடங்களில் 38 சவரன், சுமார் 8 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நகைப் பறிப்புச் சம்பவங்கள் நடந்துள்ளன. சேலம் மாவட்டத்திலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், இந்த மாதிரி குற்றச்சாட்டு சொல்லும்போது ஆதாரம் இல்லாமல் சொல்லக்கூடாது. (குறுக்கீடு)

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டு சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், ஆதாரத்தைக் காட்டிவிட்டுப் பேசுங்கள். (குறுக்கீடு) குற்றச்சாட்டு சொல்லும்போது என்னிடத்தில் காட்டிவிட்டுத்தான் சொல்ல வேண்டும். மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்களது கவனத்திற்கு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெருமைமிக்க இந்த மாமன்றத்தில், ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கான தனது பதிலுரையில் இந்தியாவில் இருக்கின்ற மாநிலங்களிலேயே தமிழகத்தில்தான் குற்ற நிகழ்வுகள் குறைவாக இருக்கின்றன (மேசையைத் தட்டும் ஒலி) என்ற விவரத்தினை புள்ளிவிவரங்களோடு, ஆதாரமான புள்ளிவிவரங்களோடு-statistics-புள்ளிவிவரங்களை மத்திய அரசு வெளியிட்டிருக்கின்ற புள்ளிவிவரங்களோடு இங்கே எடுத்துரைத்தார்கள். அப்பொழுது மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இந்த

அவையில் இல்லை என்று நினைக்கின்றேன். ஆகவே, நீங்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பதிலுரையை வாங்கிப் படித்து, தெளிவு பெற்று அதற்குப் பின்னால் இந்த அவையில் பேச வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் அனைத்துச் செயல்பாடுகளையும் உள்ளடக்கிய பதிலுரை நகல் இன்றைக்கு அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும் மேசைமீது வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படித்துவிட்டு அவருடைய பேச்சைத் தொடர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை. நாங்கள் எதுவும் குற்றமாகச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-40

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இல்லை, நீங்கள் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் இங்கே குற்றங்கள் கூடுதல் என்று குற்றச்சாட்டாகச் சொன்னீர்கள். அதற்குத்தான் நான் இந்தப் பதிலைச் சொல்ல வேண்டிய கட்டாயச் சூழல் ஏற்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்களின் தக்க பதிலை, புள்ளி விவரங்களுடன்கூடிய அந்த அறிக்கையை நீங்கள் படித்துப் பார்க்க வேண்டும். அடுத்து மற்ற விவரங்களுக்குச் செல்ல வேண்டுமென்று மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதாரணமாக, காஞ்சிபுரம் மாவட்டத்தில் செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதியிலே 30 கொலைகள், அவற்றில் 14 அரசியல் கொலைகள். நேற்றைக்கு முந்தைய நாள்கூட கொலை நடந்த அந்த வீட்டிற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்று விசாரித்துவிட்டு வந்திருக்கிறார்கள்.



14 அரசியல் கொலைகள் உங்கள் கட்சி, எதிர்க்கட்சி, எங்கள் கட்சி என்று எல்லாக் கட்சிகளிலும் நடந்திருக்கின்றன. அதையெல்லாம் முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்குத்தான் கோரிக்கைகளை வைக்கிறோமே தவிர குற்றச்சாட்டு சொல்ல வேண்டுமென்று விரும்பவில்லை. அதேபோல், Police Crime Records Bureau record-ல். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியே தவறாக இருக்கிறது. ஏதாவது ஒரு குற்ற நிகழ்வில் நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் அதை இங்கே எடுத்துச் சொல்லலாம். பொதுவாக நடவடிக்கை இல்லை, நடவடிக்கை இல்லை என்றால், எந்தக் குற்ற நிகழ்வில் நடவடிக்கை இல்லை? அனைத்துக் குற்ற நிகழ்வுகளிலும் உறுதியாக, உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை நான் இங்கே தெளிவுப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது இந்த ஊரில் இத்தனைக் கொலைகள் நடந்திருக்கின்றன, அந்த ஊரில் இத்தனைக் குற்றங்கள் நடந்திருக்கின்றன, நடவடிக்கை இல்லை என்று சொல்கிறார். குற்றங்கள் நிகழாத நாடு உலகில் கிடையாது. குற்றங்கள் நிகழாத ஊர் எந்த நாட்டிலும் கிடையாது. ஒரு நாட்டை எடுத்துக்கொண்டால், பல்வேறு மாநிலங்களை எடுத்துக்கொண்டால், குற்றங்களே நிகழாத மாநிலம் என்று எதுவும் கிடையாது. குற்றங்களின் விகிதத்தைத்தான் கணக்கில் எடுத்துக்கொள்வோம். அதாவது, ஒரு இலட்சம் பேருக்கு எத்தனைக் குற்றங்கள் நடந்திருக்கின்றன என்பதைக் குறிப்பிட்டு, அதன்படிதான் இந்த விகிதாச்சாரம் குறிப்பிடப்படுகிறது. அதன்படி, மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதத்திற்கு நான் பதிலுரை

ஆற்றியபோது மாண்புமிகு உறுப்பினர் வரவில்லை. அது இந்த அரசினுடைய தவறல்ல. அன்றைக்கு மிக விரிவாக, சட்டம்-ஒழுங்கைப் பற்றி, குற்றங்களின் நிகழ்வுகளைப் பற்றி, எப்படி தமிழ்நாட்டில் இந்த அரசு, எனது தலைமையிலான அரசு, பொறுப்பேற்ற பின்னர் படிப்படியாக குற்றங்கள் குறைந்து கொண்டே வருகின்றன என்பதையெல்லாம் (மேசையைத் தட்டும் ஒலி) விரிவாக எடுத்துச்சொல்லி, மத்திய அரசே வெளியிட்ட புள்ளிவிவரங்களின்படி பிற மாநிலங்களிலுள்ள குற்ற நிகழ்வுகளைவிட இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் குற்றங்களின் நிகழ்வு மிகவும் குறைவாக உள்ளது என்பதையெல்லாம் நான் சுட்டிக்காட்டினேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதையெல்லாம் சொன்ன பிறகுகூட, அதைச் சிந்தையில் கொள்ளாமல் குற்றச்சாட்டாகவே சொல்லிக்கொண்டிருந்தால் அதில் எந்த அர்த்தமும் இல்லை.

நான் மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்திற்கு ஆற்றிய உரையின் பிரதிகள் இன்றைக்கு அனைத்து உறுப்பினர்களின் மேசைகளிலும் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த உரையைப் படித்துப் பார்த்தாலே மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு வேண்டிய பதில்கள் அதிலேயே இருக்கும். இதைச் சொன்ன பிறகுகூட, செங்கல்பட்டில் இத்தனைக் கொலைகள் நடந்தன, இன்னொரு ஊரில் இத்தனைக் குற்றங்கள் நிகழ்ந்தன என்றால், குற்றங்கள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. குற்றங்களின் எண்ணிக்கை என்ன? விகிதாச்சாரம் என்ன என்பதைத்தான் பார்க்க வேண்டும். குற்றங்கள் நிகழ்ந்து, காவல் துறை, இந்த அரசு, நடவடிக்கை எடுக்கவில்லையா என்பதைத்தான் பார்க்க வேண்டும். நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எந்தக் குற்ற நிகழ்விலாவது நடவடிக்கை இல்லை என்பதை ஆதாரங்களுடன் நிரூபித்தால் தேவையான நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், பதிலுரையில் பக்கம் 60-ல் பாருங்கள், விளக்கமாக அதில் இருக்கிறது.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் நடவடிக்கை எடுக்கலாம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு ஒரு கோரிக்கையாக வைக்க விரும்புகின்றேன்.



**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது உரையின் பிரதிகள் இன்றைக்கு அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. அது மேசையிலேயே இருக்கிறது. இப்போதுகூட ஒன்றும் தாமதமாகிவிடவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தப் புத்தகத்தை எடுத்து 58-வது பக்கத்தைப் படிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். “குற்றங்கள் குறைந்தன” என்ற தலைப்பின்கீழ் நான் சொன்ன புள்ளிவிவரங்கள் அனைத்தும் உள்ளன, படித்துப் பார்க்க வேண்டும்.

*முற்பகல் 11-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பக்கம் 58-லிருந்து 60 வரை படித்துப் பாருங்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பதிலுரையை ஏற்கெனவே, நேற்றே அனுப்பியிருந்தால் படித்துப் பார்த்துவிட்டு, இந்தக் கேள்விகளையெல்லாம் கேட்காமல் இருந்திருப்பேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் குற்றம் சொல்ல வேண்டும் என்பதற்காக இதையெல்லாம் சொல்லவில்லை. மாண்புமிகு தமிழக முதல்வரின் கவனத்திற்குக் கொண்டுசென்றால் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான் இதைச் சொல்கிறேனே தவிர உங்களைக் குறை சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. எந்த நிகழ்வில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று மாண்புமிகு முதலமைச்சர் ஒன்றைக் கேட்டார். **என்பதை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஆதாரம் இல்லாமல் பேசக் கூடாது (குறுக்கீடுகள்). நீங்கள் ஆதாரத்தை என்னிடம் காட்டுங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் இப்படி எழுந்து நின்று பேசக் கூடாது. உங்கள் கட்சி துணைத் தலைவர் பேசிக்கொண்டிருக்கின்றார் அல்லவா? நீங்கள் எழுந்து நின்று பேசினால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை இல்லையென்று சொல்ல வேண்டுமென்றால், இப்படி அல்ல. வாய் வழியாகச் சொல்வது அல்ல. அதை எழுத்து பூர்வமாக ஒரு புகாராகத் தர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆதாரம் இல்லாமல் பேசியவை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) உட்கார்ந்துகொண்டு யாரும் பேசக் கூடாது. திரு. வி.சி. சந்திரகுமார், இது முறையல்ல. (குறுக்கீடு)

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வாடா, போடா' என்று பேசுகிறார்கள். அதைக் கட்டுப்படுத்துங்கள். இல்லையென்றால் நாங்களும் பேசுவோம். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாரும் எந்தக் கருத்தையும் கூறவில்லை. எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் சரியான கருத்தை சொல்ல முடியாத காரணத்தினால், ஏதாவது ஒரு காரணத்தைக் காட்டி, சப்தம் போட்டு வெளியேறுவதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கின்றார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார், இந்த மாதிரி உட்கார்ந்துகொண்டு பேசுவது முறையல்ல. உங்கள் கட்சி துணைத் தலைவர் அவர்கள்தான் பேசிக்கொண்டிருக்கின்றார். (குறுக்கீடு) அவர் பேசிக்கொண்டிருக்கின்றார். (குறுக்கீடு) இதெல்லாம் முறையல்ல. நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடு). இந்த மாதிரி கை நீட்டிப் பேசக் கூடாது. நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். உட்காருங்கள். அவைத் தலைவரைப் பார்த்து நீங்கள் கை நீட்டிப் பேசுவது முறையல்ல. நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். இந்த மாதிரி முறையில்லாமல் பேசினால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடு). அந்த மாதிரியெல்லாம் யாரும் பேசவில்லை, என்னுடைய கவனத்திற்கு வரவில்லை. (குறுக்கீடு) அவைத் தலைவரைப் பார்த்து கை நீட்டிப் பேசுவது முறையல்ல. (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் ஏதாவது குற்றச்சாட்டு இங்கு சொல்வார்களானால், அந்தக் குற்றச்சாட்டினுடைய ஆதாரத்தை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களிடத்தில் கொடுத்து, மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் அதில் உண்மைத்தன்மை இருக்கின்றது என்று அதை உறுதி செய்தால் அவற்றை அவைக் குறிப்பில் பதிய வைக்கலாம் அல்லது நீக்கிவிடலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே அதை நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன். ஆதாரத்தைக் கொண்டு வந்து காட்டிவிட்டு, நான் அந்த ஆதாரத்தைப் பார்த்துவிட்டு அனுமதி அளித்த பிறகுதான் நீங்கள் அவையில் பேச வேண்டும். ஆகவே, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையில் 24,503 காவலர் பணியிடங்கள் காலியாக இருப்பதாகவும், 10,099 நபர்கள் மட்டுமே தேர்வு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள நபர்கள் தேர்வு செய்யப்பட்டு அந்தப் பணியிடங்களிலே அமர்த்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் அனைத்து உள்ளாட்சித் துறைத் திட்டங்களுக்காக 5,128.70 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் விதி 110-ன்கீழ், தமிழகத்திலுள்ள அனைத்து நகராட்சி, பேரூராட்சிகளிலும் 2012-2013 ஆம் நிதியாண்டிற்காக பாதாளச் சாக்கடைத் திட்டம் கொண்டு வரப்படுவதாகத் தெரிவித்திருந்தார்கள். இந்த நிதிநிலை அறிக்கையிலே எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே, தமிழகத்தில் அனைத்து நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் நடைபெறுகின்ற குடிநீர்த் திட்டப் பணிகளை, கோடைக் காலம் வருவதையொட்டி, விரைந்து செயலாற்றிட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இயற்கை வஞ்சித்துவிட்ட காரணத்தினால், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், குடிநீர்த் தட்டுப்பாடு வரக்கூடாது என்பதற்காக முன்னெச்சரிக்கையாக 681 கோடி ரூபாயை இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத் தயவு செய்து எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பார்த்து தெரிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம்கூட மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் எதிர்க்கட்சிகள் கோரிக்கை வைக்காவிட்டாலும் அவர்களுடைய தொகுதியில் வளர்ச்சித் திட்டங்கள் நடைபெறுவதாகக் கூறினார்கள். கேட்காததைக்கூட கொடுத்துவிட்டீர்கள். கேட்பதைக் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். இதுதான் எங்களுடைய கோரிக்கை. ஆனால், எங்களுடைய விருகம்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. பார்த்தசாரதி அவர்கள், சட்டமன்ற உறுப்பினர். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் என்ன இருக்கிறது என்பதைப் படித்துவிட்டு, அதைத் தெளிவாகப் புரிந்துகொண்டு அதன் பிறகு கருத்து சொல்ல வேண்டும். அவர் இப்பொழுது காவல் துறையைப் பற்றிக் குறிப்பிட்டார். இதில் இந்த அரசு



பொறுப்பேற்றது முதல் 24 ஆயிரத்து 503 புதிய காவலர் மற்றும் அலுவலர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்று இருக்கிறது. அடுத்த வரியில் "இந்தியாவிலேயே முதல் முறையாகத் தொடங்கப்பட்டுள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படைத் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிந்தனையில் உதித்த உன்னதத் திட்டமாகும். ஏற்கெனவே உறுதியளித்தவாறு இத்திட்டத்திற்கென 10 ஆயிரத்து 99 நபர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்" என்று இருக்கிறது. அந்த எண்ணிக்கையிலிருந்து இந்த எண்ணிக்கையைக் கழித்துவிட்டு, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் 24 ஆயிரத்து 503 புதிய அலுவலர்களை நியமித்ததாகச் சொல்கிறார்கள். ஆனால், 10 ஆயிரத்து 99 நபர்கள்தான் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். மீதமுள்ளவர்களை உடனடியாகப் பணியில் அமர்த்த வேண்டும் என்கிறார். முதலில் குறிப்பிட்டது காவலர் பணியிடங்கள். 24 ஆயிரத்து 503 ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட, sanction அளிக்கப்பட்ட காவலர் பணியிடங்கள்.

இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது இளைஞர் படை. அது புதிதாக இந்த அரசு உருவாக்கிய இளைஞர் படை. (மேசையைத் தட்டும் ஒலி) அது இந்தியாவிலேயே வேறு எங்கும் கிடையாது. இதுவரை காவல் துறையிலும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு தனியாக ஆட்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள். இதற்குத்தான் 10 ஆயிரத்து 99 நபர்கள் தேர்வு செய்யப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டது. அந்தத் தேர்வு முடிந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த எண்ணிக்கையையும், இந்த எண்ணிக்கையையும் போட்டு குழப்பிக் கொள்ளக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Tamil Nadu Police Strength and Executive Strength in Tamil Nadu Police Stations, 1-1-2014, அதில் 19 ஆயிரத்து 685 பணியிடங்கள் காலியாக இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவிலே இது நடக்கவிருக்கிறது. அந்த 10 ஆயிரத்து 503 சிறப்புக் காவலர் பணியிடங்கள் போக மீதமுள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையில் காலிப் பணியிடங்களை நிரப்புவது என்றால் நினைத்த மாத்திரத்தில் உடனடியாக செய்யக்கூடிய காரியம் அல்ல. அதற்கென்று விதிமுறைகள் இருக்கின்றன, அதற்கென்று ஒரு நடைமுறை இருக்கிறது. அதற்கென்று குறிப்பிட்ட procedure இருக்கிறது. அதன்படி எத்தனை பணியிடங்களை நிரப்ப வேண்டுமோ, அதற்கு Uniformed Services Recruitment Board என்று ஒரு வாரியம் இருக்கிறது; அதுதான் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள் விளம்பரம் கொடுக்க வேண்டும். இந்தப் பணியிடங்களில் தேர்வு செய்யப்பட விரும்புவோர் விண்ணப்பிக்கலாம் என்று சில தேதிகள் கொடுக்கிறார்கள். அதன் பிறகு விண்ணப்பங்கள் பெறப்படும். அதன் பிறகு பல்வேறு சோதனைகள், test-கள், தேர்வுகள் நடத்தப்படுகின்றன. அதன் பிறகுதான் அவர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள். Written Test இருக்கிறது, Physical Efficiency Test இருக்கிறது. Physical Measurements Test இருக்கிறது. இப்படிப் பல்வேறு சோதனைகள், தேர்வுகள் உள்ளன. அவையெல்லாம் முடிய வேண்டும். அதன் பிறகுதான் இறுதித் தேர்வு அறிவிக்கப்படும். அதன் பின்னர் அவர்களுக்குக் குறைந்தபட்சம் 7 மாத காலம் பயிற்சி அளிக்க வேண்டும். ஆகவே, காவல் துறையில் பணியிடங்களை நிரப்புவது என்றால் குறைந்தபட்சம் அந்த procedure-ஐ complete செய்வதற்கு ஒன்றரை ஆண்டு காலம் பிடிக்கும். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்கிறார் என்பதற்காக உடனடியாக யாரையும் நாம் பணியில் அமர்த்த முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** சேலம் மாநகரத்தில் அனைத்துப் பகுதிகளுக்கும் மேட்டூரிலிருந்து போதிய குடிநீர் வந்தாலும், சேலம் மாநகர மக்களுக்கு 10, 15 நாட்களுக்கு ஒரு முறைதான் குடிநீர் கிடைக்கின்றது. ஆகவே, சேலம் மாநகரத்திற்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவரின் கட்சித் தலைவர்கூட 4 நாட்களுக்கு முன்பாக பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்தார்கள். சேலம் மாநகருக்கு மூன்று மாதங்களுக்கு முன்பாகவே குடிதண்ணீர் வழங்கப்பட்டிருக்கும். அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, தேசிய நெடுஞ்சாலையில்—அனுமதி கொடுக்காமல், கிட்டத்தட்ட 6 மாதங்கள் போராடிய பின்புதான்—அனுமதி கொடுக்கப்பட்டு, கிட்டத்தட்ட 2.19 கிலோ மீட்டர் தூரம்தான், அதிக தூரம்கூட கிடையாது. 2.19 கிலோ மீட்டர் தூரத்திற்கு அனுமதி கொடுக்காமல், கிட்டத்தட்ட 3, 4 மாதங்களாக மத்திய அரசு இழுத்தடித்த பின்புதான், இப்பொழுது போடப்பட்டுள்ளது. விரைவாக சேலம் மாநகராட்சி முழுவதும் நிறைவான குடிதண்ணீர் வழங்கப்படவிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். இந்தக் குடிநீர்த் திட்டம் வருவதற்கு முன்பாகவே, நீங்கள் அங்கிருக்கும் அதிகாரிகளை அழைத்து ஆய்வு நடத்தியிருக்கலாம். குடிநீர் வடிகால் வாரியத்தில் கேட்டீர்களென்றால் தெரியும். சேலம் மாநகராட்சியின் தற்போதைய மக்கள் தொகை எட்டரை இலட்சம் ஆகும். ஒரு நபருக்கு 100 லிட்டர் என்றால்கூட, எட்டரை கோடி லிட்டர் தண்ணீர் போதும். ஆனால், இந்தக் குடிநீர் திட்டம் வருவதற்கு முன்பாகவே 71 எம்.எல்.டி. 71 மில்லியன் லிட்டர், 7 கோடி லிட்டர் தண்ணீர் வருகிறது. இரண்டு நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் விநியோகிக்கலாம் அல்லது மூன்று நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் விநியோகிக்கலாம். சீரான குடிநீர் விநியோகம் இல்லை. அதைச் சீர் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியில் அவர்கள் முறையாக திட்டம் தீட்டாத காரணத்தினாலும், ஒரு திட்டத்தை உருவாக்குகின்ற நேரத்தில், எவ்வளவு குடி தண்ணீர் தேவைப்படுகிறது, எத்தனைக் குடியிருப்புகள் இருக்கின்றன, அந்தக் குடியிருப்புகளுக்கு எவ்வளவு எம்.எல்.டி, தண்ணீர் தேவைப்படுகிறது, ஒரு நாளைக்கு எத்தனை லிட்டர் குடி தண்ணீர் கொடுக்க வேண்டும் என்பனவற்றைக் குறித்து ஆய்வு செய்யாமலும், தான்தோன்றித் தனமாக சில திட்டங்களைத் தீட்டிய காரணத்தினாலும், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், குடி தண்ணீர் விநியோகத்தைப் பொறுத்தவரையில் அந்தத் திட்டங்களை மறுபரிசீலனை செய்து, மக்கள்தொகை கணக்கெடுத்து, அந்த மக்கள்தொகைக்கேற்ப திட்டம் வடிவமைத்து, குடி தண்ணீர் பெற்று, தற்போது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு, ஊராட்சிக்கு 40 லிட்டர் தண்ணீரும், பேரூராட்சிக்கு 70 லிட்டர் தண்ணீரும், நகராட்சிக்கு 90 லிட்டர் தண்ணீரும், மாநகராட்சிக்கு 135 லிட்டர் தண்ணீரும் கொடுப்பதற்குரிய நடவடிக்கையை எடுத்து வருகிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகராட்சிக்கு, ஒரு தனி நபருக்கு, ஒரு நாளைக்கு 135 லிட்டர் தண்ணீர் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது கட்சியின் விருகம்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. பார்த்தசாரதி அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகக் கட்டடம் கட்ட 27-6-2011, 22-1-2013 மற்றும் 14-11-2013 ஆகிய நாட்களில் கடிதங்கள் எழுதியும்,



இதுவரை சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் கட்டப்படவில்லை. அதுபோல எழும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. நல்லதம்பி அவர்களுடைய தொகுதியில் புரசைவாக்கம், பிரிக்க்லின் சாலையில் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி கோயில் பக்கத்து கட்டடத்தில் மதுபானக் கடை எண் 353-ஐ இடமாற்றம் செய்யச் சொல்லி 20-7-2011-லிருந்து 14-2-2013 வரை பல கடிதங்களை எழுதியும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை நேரில் சந்தித்தும், இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, மேற்கண்ட பணிகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவை குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே சொல்லியிருந்தால் அவை உடனடியாக நிறைவேற்றப்பட்டிருக்கும். ஏதாவது இடம் தேர்வு செய்கின்ற நேரத்தில், இடம் சரியாக கிடைக்காதபட்சத்தில் வேண்டுமென்றால் அது நிலுவையில் இருக்கும். இடம் கண்டுபிடிக்கப்பட்டு, உடனடியாக கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. பார்த்தசாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பார்த்தசாரதி, இதில் point of order ஒன்றும் இல்லை. உங்கள் கட்சித் துணைத் தலைவர்தான் பேசிக்கொண்டிருக்கிறார்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** சட்டமன்ற உறுப்பினர் அலுவலகக் கட்டடம் கட்ட இடம் அடையாளம் காணப்பட்டு, பொதுப் பணித் துறையால் ஒப்படைக்கப்படாமல் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஏதாவது ஒரு இடத்தைக் காட்டலாம். அந்த இடம் கட்டடம் கட்டுவதற்கு உகந்ததா என்பதையும் அரசு பரிசீலனை செய்கிறது. சில இடங்களில் கட்டடம் கட்ட உகந்ததாக இல்லாதபட்சத்தில் வேறு இடத்தைத் தேர்வு செய்து கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் பேச ஆரம்பித்து 30 நிமிடங்கள் ஆகிவிட்டன. நீங்கள் வேறு சப்ஜெக்ட்டுக்குச் செல்லுங்கள். 2 நிமிடங்களில் உங்கள் உரையை நிறைவு செய்யுங்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** பொது மக்கள் நலனுக்காக சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் குறித்துதான் கேட்கிறேன். வேறு எதுவும் கேட்கவில்லையே? அதற்குப் பின்னாலே உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பல கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் பேச ஆரம்பித்து 30 நிமிடங்களுக்குமேல் ஆகிவிட்டன. சபையை குறிப்பிட்ட நேரத்திற்குள் நான் முடிக்க வேண்டும் இல்லையா? இன்னும் நிறைய அலுவல்கள் இருக்கின்றன. இன்று Finance bills ஆய்வு செய்ய வேண்டும்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, இடம் காண்பிக்கப்பட்டிருக்கிறது. பொதுப் பணித் துறையால் இடம் ஒப்படைக்கப்படவில்லை. அதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

நண்பகல் 12-00

சேலம் மாநகராட்சியிலே பாதாளச் சாக்கடைத் திட்டப் பணி செய்து வந்த ஒப்பந்ததாரர்கள் காலதாமதம் செய்கின்றபடியால், terminate செய்துவிட்டார்கள். அந்த ஒப்பந்ததாரர்கள் சேலம் மாநகரம் முழுவதும் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்காக தோண்டிய குழிகள் பாதியிலேயே திறந்து, சரியாக மூடாத நிலையில் இருப்பதால் பொது மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். எனவே, அந்தப் பாதாளச் சாக்கடைப் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



சேலம் மாநகரத்தில் அனைத்துப் பகுதிகளிலும் தேங்கிக் கிடக்கின்ற குப்பைகளை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தவறான தகவலைக் கொடுக்கக்கூடாது. ஏற்கெனவே பாதாளச் சாக்கடைப் பணிகளை நிறைவு செய்திருக்கிறார்கள். அநேகமாக, தமிழகத்திலேயே மாநகராட்சிகளில் சாலைகளை மேம்படுத்துவதற்காக சென்னை மாநகராட்சியைத் தவிர்த்து, சேலம் மாநகராட்சிக்குத்தான் அதிக நிதியை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். பல்வேறு சாலைகள் சீரமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் வேறு சப்ஜெக்ட்டுக்குச் செல்லுங்கள். நேரம் இல்லை. முப்பது நிமிடத்திற்குமேல் ஆகிவிட்டது. உரையை சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடு) நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. வேறு அலுவல்கள் இருக்கின்றன. உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** எதைச் சொன்னாலும் முடியுங்கள் என்று சொல்லிவிடுகிறீர்கள்.

வருவாய்த் துறையில் புதிதாக 20 வட்டங்கள் ஏற்படுத்துவதாகத் தெரிகிறது. பொது மக்களின் நலன் கருதி, புதிய வட்ட அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வருவாய் வட்டம் மூலமாக, மக்களைத் தேடி அதிகாரிகள் சென்று, பட்டா மாறுதல், முதியோர் உதவித் தொகை, திருமண உதவித் திட்டங்கள் போன்ற அரசின் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு சுமார் 4 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதை தேசிய முற்போக்குத் திராவிட கழகம் சார்பில் வரவேற்கின்றோம்.

அதே நேரத்தில், மிகவும் பின்தங்கிய ஏழை மக்களுக்கு இந்த உதவிகள்— எல்லோருக்கும் என்று நான் சொல்லவில்லை— கிடைக்காமல் இருக்கின்ற மக்களுக்கும் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புறம்போக்கு இடங்களில், களத்துப் புறம்போக்கு மற்றும் ஊர் நத்தம் போன்ற இடங்களில் 25 ஆண்டுகளுக்கு மேலாகக் குடியிருக்கின்றார்கள். அவர்களின் வாக்காளர் அடையாள அட்டை, மின் இணைப்பு மற்றும் குடும்ப அட்டை ஆகியவற்றை வைத்து, அந்தப் பகுதிகளிலே வாழுகின்ற ஏழை, எளிய மக்களுக்குப் பட்டா வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, எனது சேலம் வடக்கு சட்டமன்றத் தொகுதியிலே, 6-வது கோட்டம், 7-வது கோட்டம், 8-வது கோட்டம், 12-வது கோட்டம், 14-வது கோட்டம், 15-வது கோட்டம் மற்றும் 22-வது கோட்டம் ஆகிய பகுதிகளில், 25, 30 ஆண்டுகளுக்கு மேலாக வசிக்கின்ற மக்களுக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடற்ற ஏழை, எளிய மக்களுக்கு, தாமாகவே ஒரு இல்லத்தினை உரிமையாக்க ஏதுவாக வருவாய்த் துறை அரசாணை (நிலை) எண் 21-ன்கீழ் வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் உள்ளது. இதன்படி, வீடற்ற ஏழைக் குடும்பத்தின் ஆண்டு வருவாய், ஊரகப் பகுதியில் ரூபாய் முப்பதாயிரமும் அல்லது அதற்குக் கீழும், நகர்ப்புறப் பகுதியில் ரூபாய் ஐம்பதாயிரமும் அல்லது அதற்குக் கீழும் உள்ளவர்கள் வீட்டுமனை பெற தகுதியுள்ளவர் ஆவார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பதவியேற்ற பிறகு, முதலாமாண்டு ஒரு இலட்சம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, சாதனை அளவாக 1,21,804 பயனாளிகளுக்கு தமிழ்நாடு முழுவதும் பட்டா வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாமாண்டு, 2012-2013 ஆம் ஆண்டு ஒரு இலட்சம் பட்டா இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 1,31,299 பயனாளிகளுக்குப் பட்டா வழங்கப்பட்டிருக்கின்றது. மூன்றாமாண்டு, 2013-2014 ஆம் ஆண்டு 2 இலட்சம் பட்டா வழங்க வேண்டுமென்று இலக்கு



நிர்ணயிக்கப்பட்டு, 31-1-2014 வரை 2,04,394 பயனாளிகளுக்குப் பட்டா வழங்கப்பட்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டரை ஆண்டுகளில் கிட்டத்தட்ட இதுவரை, தமிழக அரசியல் வரலாற்றில் இல்லாத அளவுக்கு, 4½ இலட்சம் பயனாளிகளுக்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், புது சப்ஜெக்ட்டுக்குப் போகாதீர்கள். நேரம் ஆகிவிட்டது. உரையை முடியுங்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில், கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் இழப்பீடு வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அதில் 50 சதவிகிதத்திற்குமேல் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மட்டும்தான் இழப்பீட்டுத் தொகை என்ற நிபந்தனையைத் தளர்த்தி, பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் இழப்பீட்டுத் தொகையை வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் விளைவிக்கும் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டுமென்பதற்காக, கடந்த நிதியாண்டிலே சேமிப்புக் கிடங்குகள் கட்டப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அதிலே எத்தனை சேமிப்புக் கிடங்குகள் கடந்த ஆண்டிலே கட்டப்பட்டன, அதிலே கட்டப்படாமல் இருக்கும் சேமிப்புக் கிடங்குகளுக்கு இந்த ஆண்டு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை அரசு தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு, விவசாயிகளுக்கு சூரிய சக்தி மோட்டார் 80 சதவிகிதம் மானியத்துடன் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. கடந்த ஆண்டு, எத்தனை விவசாயிகளுக்கு சூரிய சக்தி மோட்டார் வழங்கப்பட்டது என்பதையும், இந்த ஆண்டு அதற்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும் அரசு தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநிலம் வாரியாக விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த துறைகளின் வளர்ச்சி விகிதம் 2011-2012 ஆம் ஆண்டு 9.51 சதவிகிதமாக இருந்தது. 2012-2013 ஆம் ஆண்டு 12 சதவிகிதம்

[திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்] [2014 பிப்ரவரி 20

Negative growth-ஆக வளர்ச்சியில் பின்தங்கியிருக்கிறது. உற்பத்தித் துறையில் மைனஸ் 1.3 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. நம்முடைய தேசத்தின் முதுகெலும்பாக உள்ள விவசாயத்தின் நலன் கருதியும், நமது மாநிலத்தில் உள்ள விவசாயிகளின் நலன் கருதியும், சிறப்பு நிதி ஒதுக்கி, அவர்களின் வாழ்க்கை வளம் பெற போர்க்கால அடிப்படையில் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், எந்த அடிப்படையில் உற்பத்தித் துறையில் மைனஸ் 1.3 சதவிகிதமாகக் குறைந்திருக்கிறது எனச் சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. உற்பத்தித் துறையில் 9.56 சதவிகிதம் வளர்ச்சி இருக்கிறது என்று நேற்றையதினம் நான் தெளிவாகச் சொல்லியிருந்தேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, 2005-2006 ஆம் ஆண்டு 15.11 சதவிகிதம் இருந்தது. 2008-2009-ல் மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில்தான் மைனஸ் 1.31-ஆக இருந்தது என்பதை நேற்றையதினம் தெளிவாகச் சொன்னேன். ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இப்பொழுது அப்படி இருப்பதாகச் சொல்கின்றார்கள். ஆக, அதைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், விரிவாக புள்ளிவிவரத்திற்கெல்லாம் போகாதீர்கள். சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** அமைச்சர் எதை வைத்துச் சொல்கிறார் என்று தெரியவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே Central Statistical Organisation, Ministry of Agriculture, Government of India அவர்களுடைய புள்ளிவிவரத்தைத்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.



2014 பிப்ரவரி 20]

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் யாரோ எழுதிக் கொடுத்ததை வைத்துப் படித்துக் கொண்டிருக்கிறார். அவருக்கு இப்படித்தான் பேச வேண்டும் என்பது தெரியவில்லை. மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல ஆதாரம் இருக்கிறதா என்பதை அவர் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் விவசாயிகளுடைய நலன் கருதி, கிடங்குகள் கட்டப்பட்ட விவரங்கள் குறித்துக் கேட்டிருந்தார்கள். இந்தியாவிலேயே எந்த ஒரு மாநில முதலமைச்சரும் செய்யாத ஒரு மாபெரும் சாதனையை இந்தியத் திருநாட்டின் வாழும் மனித தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 1,118 கிடங்குகள், 1,118 வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு வழங்கியும், 43 வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கங்களுக்கு 48 கிடங்குகள் வழங்கியும், 2011-2012-ல் ஆக மொத்தம் 1,166 கிடங்குகள் ஏறத்தாழ 107.26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டு, அந்தக் கட்டடங்கள் அனைத்தும், 19-9-2011-ல் இணைக்கப்பட்ட ஏறத்தாழ 165 கிடங்குகளின் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 20-6-2013 அன்று அனைத்து கிடங்குகளையும் ஒரே நேரத்தில் திறந்து வைத்து சாதனை புரிந்தார்கள். இதுவரை இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் ஒரே நேரத்திலே இவ்வளவு கிடங்குகளை ஒரு முதலமைச்சர் திறந்ததாக சரித்திரம் இல்லை என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, 2012-2013-ல் 104 கிடங்குகளை 129.76 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டுள்ளது. இதில் இதுவரை ஏறத்தாழ 104 கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. இதுவரையில், 2,270 கிடங்குகள் அறிவிக்கப்பட்டு, 2,243 கிடங்குகள் இதுவரை கட்டி முடிக்கப்பட்டு, விவசாயிகளுடைய பயன்பாட்டுக்குக் கிடைத்திருக்கின்றன. இதன்மூலமாக செலவிடப்பட்ட தொகை

மட்டும் ஏறத்தாழ 236.06 கோடி ரூபாய் என்பதையும் இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூடுதலாக இன்னொரு தகவலையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்ளுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். ஏறத்தாழ, 1,55,200 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 1,118 கிடங்குகளை விவசாயிகள் பயன்படுத்தி, இதுவரை 46.45 கோடி ரூபாய் தானிய ஈட்டுக் கடன் பெற்றிருக்கிறார்கள். ஏறத்தாழ 1,176 விவசாயிகள் 24.33 கோடி ரூபாய் மதிப்புள்ள விளைபொருட்களை இந்தக் கிடங்குகளில் வைத்து, அவற்றையெல்லாம் விற்பனை செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு உரிய விலை கிடைத்துள்ளது. இதன்மூலமாக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், விவசாயிகளுடைய நலனைப் பாதுகாத்திருக்கிறார். இதுவரை எந்த ஒரு முதலமைச்சரும் இந்த அளவுக்குக் குறுகிய காலத்தில் கிடங்குகள் வசதி செய்து கொடுத்ததாகச் சரித்திரம் இல்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் இரண்டாம் பசுமைப் புரட்சியை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் பேசத் தொடங்கி 40 நிமிடங்கள் ஆகிவிட்டன. சீக்கிரம் உரையை முடியுங்கள். வேறு அலுவல்கள் இருக்கின்றன.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் "யாரோ எழுதிக் கொடுத்ததை வைத்துப் பேசுகிறார், என்ன பேசுகிறார் என்பது தெரியவில்லை" என்று சொன்னார். அதற்கு நான் பதில் சொல்ல வேண்டுமல்லவா? தொழில் துறை அமைச்சர் சொன்னாரல்லவா? "Tamil Nadu has been hit harder than other states by the national slowdown" said Planning Commission Member, Abhijit sen. Planning Commission-னுடைய புள்ளிவிவரத்தைத்தான் நான் சொல்கிறேன். யாரும் எழுதிக்கொடுக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், இதையெல்லாம் முன்கூட்டியே என்னிடம் காட்டியிருக்க வேண்டுமல்லவா? என்னிடம் காட்டாமல் நீங்களாகவே பேசிக்கொண்டிருந்தால் எப்படி? (குறுக்கீடு)



**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது புள்ளிவிவரம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12-10

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு நானும் அந்த ஆதாரத்தைக் கொடுக்கின்றேன். C.M.I.E-யின் ரிப்போர்ட்டும் இருக்கின்றது. உற்பத்தித் துறையில் மைனஸ் 1.31 என்று நீங்கள் சொல்லியிருக்கின்றீர்கள். ஆனால், இப்போது சொல்வது ஒட்டுமொத்த வளர்ச்சி என்று சொல்கின்றீர்கள். முதலில் எதை எடுத்துக்கொள்வது என்பதை நீங்கள் தெளிவாகச் சொல்ல வேண்டும். நான் சொன்ன 9.56 சதவிகிதம் என்பதற்கு, மத்திய அரசினுடைய ஆதாரத்தை எடுத்து உங்கள் கையிலே கொடுக்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஆய்வு செய்யட்டும். யார் மீது தவறு இருக்கிறது என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொல்கின்றாரோ, அதை நான் கேட்கத் தயாராக இருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் உங்கள் உரையை விரைவில் முடியுங்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Agriculture has slowed in Tamil Nadu with a negative growth rate of 12%, while manufacturing has fallen to -1.3%. அதைத்தான் நான் சொல்ல வந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத் துறையில் நான் சொன்னதாக எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்கின்றார்கள். நான் உற்பத்தித் துறையைப் பற்றி சொல்லிக்கொண்டிருக்கிறேன். அவர் விவசாயத் துறையைப் பற்றிச் சொல்கிறார். இப்போது அதை மாற்றி சொல்லிக் கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நேரம் ஆகிவிட்டது, நீங்கள் உரையை விரைவில் முடியுங்கள். இல்லையென்றால் நான், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களை பதிலுரை அளிக்க அழைக்க வேண்டியிருக்கும். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குக்கூட நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். வறட்சியாக இருந்த காரணத்தினால், இந்த முறை விவசாயத்தில் சிறிது சுணக்கம் ஏற்பட்டதாகச் சொன்னால், அது இயற்கையினுடைய சீற்றம். அதை யாரும் ஒன்றும் செய்ய முடியாது. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொள்கின்றேன். உற்பத்தித் துறை என்பது வேறு, விவசாயத் துறையினுடைய வளர்ச்சி என்பது வேறு என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் உரையை விரைவில் முடியுங்கள், நேரம் ஆகிவிட்டது.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது, உரையை விரைவில் முடியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரைக்குப் பின்னர் இன்னும் நிறைய அலுவல்கள் இருக்கின்றன. நீங்கள் 40 நிமிடங்களுக்குமேல் பேச நேரத்தை எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சப்ஜெக்டைத்தான் பேசுகிறேன், வேறு எதையும் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சப்ஜெக்ட்தான். ஆனால், இப்போது எனக்கு நேரம் இல்லை. (குறுக்கீடுகள்) எனக்கு நேரம் இல்லை.



**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** கரும்பு, நெல் பயிரிடும் விவசாயிகள் விளைவித்தாலுங்கூட, அதற்குரிய விலை கிடைப்பதில்லை. இடையில் உள்ளவர்கள்தான் அதில் பயன்பெறுகிறார்கள். எனவே, கரும்பு, நெல், மஞ்சள், மரவள்ளிக்கிழங்கு, எண்ணெய் வித்துகள், பயறு வகைகள் பயிரிடுகின்ற உழைக்கும் உழவர் பெருமக்களுக்கு உழைப்பிற்கேற்ற உரிய விலை கிடைக்கின்ற வகையிலே, குறைந்தபட்ச, உரிய ஆதார விலையை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், மின்சாரத்தில் இந்த ஆண்டு 2,500 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டதாகச் சொல்லப்பட்டுள்ளது. 500 மெகா வாட் மின்சாரம் தனியாரிடம் வாங்க ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. நீண்டகால அடிப்படையில் 3,330 மெகா வாட் மின்சாரம் வாங்கப்பட உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 30-4-2013 அன்றைய தேதியிலே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் மின் திட்டங்களுக்காக சுமார் 16,350 கோடி ரூபாய்க்கு திட்டங்கள் ஏற்படுத்துவதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நேரம் இல்லை. நீங்கள் உரையைப் படித்துக் கொண்டே இருக்கிறீர்கள். அதை என்னிடம் கொடுத்துவிடுங்கள், நான் பதிவு செய்துகொள்கிறேன். (குறுக்கீடு) நேரம் இல்லை.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறையின் சிப்காட் மூலமாக 26,000 ஏக்கர் நிலப் பரப்பு கொண்ட நில வங்கியை அரசு ஏற்படுத்தும் என்று கடந்த நிதியாண்டிலே சொல்லப்பட்டது. ஆனால், சிப்காட்டிலே 2,000 ஏக்கர்தான் கண்டறியப்பட்டதாகச் சொல்லப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையைக்கூட சரியாகப் படிக்கவில்லையென்று நினைக்கின்றேன். 53,000 ஏக்கர் நிலம்

கண்டறியப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. நீங்கள் 25,000 ஏக்கர் என்று சொல்கின்றீர்கள். தென் தமிழகத்திலே இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் தனிச் சலுகையை அறிவித்து, அதற்கென்று தனியாக நில வங்கியையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, ஏற்கெனவே இருக்கின்ற சிப்காட்டிலும் நில வங்கி ஏற்படுத்தப்பட்டு, கிட்டத்தட்ட இந்த ஆண்டுக்குள் 53,000 ஏக்கர் சிப்காட்டிலே நிலம் எடுக்கப்பட்டு தொழில் முனைவோர்களுக்கு வழங்கப்படும் என்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அந்த நிதிநிலை அறிக்கையைப் படித்துவிட்டு கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். 2,500 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என்று சொல்லியிருக்கின்றீர்கள். மின் உற்பத்தி செய்யவில்லை என்று சொல்கிறீர்களா அல்லது மின் உற்பத்தி செய்ததற்குப் பாராட்டு என்று சொல்கிறீர்களா? (குறுக்கீடு) 2,500 மெகா வாட் மின்சாரம் தயாரிக்கப்பட்டு இப்போது தமிழ்நாடு மின்சார வாரியத்திடத்தில் இணைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்ன சொன்னார்களோ, அதைச் செய்வார்கள், அதைச் செய்திருக்கிறார்கள். அதை நீங்கள் இல்லையென்று சொல்ல வருகிறீர்களா அல்லது அதைப் பாராட்டுகிறீர்களா? (மேசையைத் தட்டும் ஒலி) 500 மெகா வாட் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்கிறீர்கள். இல்லையென்று சொல்கிறீர்களா? கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. 3,300 மெகா வாட் நீண்டகால குத்தகைக்குக் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது என்று சொல்கிறீர்கள். கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. ஆக, இதை இல்லையென்று சொல்ல வருகிறீர்களா அல்லது பாராட்டுகிறீர்களா? நீங்கள் சொல்லப்பட்டிருக்கிறது, சொல்லப்பட்டிருக்கிறது என்று மொட்டையாக விட்டுவிட்டால் என்ன அர்த்தம்?



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு இன்னும் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு அம்மா அவர்கள் தொழில்கள் இங்கு வர வேண்டும்; அதற்குண்டான இடங்கள் தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்க வேண்டும் என்பதற்காக சிப்காட் மூலமாக நிலங்கள் கையகப்படுத்தப்படுகின்றன. உங்களுடைய கட்சி சட்டமன்ற உறுப்பினர்தான் அதிக வழக்குகளைத் தொடுத்து, அந்த இடத்தில் நிலம் எடுக்கக்கூடாது என்று, மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் திரு. அருண் சுப்பிரமணியன்தான் கிட்டத்தட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகளைத் தொடர்ந்திருக்கின்றார். ஆக, தமிழகத்திலே தொழில்கள் வரக்கூடாது என்பதற்காக, நிலம் எடுக்கக்கூடாது என்பதற்காக, நீங்கள் அந்த அளவிற்குத் தொழில் துறைக்கு ஆதரவாக இல்லாமல், அந்த அளவிற்கு எதிர்ப்பாக இருக்கிறீர்கள் என்பது ஒரு காரணம்.

பிற்பகல் 12-15

இன்னொன்று, அவர் பக்கத்திலே இருக்கின்ற திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர். ஏதாவது, இப்படித் தடை செய்கின்றபோது, "பக்கத்திலே இருக்கின்ற ஆந்திராவிலே, தடாவிலே இடம் இருக்கிறது, அங்கே செல்லுங்கள்" என்று மற்றவர்கள் எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆக, அவர்கள் தமிழகத்தில் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று நினைக்கின்றார்களா? அப்படி நினைப்பார்கள் என்று சொன்னால், அவர்கள் இடம் எடுப்பதற்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். இடத்திற்கு என்ன விலையோ அதைக் கேட்டால் பரவாயில்லை. எந்த இடம் எடுத்தாலும் சரி, உடனடியாக, "அந்த இடத்தை எடுக்கக் கூடாது" என்று உயர் நீதிமன்றத்திற்குச் சென்று, வழக்கு போட்டுவிடுகிறார்கள். அவர்கள் அந்த வழக்கைப் போட்ட பிறகு, நாங்கள் நீதிமன்றத்திற்குச் சென்று, வாதாடி, வெற்றி பெற்றதற்குப் பின்னால்தான் அந்த நிலத்தை எடுக்க வேண்டியிருக்கிறது. அப்படிப் போராடி, இப்பொழுது 53,000 ஏக்கர் நிலங்களை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களது அரசு கண்டறிந்து எடுக்கவிருக்கிறது. வரும் அக்டோபர்

மாதத்தில் தொழில் முனைவோர்கள் மாநாடு நடைபெற இருக்கின்றது. அதற்குள் அந்த 53,000 ஏக்கர் நிலமும் எடுக்கப்பட்டு, தொழில் துவங்க வருபவர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுமூலம் நிச்சயமாக இடம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, நான் இந்த அவைக்கு இன்னுமொன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய தொகுதியிலே புதிய காகித தொழிற்சாலை அமைப்பதற்காக இடம் கண்டறியப்பட்டது. இங்கேயிருக்கின்ற காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அங்கே சென்று, "அந்த இடத்தை எடுக்கக்கூடாது" என்று போராடுகின்றார். ஒருபுறம், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அமைச்சர், "தமிழகத்தில் இடம் தர மாட்டேன் என்கிறார்கள்; அதனால், தொழிற்சாலை துவங்கவில்லை" என்று சொல்கின்றார்கள். மற்றொருபுறம், அக்கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் அந்த இடத்திற்கே சென்று, அங்குள்ள மக்களிடம், "நீங்கள் இடம் கொடுக்காதீர்கள்" என்று கூறி, போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்றால், இவர்களெல்லாம் உள்ளே ஒன்று, வெளியே ஒன்று என்கிற வகையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அப்படியிருந்தும்கூட, சரித்திரத்திலே இல்லாத வகையில், 6 மாத காலத்தில் கிட்டத்தட்ட ஆயிரம் ஏக்கர் நிலம் எடுக்கப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்கரங்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, இப்பொழுது கட்டடம் கட்டப்படவிருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். உங்களைப்போன்று ஆயிரம் பேர் வந்தாலும், மாண்புமிகு அம்மா அவர்கள் தன்னந்தனியாக நின்று சந்தித்து, (மேசையைத் தட்டும் ஒலி) எந்த இடையூறு வந்தாலும், அதைக் களைந்து, தொழிற்சாலைகளைக் கொண்டு வந்து தமிழகத்தை முதல் மாநிலமாக ஆக்குவார் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். புது சப்ஜெக்ட்டிற்குப் போகாதீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நேரம் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) இன்றைக்கு நேரம் இல்லை.



**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை அமைச்சர் 'ஆயிரம் பேர் வந்தாலும்' என்று சொல்கிறார். நாங்கள் என்ன சண்டை போடுவதற்கா வந்திருக்கிறோம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உரையை முடியுங்கள். புது சப்ஜெக்ட்டிற்குப் போகாதீர்கள். (குறுக்கீடு)

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** நான் படிக்கின்ற ஒன்றை மட்டும் அவர் கேட்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. நீங்கள் பேச ஆரம்பித்து ஒரு மணி நேரம் ஆகப் போகிறது. (குறுக்கீடு) நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களை அழைக்க வேண்டியிருக்கும்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** நான் Planning Commission-னுடைய புள்ளிவிவரத்தைப் படிக்கப் போகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. நீங்கள் உரையை முடியுங்கள். நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களை அழைக்க வேண்டியிருக்கும்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** The continuing power problem has affected the manufacturing and services sectors, which are the backbone of the state. Tamil Nadu is the only state to fall below the national average, according to figures released by the Planning Commission.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், இதையெல்லாம் என்னிடம் காட்டிவிட்டு, பிறகு படிக்க வேண்டும். அனுமதியில்லாமல் படிக்கக் கூடாது. (குறுக்கீடு) அவர் சொல்கிறார் என்றால் நீங்கள் இதை என்னிடம் காட்ட வேண்டும் அல்லவா? பேரவையில் இதைப் படிக்கப் போகிறேன் என்று சொல்லி, என்னிடம் காட்ட வேண்டும். என்னிடம் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) அதைக் கொண்டு வந்து என்னிடம் காட்ட வேண்டுமல்லவா? (குறுக்கீடுகள்) எனக்கு நேரமில்லை. வேறு சப்ஜெக்ட் பற்றி பேசி, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) இல்லையெனில், நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களை பதிலுரையாற்ற அழைக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடு)

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு அமைச்சர் சொன்னதற்கு நான் விளக்கம் சொல்ல வேண்டாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களை அழைக்க வேண்டியிருக்கும். ஒரு மணி நேரத்திற்கு மேலாகிவிட்டது. (குறுக்கீடு)

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** இழப்பீடு வேண்டும் என்றுதானே வழக்கு தொடுத்திருக்கிறார்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் உரையை முடிப்பதாயிருந்தால் பேசுங்கள். இல்லையெனில் பதிலுரை அளிக்க நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களை அழைக்க வேண்டியிருக்கும்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** தமிழகம் முழுவதும் பல மாவட்டங்களில் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மின்வெட்டால் மூடப்பட்டு, பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலைவாய்ப்பில்லாமல் அவதிப்படுவதோடு மட்டுமல்லாமல், வங்கிகளில் வாங்கிய கடனைக் கட்ட முடியாமல், அவர்களுடைய . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடு) ஒரு மணி நேரத்திற்கு மேலாகிவிட்டது. நிறைய அலுவல்கள் இருக்கின்றன. (குறுக்கீடு) இன்னும் நிறைய அலுவல்கள் இருக்கின்றன. ஒரு மணி நேரமாக நீங்கள் பேசிக் கொண்டிருந்தால் எப்படி அவையை நடத்துவது? (குறுக்கீடுகள்) நான் எப்பொழுது அவை அலுவல்களை முடிப்பது? (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவதற்கு நிறைய கொண்டுவந்திருப்பீர்கள். எனக்கு நேரம் இருக்க வேண்டும் அல்லவா? (குறுக்கீடுகள்) எனக்கு நேரம் இருக்க வேண்டும் அல்லவா? (குறுக்கீடுகள்) எனக்கு நேரம் இருக்க வேண்டும் அல்லவா? (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் பார்த்தசாரதி, என்னுடைய அனுமதியில்லாமல் போட்டோவெல்லாம் காட்டிக் கொண்டிருக்கிறீர்கள். நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடு) நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** ஐந்து நிமிடங்கள் தாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஐந்து நிமிடங்கள் கிடையாது. ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.



**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** ஒரு நிமிடம் மூச்சுவிட்டால் போய்விடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுபோன்று நின்று கொண்டிருந்தால் எப்படி அவையை நடத்துவது?

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** பள்ளிக் கல்வித் துறையிலே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்குரிய தகுதியோடு பேசுங்கள். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்குரிய தகுதியோடு பேசுங்கள். ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** அது அரசு போட்ட ஆணை. அதனால்தான் சொல்கிறேன். இந்த நிதி ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பள்ளிக் கல்வித் துறைக்காக 17,480 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்பட்டுள்ளது. தமிழகத்திலுள்ள அனைத்துக் குழந்தைகளும் கல்வி கற்க வேண்டும் என்ற எண்ணத்தோடு இவ்வளவு நிதி ஒதுக்கியிருந்தபோதிலும், மத்திய அரசின் கட்டாயக் குழந்தைக் கல்வி, தமிழக அரசின் கட்டாயக் கல்வித் திட்டத்தையும் அனைத்துப் பள்ளிகளிலும், தனியார் பள்ளிகள் உட்பட, 25% ஏழை மாணவ, மாணவியருக்கு இலவசக் கல்வி அளிக்க வேண்டும் என்று விதிமுறைகளில் கூறப்பட்டிருந்தாலும், 2013-2014 ஆம் ஆண்டில் 25% மொத்த இடங்களில், அதாவது 63,182 இடங்களில் 19,971 மாணவ, மாணவியர் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளனர். ஆகவே, 2009 ஆம் ஆண்டு கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்படி 25% குழந்தைகளைச் சேர்க்காத பள்ளிகள்மீது பள்ளிக் கல்வித் துறை மூலமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டுகிறேன்.

பிற்பகல் 12-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மோகன்ராஜ், உரையை முடியுங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் நீங்கள். புது சப்ஜெட்டுக்குப் போகாதீர்கள். (குறுக்கீடு) நேரமாகிவிட்டது. (குறுக்கீடு) நேரமாகிவிட்டது, நீங்கள் உங்கள் விருப்பம்போல் நிறைய பேசிகொண்டேயிருக்கிறீர்களே!

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித் தொகை ரூ.1,500/- . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடு) உரையை முடியுங்கள். (குறுக்கீடு) உரையை முடிக்க மாட்டேன் என்கிறீர்களே! எனக்கு நேரமாகிவிட்டது. (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே பாமர மக்களும் பயன் பெறக்கூடிய வகையிலே கொண்டுவரப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப்போலவே, ஒரு சிறந்த ஆளுமைக்காக Right to Services Act-சேவை உரிமைச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. அந்தச் சட்டம் இந்தியாவில் உள்ள 16 மாநிலங்களில் அமல்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, சேவை உரிமைச் சட்டத்தை உடனடியாக தமிழக அரசு அமல்படுத்தி தமிழக மக்கள் பயன் பெறும் வகையிலே நிறைவேற்ற வேண்டுமென்ற கருத்தை தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் கருத்தாகப் பதிவு செய்கிறேன். மொத்தத்தில் இந்த நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், உரையை முடியுங்கள்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** ஏழையெளிய மக்களுக்கான வளர்ச்சித் திட்டங்களையும், விவசாயிகள் வளர்ச்சித் திட்டங்களையும், தொழில் முனைவோருக்கான வளர்ச்சித் திட்டங்களையும் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பாக வரவேற்பதோடு மட்டுமல்லாமல், இந்த நிதிநிலை அறிக்கையில் வருவாய்த் துறை, மின்சாரத் துறை, விவசாயம், தொழில் துறை, சமூக நலன், பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன் போன்ற துறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள குறைகளைச் சுட்டிக்காட்டியுள்ளது தமிழக அரசு, இந்தக் குறைகளை நிவர்த்தி செய்தால் தமிழக மக்களின் வாழ்வு மணம் வீசும் மல்லிகையாக இருக்கும் என்று தெரிவித்து, என்னை இந்த நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திலே பங்கேற்கச் செய்த என்னுடைய பெருமதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய அரசியல் ஆசான், புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்து, என்னுடைய விவாதத்தினை இந்த அவையிலே பதிவு செய்து, அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூக்கின்ற பூவெல்லாம் ஒரு பெயர் சொல்லும்; பார்க்கின்ற விழியெல்லாம் ஒரு பெயர் சொல்லும்; (மேசையைத் தட்டும் ஒலி) பிறக்கின்ற சிசுவெல்லாம் ஒரு பெயர் சொல்லும்; பால் சுரக்கின்ற பசுவெல்லாம் ஒரு பெயர் சொல்லும், அந்தப் பெயர் ‘அம்மா’. (மேசையைத் தட்டும் ஒலி) முளைக்கின்ற செடியெல்லாம் ஒரு பெயர் சொல்லும்; துளிர்க்கின்ற தளிரெல்லாம் ஒரு பெயர் சொல்லும்; காய்க்கின்ற காயெல்லாம் ஒரு பெயர் சொல்லும்; பழுக்கின்ற கனியெல்லாம் ஒரு பெயர் சொல்லும், அந்தப் பெயர் ‘அம்மா’. (மேசையைத் தட்டும் ஒலி)

2014-2015 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீதான விவாதங்களுக்குப் பதிலளித்து உரையாற்றுகின்ற நல்வாய்ப்பினை எனக்கு நல்கிய, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டு எனது உரையை தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் புதிய அரசு பொறுப்பேற்று வெற்றிகரமாக மூன்றாண்டுகளை சாதனை மிகுந்த ஆண்டுகளாக நிறைவு செய்துள்ள நிலையில், (மேசையைத் தட்டும் ஒலி) 2014-2015 ஆம் ஆண்டுக்கான அரசின் 4-வது வரியற்ற உபரி வருவாய் கொண்ட வரவு-செலவுத் திட்ட அறிக்கை கடந்த 13-2-2014 அன்று இம்மாமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக கடந்த 2011 ஆம் ஆண்டு, மே மாதம் ஆட்சிப் பொறுப்பேற்றபோது, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசின் திறமையற்ற நிருவாகத்தால் மாநிலத்தின் நிதி நிலைமை எந்த அளவுக்கு சீர்கெட்டுக் கிடந்தது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். எனினும், ஒரு சில புள்ளிவிவரங்களை இங்கு நினைவுகூர்வது அவசியம் என்று கருதுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

2010-2011 ஆம் ஆண்டு இறுதி கணக்கின்படி மாநிலத்தில் வருவாய்ப் பற்றாக்குறை ரூபாய் 2,729 கோடியாக இருந்தது. நிதிப்

பற்றாக்குறையின் அளவும் 16,647 கோடி ரூபாயாக இருந்தது. இது மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 3.04 சதவிகிதமாக இருந்தது. பல்வேறு அரசு சார்ந்த பொதுத் துறை நிறுவனங்கள் குறிப்பாக, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், போக்குவரத்துக் கழகங்கள் போன்றவை கடுமையான நிதி நெருக்கடியில் சிக்கியிருந்தன. இத்தகைய சூழ்நிலையில்தான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்பு, தன்னுடைய ஆழ்ந்த அறிவாற்றலாலும், அளப்பரிய அனுபவத்தாலும், தேர்ந்த நிருவாகத் திறனாலும் அரசு சார்ந்த நிதி நிறுவனங்களின் நிதி நிலைமையைச் சீரமைத்து, மாநில நிதி நிருவாகத்தை மேம்படுத்தி, தமிழ்நாட்டை வளம் பெறச் செய்யும் நோக்குடன் மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்தும் பணியை பெரும் சவாலாக ஏற்றுக்கொண்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த சீரிய முயற்சிகளின் விளைவாகத்தான், அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட ஓராண்டிலேயே மாநிலம் வருவாய்ப் பற்றாக்குறையைச் சந்தித்த நிலை மாறி, 1,364 கோடி ரூபாய் வருவாய் உபரி நிலையை 2011-2012 ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எட்டி சாதனை படைத்துக் காட்டியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-25

அதேபோல, 2012-2013 ஆம் ஆண்டிலும் 1,760 கோடி ரூபாய் வருவாய் உபரி நிலையை எட்டி சாதனை படைத்தது. அதேபோல, நிதிப் பற்றாக்குறையையும் கட்டுப்படுத்தி, மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில், நிதிப் பற்றாக்குறையின் அளவு 2011-2012 ஆம் ஆண்டில் 2.97 சதவிகிதமாகவும், 2012-2013 ஆம் ஆண்டில் 2.39 சதவிகித அளவிற்கும் குறைக்கப்பட்டது. நிதிநிலை அறிக்கையில் ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டவாறு, 2012-2013 முதல் நாட்டின் பொருளாதார நிலையில் கடும் சரிவு ஏற்பட்டுள்ள காரணத்தினால், தமிழ்நாட்டினுடைய பொருளாதார நிலையும் பாதிப்புக்குள்ளாகியது.



2012-2013-ல் தொடங்கிய இந்தச் சரிவு, 2013-2014-லும் தொடர்ந்த காரணத்தினால், மாநிலத்தின் வரி வருவாயும் பெரும் பாதிப்புக்குள்ளாகியது. ஆனால், இந்தச் சூழ்நிலையிலும், மாண்புமிகு அம்மா அவர்களது அரசு செயல்படுத்திவரும் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களுக்கான நிதியைக் குறைக்காமல், அவற்றிற்குத் தொடர்ந்து போதிய அளவு நிதி ஒதுக்கி வருகிறது. அதேசமயத்தில், பொருளாதார நிலையையும் ஊக்கப்படுத்த சில முக்கிய கட்டமைப்புத் துறைகளில், குறிப்பாக, நீர்ப் பாசனம், சாலைகள் மேம்பாடு ஆகியவற்றிலும், சமூக மேம்பாட்டுத் துறைகளில், குறிப்பாக, கல்வி, மருத்துவம், நகர்ப்புற மேம்பாடு ஆகியவற்றிலும் போதுமான அளவு நிதி தொடர்ந்து ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தகைய சூழ்நிலையில்தான், நிதி மேலாண்மையில், குறிப்பாக, தமிழ்நாடு நிதிப் பொறுப்புடைமைச் சட்டக் குறியீடுகளைக் கடைப்பிடிப்பதில் கடுமையான சவால்களை நாம் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, மாநிலத்தின் வரி வருவாய் குறைந்தபோதிலும், செலவினங்களை ஓரளவு கட்டுப்படுத்தி, 2013-2014 ஆம் ஆண்டில் வருவாய் உபரி 244 கோடி ரூபாயாக இருக்கும் வாய்ப்பை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஏற்படுத்தியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

எப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டு, இந்த அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சுட்டிக்காட்டத்தான் இவற்றையெல்லாம் குறிப்பிடுகின்றேன். இத்தகைய சிரமங்கள் பல இருந்தாலும், இந்த நிதிநிலை அறிக்கை மக்களின் நலன் பேணுவதற்காக பல திட்டங்களைத் தாங்கி, ஒரு முழுமையான அறிக்கையாக, ஊக்கத்தைத் தரக்கூடிய அறிக்கையாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிதிநிலை அறிக்கை தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்வதற்கான நல்வழியை வகுக்கும் என்பது உறுதி.

இந்த நிதிநிலை அறிக்கைமீது இம்மாமன்றத்தில் கடந்த மூன்று நாட்களாக பல்வேறு உறுப்பினர்கள் கருத்துகளைத் தெரிவித்தார்கள். அவற்றில் பல ஆக்கபூர்வமான கருத்துகளும் இருந்தன. ஒரு சில கருத்துகள் அரசியல் நோக்கோடு வெளியிடப்பட்ட கருத்துகளாகவும் இருந்தன. எனினும், தங்கள் கருத்துகளை வெளிப்படையாகத் தெரிவித்த இந்த மாமன்ற

உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளனர். நாளிதழ்களும் நிதிநிலை அறிக்கையின் பல்வேறு அம்சங்களை விரிவாக எடுத்துரைத்து, அவற்றின் விமர்சனங்களை வெளிப்படுத்தியுள்ளன. தொழில் துறை சார்ந்த பல்வேறு அமைப்புகளும் தங்கள் கருத்துகளைத் தெரிவித்துள்ளன. இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி கருத்து தெரிவித்துள்ள அனைத்துத் தொழில் அமைப்புகளும், அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளை விரிவாகப் பாராட்டியுள்ளன.

குறிப்பாக, 100 கோடி ரூபாய் செலவில் தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்படுவதையும், சிறு, குறு தொழில்களுக்கான கட்டமைப்புகளுக்கு 50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதையும், சிறு தொழில்களுக்கு உதவிட 25 கோடி ரூபாய் செலவில் தொடங்கப்படவுள்ள புதிய திட்டத்தையும், பசுமை மின்சார வழித்தடத்தை அறிவித்துள்ளது பற்றியும் கருத்துகளைத் தெரிவித்து, மாண்புமிகு அம்மா அவர்களது அரசின் முயற்சிகளை வெகுவாகப் பாராட்டியுள்ளனர். பெரும்பாலான பத்திரிகைகள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், இந்த நிதிநிலை அறிக்கையில் புதிய வரிகள் விதிக்கப்படாததைச் சுட்டிக்காட்டியதுடன், இதில் அறிவிக்கப்பட்டுள்ள புதிய திட்டங்களையும், பல்வேறு திட்டங்களுக்கு அரசு வழங்கியுள்ள நிதியாதாரங்களைப் பற்றியும் பாராட்டிக் கருத்துகளைத் தெரிவித்துள்ளனர்.

சில பத்திரிகைகளின் கருத்து பற்றி இங்கே குறிப்பிட விரும்புகிறேன். The Hindu பத்திரிகை 'State Budget unveils schemes to target investments' என்றும், 'Tamil Nadu Budget accords priority to social sectors' என்றும் தனது கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளது. அதேபோல, Deccan Chronicle பத்திரிகை, 'Tax free surplus Budget' என்றும், 'Tamil Nadu industries gives Thumbs up' என்றும் குறிப்பிட்டுள்ளது. The Indian Express பத்திரிகை, இந்த நிதிநிலை அறிக்கையில் உள்ள அனைத்து அம்சங்களையும் தனித் தனியாக விளக்கி தனது கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளது. Times of India பத்திரிகை, 'Tamil Nadu pushes welfare, infra in budget' என்றும், 'A Budget to win hearts and votes' என்றும் குறிப்பிட்டுள்ளது.



(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பல்வேறு தமிழ்ப் பத்திரிகைகளும், குறிப்பாக, தினமணி, 'வரிகள் இல்லாத உபரி பட்ஜெட்' என்றும், தினத் தந்தி, 'புதிய வரியில்லாத தமிழக பட்ஜெட்' என்றும் பாராட்டியுள்ளன. இன்னும் தினமலர், ஜனசக்தி, தீக்கதிர் போன்ற பத்திரிகைகளும், இந்த நிதிநிலை அறிக்கையில் உள்ள பல்வேறு அம்சங்களைப்பற்றிச் செய்திகளை வெளியிட்டு, தங்களது ஆக்கபூர்வமான கருத்துகளைத் தெரிவித்துள்ளன. ஆக்கபூர்வமான முறையில் தங்களது கருத்துகளை வெளியிட்ட பத்திரிகைகளுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்கள் நலமாக இருக்க வேண்டும் என்று நினைக்கின்ற நல்ல மனம் கொண்டவர்களெல்லாம் இந்த நிதிநிலை அறிக்கையை மனம் திறந்து பாராட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மனம் மகிழ்ந்து பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் தலைவர்களாலும், பத்திரிகைகளாலும் இந்த அளவுக்குப் பாராட்டைப் பெற்ற இந்த நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு அம்மா அவர்களைப் பற்றிய புகழாரங்களே நிறைந்திருக்கின்றன என்று மிகவும் குறைபட்டுச் சொல்லியிருக்கிறார் கருணாநிதி. தகுதியுடையவர்களுக்குப் புகழாரங்களை நாமாகச் சூட்ட வேண்டியதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) தகுதியுடையவர்களுக்கு புகழாரங்களை நாமாகச் சூட்ட வேண்டியதில்லை, அது தானாகவே சூட்டப்படும் என்பதை கருணாநிதி புரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போதுள்ள கடினமான நிதிச் சூழலில் அனைத்துத் தரப்பு மக்களின் எதிர்பார்ப்புகளையும் நிறைவு செய்யும்வகையில் ஒரு வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிப்பது என்பது எவ்வளவு கடினமான சவால். ஆனால், தனது ஆழ்ந்த அறிவாலும், அளப்பரிய அனுபவத்தாலும் அந்த சவாலை வெற்றி கொண்டு மிகச் சிறப்பான முறையில் இந்த நிதிநிலை அறிக்கையை வருவாய் உபரி பட்ஜெட்டாக வடிவமைத்துத் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா

அவர்களுக்குப் *(மேசையைத் தட்டும் ஒலி)* புகழாரம் சூட்டாமல் வேறு யாருக்குச் சூட்ட முடியும்?

திட்டங்கள் வகுப்பதில் விவேகம், *(மேசையைத் தட்டும் ஒலி)* அவற்றைச் செயல்படுத்துவதில் வேகம், எதிர்வருவதை முன்கூட்டியே ஆய்ந்தறியும் முன்நோக்கு சிந்தனை, அடுத்த தலைமுறைக்கும் பயன்தரப் பாடுபடும் தொலைநோக்குப் பார்வை, ஒப்புவமை சொல்ல முடியாத நிருவாகத் திறன், தமிழக மக்களின் நலன் ஒன்றையே கருத்தில் கொண்டு செயல்படும் புத்தி சாதுர்யம் ஆகிய அருங்குணங்களால் ஈடற்ற ஆலோசனைகளையும், இணையற்ற வழிகாட்டுதல்களையும் வழங்கி, இந்த வரவு-செலவுத் திட்டத்திற்குச் சிறப்பானதொரு வடிவத்தை வகுத்தளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்குப் புகழாரம் சூட்டாமல் வேறு யாருக்குப் புகழாரம் சூட்ட முடியும் என்று கருணாநிதி எதிர்பார்க்கின்றார்? புகழாரம் சூட்டப்படுகின்ற அளவுக்கு கருணாநிதி தகுதி பெறவில்லை என்றால், அதற்கு நாம் என்ன செய்ய முடியும்?

தனது தகுதியின் அளவு என்னவென்று கருணாநிதியே ஒப்புதல் வாக்குமூலம் தந்திருக்கின்றார்—என் உயரம் எனக்குத் தெரியும் என்று. ஆம். கருணாநிதியின் உயரம் என்ன என்று கருணாநிதிக்குத் தெரியும். ஆனால், அதைவிட, அவரைவிட, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களுக்கும், தமிழக மக்களுக்கும் கருணாநிதியின் உயரம் என்னவென்று மிக நன்றாகவே தெரியும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால், அவர் முதலமைச்சராக ஆக முடிந்தது என்பதும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.-ஐ எதிர்த்ததும் அவரது முதலமைச்சர் பதவி அவரை விட்டுப் போனது என்பதும் கருணாநிதியின் தகுதியை எடுத்துச் சொல்லும். என்ன செய்வது? அந்த அளவுக்கு அவர் உயரம் கம்மி, ரொம்பக் குறைவு. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் தகுதியோ மிகுதி. பிற மாநிலத்திலுள்ள முதல்வர்களும், வெளிநாட்டுத் தலைவர்களும் மாண்புமிகு அம்மா அவர்களுக்குப் புகழாரம் சூட்டி மகிழ்கிறார்கள். ஆகவே, பொறாமை கொண்டு புலம்புவது அவரது உடல் நலத்திற்குத்தான் மிகவும் கேடு என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன்.



தமிழர்கள் எக்கேடு கெட்டால் எனக்கென்ன என்று சொல்லாடுபவர்களும், தள்ளாடுபவர்களும் குறை சொல்லிக் கொண்டிருப்பதை ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்து, ஒரு பழமொழியை அவர்களுக்குப் பதிலாகச் சொல்ல நினைக்கின்றேன். 'ஈ உட்கார்ந்து மலை சாய்ந்துவிடாது தம்பி, எறும்பு குடித்து சமுத்திரம் வற்றிவிடாது தம்பி.' *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஏழைகளை ஏற்றிவிடுகின்ற நிதிநிலை அறிக்கை, நடுத்தர மக்கள் நன்றியோடு நினைத்துப் பார்க்கின்ற நிதிநிலை அறிக்கை, மாணவர்களின் மனம் மகிழ வைக்கும் நிதிநிலை அறிக்கை, மீனவர்களின் மனம் நெகிழ வைக்கும் நிதிநிலை அறிக்கை, விவசாயியின் வேதனையைத் தீர்க்கின்ற நிதிநிலை அறிக்கை, நெசவாளர்களின் நெஞ்சம் நிறைக்கின்ற நிதிநிலை அறிக்கை, *(மேசையைத் தட்டும் ஒலி)* தொழிலாளர்களுக்கு தோள் கொடுக்கின்ற நிதிநிலை அறிக்கை, அரசு ஊழியர்களை அரவணைக்கின்ற நிதிநிலை அறிக்கை, இலங்கை அகதிகளை, மாற்றுத் திறனாளிகளை, திருநங்கைகளை, ஆதரவில்லாத பெரியோர்களை, வீடு இல்லாத எளியவர்களை, வாழ வழியில்லாமல் தவிப்பவர்களையெல்லாம் அரவணைக்கின்ற நிதிநிலை அறிக்கை.

கருப்புக் கண்ணாடி போட்டுக்கொண்டு பார்த்தால் பார்ப்பதெல்லாம் கருப்பாகத்தான் தெரியும். ஆனால், சில அரசியல் தலைவர்களோ இந்த நிதிநிலை அறிக்கையை வெறுப்புக் கண்ணாடி போட்டுக்கொண்டு பார்க்கிறார்கள். 'அன்பே என்று அழைக்க மனைவி இல்லையாம், பிள்ளைகள் மட்டும் எத்தனைன்னு ஒருவன் கேட்டானாம்' என்ற பழமொழியைப்போல, மக்கள் செல்வாக்கு இல்லாதவர்கள் எல்லாம் இந்த நிதிநிலை அறிக்கையை குறை கூறிக்கொண்டிருக்கிறார்கள். தூங்குபவர்களை எழுப்பலாம், தூங்குவதுபோல் பாசாங்கு செய்பவர்களை எழுப்ப முடியுமா? முடியாது. *(மேசையைத் தட்டும் ஒலி)* தமிழக மக்கள்மேல் அக்கறை கொண்டிருப்பதைப்போல் நடிக்கும் அரசியல் வியாபாரிகளை எழுப்பவே முடியாது. நிதிநிலை அறிக்கையைப் பற்றி விமர்சனம் செய்த அந்த அரசியல் தலைவர்கள், அதை அரசியல் நோக்கத்தோடு தெரிவித்துள்ளனர் என்பதை அவர்களின் விமர்சனங்களிலிருந்து தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். அரசியல் ரீதியாக இத்தகைய

விமர்சனங்கள் எழுப்பப்படும்பொழுது அதை எதிர்கொள்வது எங்களுக்குப் புதிதல்ல.

பிற்பகல் 12-35

ஒரு சில தலைவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் எந்த வளர்ச்சித் திட்டங்களும் இல்லையென்றும், இது வெறும் வரவு-செலவு அறிக்கை என்றும்கூட கருத்து தெரிவித்துள்ளனர். ஒரு சில தலைவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் பொருளாதார வளர்ச்சி நிலை பற்றி குறிப்பிட்டுள்ள விவரங்கள்மீது சில கேள்விகளையும் எழுப்பியுள்ளனர். ஒரு சில தலைவர்கள் சில திட்டங்களை வரவேற்றும், தாங்கள் எதிர்பார்த்த சில அறிவிப்புகள் இல்லை என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளனர். இத்தகைய கருத்துகளோடு மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மாமன்றத்தில் எழுப்பிய கருத்துகள் குறித்தும் சில விளக்கங்களை இங்கே தருவது அவசியம் எனக் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கை குறித்து ஏறுக்கு மாறான கருத்துகளைக் கூறி வருகிறார் கருணாநிதி. வருந்தி வருந்தி அழைத்தாலும் கூட்டணி போட மறுக்கும் அரசியல் கட்சிகள், மடிப் பிச்சை கேட்காத குறையாக கோரிக்கை வைத்தும், மனம் இரங்காத ஸ்டண்ட் நடிகர், எங்கே கூட்டணி அமையாமல் போய்விடுமோ என்ற ஏக்கப் பெருமூச்சுகள், 2ஜி சதி குறித்து தொடர்ந்து வெளியாகும் ஒலிநாடாத் தொகுப்புகள், கட்சியின் தலைமைப் பதவியைக் காப்பாற்ற அடித்துக்கொள்ளும் குடும்ப உறுப்பினர்கள், யாருக்கு எப்போது என்ன நிகழுமோ என்ற அச்ச உணர்வுகள், இவையெல்லாம் சேர்ந்து கருணாநிதியை ஒரு மாபெரும் குழப்ப நிலையில் ஆழ்த்தியுள்ளன என்றே நான் நினைக்கின்றேன். ஏனென்றால், நிதிநிலை அறிக்கை குறித்து அவர் கூறியுள்ள கருத்துகள் அவ்வாறு நம்மை எண்ண வைக்கின்றன.

முதல் நாள் பத்திரிகையாளர்களிடம் பேசும்போது, மக்களைத் தாக்கும் பட்ஜெட் என்கிறார். மக்கள் மீது தாக்கல் என்றால் என்ன? அந்த வரி, இந்த வரி, அதற்கு வரி, இதற்கு வரி என்று மக்கள் மீது வரிச் சுமையை ஏற்றி போட்டுத் தாக்குவதுதானே! அப்படி எந்த ஒரு வரியும் நேர்முகமாகவும் சரி, மறைமுகமாகவும் சரி, விதிக்கப்படவில்லையே! தொடர்ந்து வரியில்லாத உபரி பட்ஜெட்டை அல்லவா மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாக்கல் செய்து வருகிறார்கள் என்று



சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) "நிதிநிலை அறிக்கையில் வரி இல்லை என்பது ஒரு பெருமைக்குரிய காரியமா?" என்று கேள்வி எழுப்புகிறார் கருணாநிதி. "இந்த நிதிநிலை அறிக்கை குழந்தைகளுக்கு வழங்கப்படும் பஞ்சு மிட்டாய் போன்றது" என்று கூறியிருக்கிறார் கருணாநிதி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கை குழந்தைகளுக்கு வழங்கப்படும் பஞ்சு மிட்டாய் அல்ல, தலை வாழை இலை போட்டு தமிழ்நாட்டிற்கே வைக்கப்பட்ட விருந்து என்று பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரவு-செலவுத் திட்டம் எண்ணற்ற புதிய மக்கள் நலத் திட்டங்களை உள்ளடக்கி உள்ளது.

— சிறு தொழில்களை ஊக்கப்படுத்த, பொது உற்பத்திக் கட்டமைப்புகளை நிறுவ 25 கோடி ரூபாய்க்கான புதிய திட்டம்.

— நகர்ப்புற, கிராமப்புற சுகாதாரத்தை மேம்படுத்த புதிய ஆரம்ப சுகாதார மையங்கள்.

— நிருவாக ஆளுமையை மேம்படுத்த நகர்ப்புறங்களில் பொதுச் சேவை மையங்கள்.

— வறட்சியால் ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்கவும், தீவனப் பற்றாக்குறையைப் போக்கவும் 681 கோடி ரூபாய் அளவிலான நிவாரணத் தொகுப்பு.

— வருவாய்த் துறையைக் கணினிமயமாக்குதல், இணைய நில ஆவண மேலாண்மைத் திட்டம்.

— உதகமண்டலத்தில் புதிய வருவாய்க் கோட்டம்.

— பருத்தி சாகுபடியை ஊக்குவிக்க 50 கோடி ரூபாயில் பருத்தி சாகுபடி இயக்கம்.

— கால்நடை இழப்பை ஈடு செய்ய 12 கோடி ரூபாயில் மாநிலம் முழுவதும் கால்நடை காப்பீடுத் திட்டம்.

— மல்லிப்பட்டினத்தில் மீன்பிடித் துறைமுகம், புன்னக்குடியில் முகத்துவாரம் நிலைப்படுத்துதல்.

— 100 புதிய அம்மா மருந்தகங்கள்.

— 36 கோடி ரூபாய் செலவில் நெல் அரைவை ஆலைகளை நவீனமயமாக்குதல்.

— கூவம் நதியை முழுமையாகச் சீரமைக்க 3,833 கோடி ரூபாய் செலவில் ஐந்தாண்டுத் திட்டம்.

— காற்றாலை மின்சாரத்தை வெளியேற்ற ரூபாய் 1,593 கோடி செலவில் பசுமை மின் சக்தி வழித்தடங்கள்.

— 200 கோடி ரூபாய் செலவில் 1,000 புதிய பேருந்துகள்.

— சென்னை சுற்றுவட்டச் சாலை அமைக்க 2,000 கோடி ரூபாய் செலவில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு உதவி பெற்று நகர்ப்புற கட்டமைப்புத் திட்டம்.

— மதுரை-தூத்துக்குடி தொழில் மேம்பாட்டு வழித்தடத் திட்டத்திற்கு ஒரு சிறப்பு செயலாக்க முகமை.

— கங்கைகொண்டானிலும், தேர்வாய்கண்டிகையிலும் இளைஞர் திறன் மேம்பாட்டு மையங்கள்.

— 50 கோடி ரூபாய் செலவில் அரசு தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனங்கள் மேம்பாடு.

— தகவல் தொழில்நுட்பத்தில் புதிய தொழில்முனைவோருக்கான புதிய திட்டம்.

— தஞ்சாவூரிலும், திருநெல்வேலியிலும் சிறப்பு பன்நோக்கு மருத்துவமனைகள்.

— சென்னையிலும் பொதுமக்கள் தகவல் தொடர்புடன் புதிய போக்குவரத்து ஒருங்கிணைப்புத் திட்டம்.

— மாற்றுத் திறனாளிகள், கடும் ஊனமுற்றோர், மன வளர்ச்சி குன்றியவர்கள், தசைச் சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவித் தொகை 1,000 ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாக உயர்வு.



— மழைக்காலத்தில் மண்பாண்டத் தொழில் செய்ய முடியாத தொழிலாளர்களுக்கு 4,000 ரூபாய் பராமரிப்பு உதவித் தொகை. (மேசையைத் தட்டும் ஒலி)

— நகர்ப்புறங்களில் பணிபுரியும் மகளிர் தங்குவதற்காக 17.50 கோடி ரூபாய் செலவில் 14 பணிபுரியும் பெண்கள் தங்கும் விடுதிகள்.

இந்த நிதிநிலை அறிக்கையில் இப்படி இன்னும் ஏராளமான திட்டங்கள் இருக்கின்றன. ஏற்கெனவே அறிவித்து செயல்படுத்தப்பட்டு வரும் பல திட்டங்களும் உள்ளன. அதையெல்லாம் சொல்ல வேண்டுமென்றால் நேரம் போதாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளியவர்களை, நடுத்தர மக்களை உயர்த்துகிற மாண்புமிகு அம்மா அவர்களின் நிதிநிலை அறிக்கை கருணாநிதிக்குக் கசக்கிறதாம். ஏழையெளியவர்களையும், நடுத்தர மக்களையும் கண்ணீர் விட வைத்து, பணக்காரர்களை சந்தோஷப்படுத்துவதற்காகவே போடப்பட்டுள்ள மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் சில அம்சங்கள் கருணாநிதிக்கு இனிக்கிறதாம். நிருவாகம் என்றாலே அரசு நிருவாகம் என்று கருணாநிதி நினைத்ததே இல்லை. அவருடைய குடும்ப நிருவாகம் மட்டும்தான், மன்னிக்கவும், அவருடைய குடும்பங்களின் நிருவாகம் மட்டும்தான் அவர் நினைவில் இருக்கிறது. குடும்பங்களின் நிருவாகத்திலேயே பல்லாயிரம் பிரச்சினைகள் இருக்கும்பொழுது, பாவம் அரசு நிருவாகத்தை அவரால் எப்படிக் கவனித்திருக்க முடியும்?

பிற்பகல் 12-40

மத்தளத்திற்கு இரு பக்கம்தான் இடி, குடும்பப் பிரச்சினையில் கருணாநிதிக்கு திரும்பிய பக்கமெல்லாம் இடியோ இடி, அவரது மைனாரிட்டி ஆட்சியால் மக்களுக்கு ஏற்பட்ட மனப் புண்ணுக்கு அவர் மருந்து போட முயற்சிக்கவே இல்லை. ஆனால், அவருடைய மனப் புண்ணுக்கு மட்டும் அவர் மருந்து போட்டுக்கொண்டார். அந்த மருந்துக்குப் பெயர்தான் 'மானாட, மயிலாட', அந்த மருந்தைத் தயாரிப்பவரும் அவர்தான். விற்பனையாளரும் அவர்தான். சாப்பிடுபவரும் அவர்தான். (மேசையைத் தட்டும்

ஒலி) நிதித் திட்டங்கள் தீட்டுவதைவிட சதித் திட்டங்கள் தீட்டுவதில் கருணாநிதி மிகவும் கை தேர்ந்தவர் என்று நான் சொல்லவில்லை, மக்கள் சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்தவாறு 2012-2013 ஆம் ஆண்டில் தொடங்கி உலக அளவிலும் இந்திய அளவிலும் ஏற்பட்ட பொருளாதாரச் சரிவு அனைத்து மாநிலங்களையும் பாதித்துள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது. பொருளாதார வளர்ச்சிப் புள்ளிவிவரங்களைப் பார்க்கும்போது இதுபோன்ற சரிவு கடந்த காலங்களிலும் ஏற்பட்டுள்ளதைக் கண்கூடாகக் காணலாம். உதாரணமாக, மைனாரிட்டி தி.மு.க. கருணாநிதி ஆட்சிக்காலமான 2007-2008, 2008-2009 ஆகிய ஆண்டுகளில் அத்தகைய பொருளாதாரச் சரிவு தமிழ்நாட்டில் ஏற்பட்டது. கடும் வறட்சி ஏற்பட்ட காரணத்தினால் விவசாய உற்பத்தி வெகுவாகக் குறைந்தது. அதனால், விவசாயம் உள்ளிட்ட முதன்மைத் தொழிலின் வளர்ச்சியில் 2012-2013-ல் மைனஸ் 9.42 சதவீதத்தை நாம் சந்திக்க நேரிட்டது. இத்தகைய சூழ்நிலை ஏற்பட்டதால்தான் வறட்சி நிவாரணமாக 1,460 கோடி ரூபாயை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கருணையோடு வழங்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இயற்கையால் ஏற்பட்ட இந்த வளர்ச்சிப் பாதிப்பிற்கு எப்படி அரசு பொறுப்பாக முடியும்? அதேபோல, உற்பத்தித் துறையில் 2012-2013 ஆம் ஆண்டினுடைய வளர்ச்சி மைனஸ் 1.31 சதவீதம் ஆகும். இதற்குக் காரணம் என்ன? கடந்தகால ஆட்சியில் மின் உற்பத்தித் திட்டங்களை முறையாகத் திட்டமிட்டு செயல்படுத்தியிருந்தால், 2011-2012, 2012-2013 ஆகிய காலக் கட்டங்களில் தமிழ்நாடு சந்தித்த மின்வெட்டைத் தவிர்த்திருக்க முடியும். தொழில் உற்பத்தியும் குறைந்திருக்காது. இதனால் ஏற்பட்ட சரிவிற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எப்படிப் பொறுப்பாக முடியும்? மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மேற்கொண்ட கடும் முயற்சிகளின் காரணமாகத்தான் தற்போது மின் உற்பத்தி மேம்பாடு அடைந்துள்ளது என்பதை மனசாட்சி உள்ள யாராலும் மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனால்தான் தொழில் உற்பத்தியும் மீண்டும் வளர்ச்சியுறத் தொடங்கியுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் எதுவெல்லாம் சிறப்பாக இருந்ததோ, அதுவெல்லாம் கருணாநிதி ஆட்சிக்கு வந்ததும்



சீரழிந்து போகும். அழிப்பதில் அப்படி ஒரு ஆனந்தம் அவருக்கு. 2001-2006 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் மின் மிகை மாநிலமாக இருந்த தமிழ்நாடு தி.மு.க.-வின் மைனாரிட்டி ஆட்சி வந்ததும் இருண்டுபோனது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் தன்னுடைய அயராத உழைப்பினால், கருணாநிதியால் இருண்டுபோன தமிழகத்தில் மீண்டும் ஒளியேற்றியிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே மின் உற்பத்திக்கு புதிது புதிதாகத் திட்டங்கள் தொடங்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதனால், தற்போது தொழில் வளர்ச்சியும் அதிகரித்து வருகிறது. இந்நிலையில் தமிழ்நாட்டின் வளர்ச்சி விகிதம் இந்தியாவின் வளர்ச்சி விகிதத்தைவிடக் குறைந்துள்ளது என்று சிலர் கூறி வருகிறார்கள்.

தமிழ்நாடு ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட மாநிலம். எனவே, பொருளாதாரத்தில் உலகளாவிய பாதிப்படையும்போது மாநிலப் பொருளாதாரம் அதிக பாதிப்பை சந்திக்க நேரிடுவதைத் தவிர்க்க இயலாத ஒன்று. கடந்தகால புள்ளிவிவரங்களைப் பார்க்கும்போது, பொதுவாக பொருளாதார நிலை மேம்படும்போது இந்தியப் பொருளாதாரத்தைவிட மிக அதிகமான வளர்ச்சியும், பாதிப்படையும்போது மாநிலப் பொருளாதாரம் இந்தியப் பொருளாதாரத்தைவிட அதிகப் பாதிப்பு அடைவதையுமே காட்டுகிறது. மேலும், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான் பொருளாதார வளர்ச்சி குறைந்துவிட்டது என்று சொல்ல முடியாது. 2005-2006 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் தலைமையிலான தமிழக அரசின் பொருளாதார வளர்ச்சி 13.96 சதவிகிதம் ஆகும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆனால், அதற்குப் பிறகு ஆட்சி மாற்றம் ஏற்பட்டு தி.மு.க. ஆட்சிக்காலத்தில் 2007-2008-ல் இருந்த வளர்ச்சி சதவிகிதம் 6.11 ஆகவும், 2008-2009-ல் அதனுடைய வளர்ச்சி வீழ்ச்சி அடைந்து மீண்டும் 5.45 சதவிகிதமாகவும் குறைந்துவிட்டது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இப்படி பொருளாதார நிலையில் ஏற்றத்தாழ்வுகள் என்பது நாட்டின் பொருளாதாரம், உலகளாவிய பொருளாதாரம் ஆகியவற்றில் உள்ள சூழலுக்கேற்ப மாறி வரும் என்பதையும் மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அக்காளுக்கு அரிசியாம், தங்கச்சிக்கு மட்டும் தவிடாம்" என்று ஒரு பழமொழி இருக்கிறது. அந்தப் பழமொழியைப் போலத்தான் காங்கிரஸ் ஆளுகிற மாநிலங்களுக்கு மட்டும் மத்திய காங்கிரஸ் அரசு அள்ளி அள்ளிக் கொடுக்கிறது. காங்கிரஸ் ஆட்சி இல்லாத மாநிலங்களுக்குக் கிள்ளிக்கூட கொடுக்க மறுக்கிறது. அதிலுங்குறிப்பாக, தமிழ்நாட்டை மட்டும் மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் பார்க்கிறது. அப்படிப் பார்ப்பதற்குக் காரணம் முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின் முதலமைச்சர் கருணாநிதிதான். அவர் ஆட்சியில் இருந்தபோது தமிழ்நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய உரிமைகள் எதையும் கேட்டுப் பெறவில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னதுபோல, தமிழ்நாட்டின் நலனுக்காக கருணாநிதி ஒரு துரும்பைக்கூட கிள்ளிப் போடவில்லை. "ஓட்டைச் சட்டியானாலும் கொழுக்கட்டை வெந்தால் சரி" என்ற பழமொழியைப்போல மைனாரிட்டியாக இருந்தாலும் ஆட்சியில் இருக்க வேண்டும். பிள்ளைகளும், பேரன்களும் பதவியில் இருக்க வேண்டுமென்றுதான் நினைத்தார் அவர். அதற்குமாறாக ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிமிடமும், ஒவ்வொரு நொடியும் தமிழ்நாட்டின் நலனைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் *12-45*

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியை உயர்த்திட மாண்புமிகு அம்மா அவர்களது அரசு, உறுதியான, தீவிரமான, நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக பொருளாதார நிலை பாதிப்படைந்த நிலையில் மாநில வரி வருவாயும் குறைந்து விட்டது என்று கூறிவிட்டு *2013-2014* ஆம் ஆண்டிற்கு *5* சதவீதத்திற்குக் கூடுதலாக வளர்ச்சி எவ்வாறு இருக்கும் என்று கூட சிலர் கேள்வி எழுப்பியுள்ளனர். அவர்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால், *2013-2014* ஆம் ஆண்டில், முந்தைய ஆண்டைவிட விவசாய உற்பத்தி, அதிகரித்துள்ளது. தொழில் துறையின் உற்பத்தியும் அதிகரித்துள்ளது. தற்போது *2013-2014* ஆம் ஆண்டிற்கான முன்பருவ கணிப்புப்படி, தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் *6.13* சதவீதமாக இருக்கும் என்ற புள்ளிவிவரம் வெளியிடப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே நிதிநிலை அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு, தமிழ்நாட்டின்



பொருளாதார வளர்ச்சி *6* சதவீதத்தைவிட கூடுதலாகவே உள்ளது என்பதையும் இங்கு தெளிவுபடுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கைமீதான விவாதத்தின்போது பல்வேறு உறுப்பினர்கள், குறிப்பாக, தே.மு.தி.க.-வைச் சேர்ந்த மாமன்ற உறுப்பினர்கள் மாநிலத்தின் கடன் சுமையைப் பற்றித் தெரிவித்தார்கள். இதுபற்றி சில தலைவர்களும், தங்களது கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். இன்றைய சூழ்நிலையில் உலகில் கடன் பெறாத அரசுகளே எதுவும் இல்லை என்பதை மாமன்ற உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும். மிக வளர்ச்சியுற்றதாகக் கருதப்படும் மேற்கத்திய நாடுகள்கூட அதிக அளவில் கடன் பெற்று பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. அதேபோல், மத்திய அரசாகட்டும் அல்லது பல்வேறு மாநில அரசுகளாகட்டும் கடன் பெற்றுத்தான் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. ஒரு அரசு வளர்ச்சித் திட்டங்களுக்காகக் கடன் பெறுவது என்பது தவறான காரியமும் அல்ல. இது உலகளவில் பொருளாதார மேதைகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வளர்ச்சிக்கான ஒரு முக்கிய யுக்தி ஆகும். நம்மிடம் கிடைக்கும் வருவாயை வைத்தே அனைத்து செலவுகளையும் மேற்கொண்டு, வளர்ச்சித் திட்டங்களையும் நிறைவேற்ற வேண்டும் என்றால் வளர்ச்சித் திட்டங்களை பல ஆண்டுகளுக்குத் தள்ளிவைக்க நேரிடும். இதனால் பொருளாதார வளர்ச்சியும் பின்தள்ளப்படும். எனவேதான், கடன் பெற்று பொருளாதார கட்டமைப்புகளை வலுப்படுத்தினால் பொருளாதார வளர்ச்சி துரிதமாக ஏற்பட்டு, அதன்மூலம் மாநில வருவாய் கூடுதலாகவும் கிடைக்கும். கடனைத் திரும்பச் செலுத்தவும் இந்தக் கூடுதல் நிதி ஆதாரம் பயன்படும். அதேசமயம் மக்களின் வாழ்க்கைத் தரமும் ஒட்டுமொத்த பொருளாதார நிலையும் விரைவாக உயரும்.

நமது நிதி ஆதாரத்தை மட்டும் வைத்து, *20* ஆண்டுகளில் நிறைவேற்றக்கூடிய திட்டங்களை கடன் பெற்று *5* ஆண்டுகளில் நிறைவேற்றினால், அதன்மூலம் பொருளாதார வளர்ச்சி பல மடங்கு உந்தப்படும் என்ற கருத்தின் அடிப்படையில்தான் இந்தக் கடன் வழிமுறை உலகெங்கும் பின்பற்றப்படுகிறது. ஆனால், அவ்வாறு பெறுகின்ற கடன் அளவோடு இருக்க வேண்டும். அவை அடிப்படைக் கட்டமைப்புகளுக்கும், வளர்ச்சித் திட்டங்களுக்கும் பயன்படுத்தப்பட வேண்டும். வருவாய்ச் செலவினங்களுக்குப்

பயன்படுத்தப்படக் கூடாது. அதேபோல், கடன் பெறுகின்ற அரசு, அதைத் திருப்பிச் செலுத்துகின்ற நிலையில் உள்ளதா என்பதையும் கருத்தில்கொள்ள வேண்டும். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டுதான், மத்திய அரசும், ஒவ்வொரு மாநில அரசும் மொத்தக் கடன் பெறும் அளவை வரையறுக்க, மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் கடன் அளவு சதவீதத்தை நிர்ணயம் செய்கின்றது. இதன்படி தமிழ்நாட்டிற்கு 2014-2015 ஆம் ஆண்டு மத்திய அரசு நிர்ணயித்துள்ள மொத்த நிலுவைக் கடன் அளவு, மாநிலத்தின் மொத்த பொருளாதார உற்பத்தி மதிப்பில் 25.2 சதவீதம் ஆகும். ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையில் உள்ளபடி, அரசின் மொத்த கடன் அளவு 18.91 சதவீதம் மட்டுமே என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்றால், மாண்புமிகு அம்மா அவர்களது அரசு பொறுப்பேற்ற 2011-2012 ஆம் ஆண்டில், இந்தக் கடன் அளவு, மாநில மொத்த உற்பத்தியில் 19.84 சதவீதம். அது 2012-2013 ஆம் ஆண்டில் 19.25 சதவீதமாகக் குறைத்துள்ளது. 2013-2014-ல் இந்த அளவு 18.94 சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

2014-2015 ஆம் ஆண்டிற்கு இது மேலும் குறைக்கப்பட்டு 18.91 சதவீதமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே மிகக் குறைந்த கடன் அளவுள்ள மூன்று மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று, என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். 2013-2014 நிலவரப்படி, மிகக் குறைந்த கடன் அளவாக 14.6 சதவீதம் சட்டீஸ்கர் மாநிலத்திலும், 18.4 சதவீதம் அரியானா மாநிலத்திலும் உள்ளது. அதேசமயம் நமது அண்டை மாநிலங்களான ஆந்திராவில் 22.4 சதவீதம், கர்நாடகாவில் 20.9 சதவீதமும், கேரளாவில் 23.9 சதவீதமும், மகாராஷ்டிராவில் 19.1 சதவீதமும், குஜராத்தில் 23.2 சதவீதமாகவும் உள்ளது. எனவே, தமிழ்நாட்டின் கடன் அளவு கட்டுக்குள்தான் உள்ளது எனவும், அதை எளிதாகத் திரும்ப செலுத்தக்கூடிய நிலையில்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ்நாட்டை வழிநடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-50

இந்தக் கடனும் முதலீடுகளுக்கு மட்டுமே செலவிடப்படுவதால், அது பொருளாதார வளர்ச்சியை ஊக்கப்படுத்தும் வகையில்



பயன்படுத்தப்படுகின்றது. இதனால் எதிர்காலத்தில் நாம் அடையும் பயன் மூலமாக வருவாய் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால், கடனைத் திரும்பச் செலுத்த முடியும் எனவும், கடன் பெறும் அளவு ஒவ்வோர் ஆண்டும் உயர்ந்து வந்தாலும், நான் ஏற்கெனவே தெரிவித்துள்ளபடி மொத்த பொருளாதார உற்பத்தி மதிப்பீட்டில் நிலுவையில் உள்ள கடன் அளவு தொடர்ந்து குறைவாகவே உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். கடனுக்கான வட்டி ஆண்டுதோறும் அதிகரித்தாலும், வருவாய் வரவில் வட்டியின் சதவீதம் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது என்பதையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

2010-2011-ல் வருவாய் வரவில் வட்டிச் செலவின சதவீதம் 11.31 என இருந்தது. ஏற்கெனவே பல்வேறு அரசுகள் பொறுப்பேற்றுள்ள கடனுடன், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகக் கடனை அரசு எடுத்துக் கொண்டதால், கூடியுள்ள 6,353 கோடி ரூபாய் கடனுக்கான வட்டியுடன் சேர்த்து, 2014-2015-ல் இந்த சதவீதம் 11.56 ஆகவே இருக்கும். எனவே, பெறும் கடனைத் திரும்பச் செலுத்துவதில் எந்தவிதமான பிரச்சினையும் இருக்காது என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை பற்றி இலவசங்கள் நிறைந்த பட்ஜெட் என்று ஒரு சாரார் குறிப்பிடுகின்றனர். பொதுவாக செலவினங்கள், பொதுப் பணிகள் (Public Services), சமூகப் பணிகள் (Social Services), பொருளாதாரப் பணிகள் (Economic Services) என்று வகைப்படுத்தப்படுகின்றன. அதில் Social Services என்று சொல்லப்படும் சமூகப் பணிகள் மிக மிக அவசியமான சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை உள்ளடக்கியவை என்பதையும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைப் போக்க உதவுகின்ற ஏழைகளுக்குப் பயன்படும் திட்டங்களும் அவற்றில் அடங்கும் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். இலவசத் திட்டங்கள் என்று இவற்றை குறுகிய கண்ணோட்டத்துடன், புறந்தள்ளிவிட முடியாது. வரவு-செலவுத் திட்டத்தின் மொத்த மதிப்பீட்டில் Social Services என்று சொல்லப்படுகின்ற சமூகப் பணிகளுக்காக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 47,968 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது. ஆனால், இவை அனைத்தையும் இலவசத் திட்டங்கள் என்று கருதிவிட முடியாது. இந்தத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் பொதுக் கல்விப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி, 20,801 கோடி ரூபாய்.

தொழில்நுட்பக் கல்விக்காக, 1,126 கோடி ரூபாய். மருத்துவம், பொதுச் சுகாதாரத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி 5,188 கோடி ரூபாய். குடும்ப நலப் பணிகளுக்காக 987 கோடி ரூபாய். குடிநீர் மற்றும் துப்புரவுப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி 340 கோடி ரூபாய். நகர்ப்புற வளர்ச்சிக்கு ஒதுக்கப்பட்ட நிதி 2,248 கோடி ரூபாய். ஆதி திராவிடர் நலப் பணிகளுக்கு 2,817 கோடி ரூபாய். சமூகப் பாதுகாப்புப் பணிகளுக்காக 9,667 கோடி ரூபாய். இவை அனைத்தும், Social Services என்ற பிரிவின் கணக்கிலேயே எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

இவற்றில் வளர்ச்சிப் பணிகளுடன் நலத் திட்டப் பணிகளும், சம்பளம் போன்றவையும் அடங்கும். ஆனால், இவற்றையெல்லாம் இலவசத் திட்டங்கள் என எடுத்துக் கொள்ள முடியாது. அதே போல், சம்பளங்களுக்கும் ஓய்வூதியம் வழங்குவதற்கு மட்டுமே 57 சதவீதம் வருவாய் செலவினம் ஏற்படுவதாக சில விமர்சனங்கள் எழுகின்றன. இதில் நாம் முக்கியமாக கருத்தில் கொள்ளவேண்டியது கல்வி, மக்கள் நல்வாழ்வுத் துறை போன்ற மனித வள மேம்பாட்டுத் துறைகளில் அதிக செலவினம் சம்பளத்திற்காகத்தான் செலவிட இயலும். அதற்காக இந்தத் துறைகளில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை என எடுத்துக்கொள்ள முடியாது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை கல்வித் துறையில் கட்டடங்கள் மற்றும் பிற வசதிகளை மேம்படுத்தவும், மக்கள் நல்வாழ்வுத் துறையில் மருத்துவமனைகள் போன்ற வசதிகளை மேம்படுத்தவும், மிகக் கணிசமான நிதி செலவிடப்படுகின்றது. எனவே, இதை வெறும் சம்பளச் செலவு என்றோ இலவசத் திட்டங்கள் என்றோ எடுத்துக்கொள்ளக் கூடாது. மாண்புமிகு அம்மா அவர்களது அரசு செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களில் கல்வி உதவித் தொகை திட்டம் மிக முக்கியமானது. ஏழை எளிய மாணவர்கள் கல்வி அறிவு பெறுவதற்கு உதவி புரியும் இத்திட்டங்களை இலவசத் திட்டங்கள் என்ற குறுகிய கண்ணோட்டத்தோடு பார்ப்பது தவறு. அதேபோல், விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம். ஏழை எளிய மக்களுக்கு உதவிடும் மகத்தான சமூக மேம்பாட்டுத் திட்டம். இதுபோலவே, பேறுகால உதவித் திட்டம் போன்ற திட்டங்களையும், இலவசத் திட்டங்கள் என்று கருதுவது ஒரு தவறான பார்வையாகும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இன்று மாண்புமிகு அம்மா அவர்களின் நலத் திட்டங்கள் போய்ச் சேராத வீடுகளே இல்லை. சமைப்பதற்கு அரிசி இல்லையே என்று



கவலைப்படுவோர் யாரும் தமிழ்நாட்டிலே இல்லை. தாலிக்குத் தங்கம் இல்லையே, திருமணச் செலவுக்குப் பணம் இல்லையே என்ற கவலை ஏழைப் பெண்களுக்கு இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) வசதியானவர்களின் வீட்டில் இருப்பதைப்போல நம் வீட்டிலும் கிரைண்டர் இல்லையே, மிக்ஸி இல்லையே, மின் விசிறி இல்லையே என்ற கவலை யாருக்குமே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) வயதான காலத்தில் ஆதரிக்க யாரும் இல்லை, பெற்ற பிள்ளைகளும் கைவிட்டு விட்டார்கள் என்று தவிப்பவர்கள் தமிழ்நாட்டில் இல்லவே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆண்டுத் தேர்வுகள் முடிந்து பள்ளிகள் திறந்ததும் பிள்ளைகளின் படிப்பிற்கு என்ன செய்யப்போகிறோமோ, அவர்களின் தேவைகளை எப்படி நிறைவேற்றப் போகிறோமோ என்ற கவலை கொண்ட பெற்றோர்கள் தமிழகத்தில் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) பணக்கார வீட்டுப் பிள்ளைகள்தான் மடிக் கணினி வாங்க முடியும், நம்மால் முடியாது என்று ஏழை குடும்பத்து மாணவ, மாணவிகள் ஏங்கினார்கள், நடுத்தர குடும்பத்து மாணவ, மாணவிகள் கலங்கினார்கள். அவர்களின் ஏக்கத்தை நீக்கியது மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களின் கலக்கத்தை மாற்றியது மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சி. விலையில்லா மடிக் கணினி வழங்கும் திட்டம், இளம் தலைமுறையினரை தொழில்நுட்பப் புரட்சிக்குத் தயார்படுத்தும் ஒரு திட்டமாகும். ஏழை மாணவர்கள் கல்வி பயிலும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் நிறுவனங்களுக்கு மட்டுமே விலையில்லா மடிக் கணினிகள் வழங்கப்படுவதால், (மேசையைத் தட்டும் ஒலி) ஏழைகள், வசதி படைத்தோர் இடையிலான ஏற்றத் தாழ்வுகளைப் போக்கி, ஏழை மாணவச் செல்வங்களின் ஏக்கத்தை இத்திட்டம் தீர்த்து வைத்துள்ளது.

பிற்பகல் 12-55

குடியிருக்க ஒரு வீடு கிடைக்காதா, கடைசி காலம் வரை குடிசைகளில்தான் வாழ வேண்டுமா என்று ஏங்கிய ஏழை மக்களுக்கு பசுமை வீடு தந்து அவர்களது கண்ணீரைத் துடைத்தது மாண்புமிகு அம்மாவின் ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படி எத்தனை எத்தனை திட்டங்கள் ஏழைகளுக்கு! 4 ஆண்டுகளுக்கு 4 இலட்சம் ரூபாய் வழங்கும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் வேறு எந்த மாநிலத்திலாவது உண்டா? ஏழை கிராம மக்கள் பொருளாதார

வளர்ச்சி பெற கறவை மாடுகள், ஆடுகள் வழங்கும் திட்டம் வேறு எந்த மாநிலத்திலாவது உண்டா? தொட்டில் குழந்தைகள் திட்டம் வேறு எந்த மாநிலத்திலாவது உண்டா? (மேசையைத் தட்டும் ஒலி)

கருவுற்ற தாய்மார்களுக்கு ரூபாய் 12,000 வழங்குவது வேறு எந்த மாநிலத்திலாவது உண்டா? கோவில்களில் அன்னதானம் வழங்கும் திட்டம் வேறு எந்த மாநிலத்திலாவது உண்டா? (மேசையைத் தட்டும் ஒலி) அரசைத் தேடி மக்கள் வந்த காலம் போய், மக்களைத் தேடி அரசு என்ற "அம்மா திட்டம்" வேறு எந்த மாநிலத்திலாவது உண்டா? (மேசையைத் தட்டும் ஒலி)

ஏழை எளியவர்களின் வயிறு நிறைய வைக்கும் அட்சய பாத்திரம் போல அம்மா உணவகம். மிகக் குறைந்த விலையில் ஒரு இட்லி 1 ரூபாய், சாம்பார் சாதம் 5 ரூபாய், தயிர் சாதம் 3 ரூபாய் இத்திட்டம் வேறு எந்த மாநிலத்திலாவது உண்டா? (மேசையைத் தட்டும் ஒலி)

இத்தகைய திட்டங்கள்தான் ஏழை மக்களுக்கு ஒரு வாழ்வாதாரத்தை ஏற்படுத்துகின்றன. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களது அரசு சமூகப் பணிகளுக்கு 47,968 கோடி ரூபாயைச் செலவழிக்கிறது என்பதை ஒரு வீண் செலவு என்பது ஒரு வெறும் கோஷம் என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதை ஆக்கப்பூர்வமாகச் செயல்படுத்தலாம் என்பதைப் போன்றும் விமர்சனங்கள் எழுப்பப்படுவது ஒரு தவறான கண்ணோட்டத்தில் எழும் கருத்து என்பதையும் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசைப் பொறுத்தவரை, ஒரு வரவு-செலவுத் திட்டம் என்பது அந்த அரசு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளின் அடிப்படையிலும் நிலவி வரும் பொருளாதாரச் சூழ்நிலைக்கு ஏற்பவும், உரிய திட்டங்களை வகுக்கும் ஒரு திட்டமாக அமைய வேண்டும். அந்த வகையில்தான் மாநிலத்தின் பொருளாதாரச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அதற்கேற்றவாறு விவசாயம் அதைச் சார்ந்த துறைகளுக்கும் தொழில் துறைக்கும் குறிப்பாக, சிறு, குறு தொழில் துறைக்கும் அடிப்படைக் கட்டமைப்புகளைத் தொடர்ந்து மேம்படுத்தி, வறுமை ஒழிப்பிற்கு முழுமையாக ஒரு திட்டத்தை வழங்குவதையும், இளைஞர் மேம்பாட்டிற்குத் திறன் மேம்பாட்டிற்கான வழிவகைகளை வகுத்து, எதிர்கால வளர்ச்சிக்கு வழிவகுக்கக்கூடிய வகையில் உரிய



திட்டங்களுக்கும், கல்வி மற்றும் சுகாதாரத்திற்கும் உரிய முக்கியத்துவத்தை வழங்கியும் கிராம, நகர்ப்புற மேம்பாட்டிற்கு உரியவாறு நிதியை ஒதுக்கியும், இந்த வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் நலன் கருதி, தமிழ்நாட்டின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, எண்ணற்ற புதிய திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கை தாங்கி வந்துள்ளது. இது தவிர, பல்வேறு புதிய திட்டங்களும், நபார்டு வங்கியின் நிதி உதவியோடு மேற்கொள்ளப்படுவது பற்றி நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏற்கெனவே நடைபெற்று வரும் திட்டங்களுக்கான நிதியும் போதிய அளவு ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, எல்லா வகையிலும் முழுமையானதாக இந்த நிதிநிலை அறிக்கை உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம்-ஒழுங்கு மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் அலங்கோலமாக இருந்தது. காவல் துறை தன் கம்பீரம் இழந்து நின்றது. திரைப்படங்களில், "காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்" என்று பாதிக்கப்பட்டவர்கள் கதறும்பொழுது, நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் வந்து காப்பாற்றுவார்கள். தி.மு.க. ஆட்சியில், தமிழக மக்கள் மட்டுமல்ல, காவல் துறையே "காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்", என்று கதறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அப்பொழுது புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகி காவல் துறையையும், தமிழக மக்களையும் சேர்த்து காப்பாற்றினார் என்பதுதான் வரலாறு. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு மீண்டும் அமைதிப் பூங்கா மாநிலமாக மாறியது. காவல் துறையினர் தங்கள் கடமைகளைச் சரியாகச் செய்வதற்கு சுதந்திரம் கொடுக்கப்பட்டிருப்பது மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான். அதனால்தான் உயிரைப் பணயம் வைத்தாவது தீவிரவாதிகளைப் பிடிக்கின்ற துணிச்சல் காவல் துறைக்கு வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலே தாதாக்களின் கொட்டம் ஒடுக்கப்பட்டிருக்கிறது. ரவுடிகளின் அராஜகம்

அடக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வராக இருக்கும்பொழுதுதான், நம்மைக் காப்பதற்கு ஒரு காவல் தெய்வம் எந்த நேரமும் விழித்துக் கொண்டேயிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்ற நம்பிக்கையோடு, தமிழக மக்கள் நிம்மதியோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 2014-2015 ஆம் ஆண்டில் காவல் துறையின் மேம்பாடு மற்றும் நவீனமயமாக்கலுக்கென 5186.20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை புகழப்படுவதும், போற்றப்படுவதும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான். தொழிலாளர்கள் மதிக்கப்படுவதும் அம்மா அவர்களின் ஆட்சியில்தான். இனி எப்பொழுதுமே தொழிலாளர்கள் அம்மா அவர்களின் பக்கம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு மிகப் பெரிய உதாரணம்தான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பிறந்த நன்னாளை முன்னிட்டு நடைபெற்ற இரத்த தான முகாமில் கலந்து கொண்டு, ஒரே நாளில் 53,129 போக்குவரத்துத் தொழிலாளர்கள் இரத்தம் கொடுத்து, கின்னஸ் சாதனை புரிந்திருக்கின்றார்கள் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்குக் காரணம் என்ன? மாண்புமிகு அம்மா அவர்கள் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்குத் தாயாக விளங்கி, தாராளமாக திட்டங்களை அள்ளிக்கொடுக்கிறார்கள். 2014-2015 ஆம் ஆண்டில் இத்துறையின் வளர்ச்சிக்கென 1,107.97 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல மாநிலங்களில் டி.வி. நடத்துவது, திரைப்படங்கள் தயாரிப்பது மற்ற தயாரிப்பாளர்கள் தயாரித்த படங்களை மிரட்டி அடிமாட்டு விலைக்கு வாங்குவது, இதுதான் கருணாநிதியின் குடும்பத் தொழில். தமிழ்நாட்டில் உள்ள இலட்சக்கணக்கான குடும்பங்களைப் பற்றியோ, அவர்களை வாழவைக்கும் தொழில்களைப் பற்றியோ, அவற்றை ஊக்குவிக்கும் தொழில் துறையைப் பற்றியோ, தி.மு.க. ஆட்சியில் அக்கறைப்பட்டதில்லை. "அறுவடைக் காலத்தில் எலிக்குக்கூட அஞ்சு பொஞ்சாதி" என்று ஒரு பழமொழி இருக்கிறது அதைப்போல, தி.மு.க. ஆட்சியில் இருந்தபொழுது, அறிவிக்கப்படாத



ஐந்து முதலமைச்சர்கள் இருந்தார்கள், பிறகு எப்படி தொழில் துறை உருப்படும்? தொழில் துறை வளர்ச்சியடைந்தால் வேலைவாய்ப்புப் பெருகும், இளைஞர்களின் எதிர்காலம் ஒளிமயமாகும். அப்படி ஒரு ஒளிமயமிக்க எதிர்காலத்தை உருவாக்கித் தந்திருப்பதுதான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) 2014-2015 ஆம் ஆண்டிற்கு தொழில் துறையின் முன்னேற்றத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 2,183.62 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எல்லாப் புகழும் இறைவனுக்கே" என்று சொல்வதுபோல, பொது விநியோகத் திட்டம் சார்பில் "100 அம்மா மருந்தகங்கள்" தொடங்கப்படும் என்ற அறிவிப்புக்குக் கிடைத்த வரவேற்புகளும், வாழ்த்துகளும், புகழும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கே சேரும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கை நமது மாநிலத்தை வெற்றிப் பாதையில் கொண்டு செல்லும் என்றும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் நாட்டின் மிக உன்னதத் தலைவராக உயர்வது உறுதி என்றும் பெருமிதத்தோடு தெரிவித்திருந்தேன். ஆனால், கருணாநிதியோ "இதிலிருந்து முதல்வருக்கு எந்த அளவுக்குப் பதவி வேட்கை இருக்கிறது என்பது நன்றாகவே தெரிகிறது" என்று கூறியிருக்கிறார். யாருக்குப் பதவி வேட்கை? "தம்பிக்குப் பதவி கொடுத்தால் கட்சியை கலகலத்துப்போக வைத்துவிடுவேன்" என்று அண்ணன் சொல்வதும், "அண்ணனுக்குப் பதவி உதவி செய்தால் அரசியலில் இருந்தே விலகி விடுவேன்" என்று தம்பி மிரட்டுவதும், இடையில் புகுந்து தங்கை, "நான் யார் தெரியுமா? என் அப்பா யார் தெரியுமா?" என்று கேட்பதும், "அதற்குள் என்ன அவசரம்? பொறுங்கள், அவ்வளவு எளிதில் நான் பதவியை விட்டுவிடுவேன் என்று நினைத்தீர்களா?" என்று தந்தை மிரட்டுவதும். பதவி வேட்கை படுத்தும் பாடுகள் அல்லவா! இந்தக் காட்சிகளை தமிழ்நாட்டு மக்கள் தினம் பார்த்துக்கொண்டுதானே இருக்கிறார்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) தோள் தழுவி நடந்தாலும் சரி, இன்னும் தொய்ந்துபோய் துவண்டாலும் சரி, பதவி நாற்காலியை மட்டும் விடவே மாட்டேன் என்று இறுகப்

பற்றிக்கொண்டிருக்கும் கருணாநிதி, தனக்குப் பின்னாலும் தன் குடும்பத்தை விட்டு பதவி போய்விடக்கூடாது என்று திட்டமிட்டுச் செயல்படும் கருணாநிதி, தமிழ்நாடே தனது இல்லமாகவும், தமிழக மக்களே தனது சொந்தமாகவும் கொண்டு தனக்கென வாழாமல் தமிழ் இனத்திற்கென வாழ்ந்துகொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களைப் பார்த்து *(மேசையைத் தட்டும் ஒலி)* பதவி வேட்கை என்று சொல்வது வெட்கக் கேடு!

அதேபோன்று, திருச்சியில், தி.மு.க.-வினர் மத்தியில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஸ்டாலின் பேசும்போது, பாராளுமன்றத் தேர்தல் வருவதற்கு முன்பு சட்டமன்றத் தேர்தல் வராதா? ஒருவேளை, இந்தப் பாராளுமன்றத் தேர்தலோடு இணைந்து சட்டமன்றத் தேர்தல் வராதா என்பது இன்றைக்கு மக்களிடத்தில் இருக்கிற உணர்வு, என்று கூறியிருக்கிறார். ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட ஒருவன், "ஐயோ, உலகம் அழியப்போகுதே! உலகம் அழியப்போகுதே!" என்று கத்தினானாம். கரையில் இருந்தவர்கள் அவனைக் காப்பாற்றி, "எங்கடா உலகம் அழியப்போகுது?" என்று கேட்டபோது, "ஆற்று வெள்ளத்தில் மூழ்கி நான் செத்து போயிருந்தால் என்னைப் பொறுத்தவரையில் இந்த உலகம் அழிந்துபோயிருக்கும்தானே" என்று பதில் சொன்னானாம். *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்தக் கதை போல இருக்கிறது ஸ்டாலின் பேச்சு. மக்கள் யாரும் அப்படிப் பேசவும் இல்லை, கேட்கவும் இல்லை. அது ஸ்டாலின் உள்மனத்தின் நப்பாசை. நிறைவேற வழியில்லாத பேராசை.

மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே எடுத்துச் சொன்னதுபோல, மக்கள் அம்மா பக்கம் இருக்கிறார்கள். அம்மா அவர்கள் மக்கள் பக்கம் இருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* எத்தனை தேர்தல்கள் வந்தாலும் சரி, மாண்புமிகு அம்மா அவர்களை வெற்றிகொள்ள முடியாது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். எந்தக் கொம்பனாக இருந்தாலும் சரி அல்லது எந்த வம்பனாக இருந்தாலும் சரி, அவர்களை டெபாசிட் இழக்கச் செய்து, தோல்வியை அளித்து அம்மா அவர்களையே மக்கள் வெற்றி பெறச் செய்வார்கள் என்பதை ஆணித்தரமாக எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*



*பிற்பகல் 1-05*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. பங்கு பெற்ற காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில் நடந்த அவலங்களை மக்கள் மறக்கவில்லை. தமிழ்நாட்டிற்கு இழைத்த கொடுமைகளை மக்கள் மறக்கவில்லை. தமிழ் இனத்திற்குச் செய்த துரோகங்களை மக்கள் மறக்கவில்லை. கச்சத் தீவை இலங்கைக்குத் தாரை வார்த்துக் கொடுத்தவர் கருணாநிதி. அதை மீட்பதற்காக போராடிக் கொண்டிருப்பவர் நம் அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* இலங்கையிலே தமிழ் இனம் அழிந்து போகக் காரணமாக இருந்தது மத்திய காங்கிரஸ் அரசு. அதை கை கட்டி, வாய் மூடி மௌனமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர் கருணாநிதி. "இராஜபக்சே ஒரு போர்க் குற்றவாளி" என்று முழங்கி, இலங்கைக்குப் பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை சட்டமன்றத்திலே நிறைவேற்றியவரும் நம் அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* நெய்வேலி நிலக்கரி நிறுவனப் பங்குகளைத் தனியாருக்கு விற்க முடிவு செய்தது மத்திய காங்கிரஸ் அரசு. அந்தப் பங்குகளைத் தனியாருக்கு விற்க விடாமல் வாதாடி, போராடி தமிழ்நாடு அரசிற்கே விற்க வைத்து, தொழிலாளர்களைப் பாதுகாத்தவரும் நம் அம்மா அவர்கள்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மத்தியில் இருக்கும் அரசு மக்கள் உரிமைகளை மதிக்கின்ற அரசு அல்ல; மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு, மக்கள் தேவைகளைக் காதில் வாங்கி, மக்களுக்கு நன்மை செய்யும் அரசு அல்ல. மக்களை மதிக்கத் தெரியாத மத்திய அரசை, சட்டத்தின் துணையால்தான் சம்மதிக்க வைக்க முடியும்; மத்திய அரசின் முற்றிப்போன முதுகெலும்பை, நீதியின் துணையால்தான் வளைக்க முடியும் என்பதற்கு மற்றுமொரு உதாரணம்தான் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட, சாந்தன், முருகன் மற்றும் பேரறிவாளன் ஆகியோரது தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்து, *18-2-2014* அன்று உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பு. உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பில் தெரிவித்திருந்த கருத்தின் அடிப்படையில், சாந்தன், முருகன் மற்றும் பேரறிவாளன் ஆகியோரையும் அதேபோன்று, சிறையில் இருக்கும் திருமதி நளினி, ராபர்ட் பயஸ், ஜெயகுமார் மற்றும் ரவிச்சந்திரன் ஆகியோரையும்

விடுதலை செய்ய முடிவெடுத்து, அந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க முடிவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நேற்று இந்த அவையில் அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உலகத் தமிழ் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும் சரித்திரச் சிறப்பு மிக்க இந்த முடிவை தமிழ் கூறும் நல்லுலகம் ஒட்டு மொத்தமாகப் பாராட்டிக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) உலகத் தமிழ் இனமே, ஒருமுகமாய் திரண்டு, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி கூறிக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

எந்த இடத்திலிருந்தும், எந்த வகையிலிருந்தும், இடையூறு ஏதும் வருவதற்கு முன்னரே, மின்னல் வேகத்தில் நடவடிக்கை மேற்கொண்டு அவர்களை விடுதலை செய்த மாண்புமிகு அம்மா அவர்களின் ராஜதந்திரத்தை உலகத் தமிழர்கள் அனைவரும் ஒட்டு மொத்தமாகப் பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உலகத் தமிழர்களின் ஒரே தலைவராக, ஒப்பற்றத் தலைவராக, உயர்ந்தோங்கி நிற்கும், மாண்புமிகு அம்மா அவர்கள் உலகின் எந்த சக்தியாலும் பிரிக்க முடியாதபடி (மேசையைத் தட்டும் ஒலி) உடம்பில் உள்ள இரத்தத்தில் அணுக்கள் கலந்திருப்பதைப் போல், உலகில் உள்ள தமிழர்களின் இரத்தத்தில் கலந்திருக்கிறார்கள் நம் அம்மா அவர்கள். உயிருக்குள் உயிராக நிறைந்திருக்கிறார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காற்று பல திசைகளில் வீசும், ஆனால் வெற்றிக் காற்று, ஒரே திசையில் வீசிக் கொண்டிருக்கிறது. நம் இதய தெய்வம் இருக்கும் திசை நோக்கி வீசிக் கொண்டிருக்கிறது. காரணம், இந்த நிதிநிலை அறிக்கை தமிழர்களின் தலைவிதியை மாற்றி எழுதிய நிதிநிலை அறிக்கை; தமிழர்களின் வாழ்வை தலைநிமிர வைத்த நிதிநிலை அறிக்கை; நான்காவது முறையாக புதிய வரிகளே இல்லாத நிதிநிலை அறிக்கை; மாண்புமிகு அம்மா அவர்களின் மதிநுட்பத்தால், மகத்தான சிந்தனையால், உருவான நிதிநிலை அறிக்கை; மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவு சார்ந்த வழிகாட்டுதலால், வடிவமைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை; தமிழக மக்களுக்கு நலத் திட்டங்களை வாரி வாரி வழங்கிக்கொண்டிருக்கும் நிதிநிலை அறிக்கை.



2011 ஆம் ஆண்டு ஆகஸ்டு 4 ஆம் நாள் தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கை, தமிழக அரசியல் வரலாற்றில் முதன்முதலாக ஒரு இலட்சம் கோடி ரூபாயைத் தாண்டியது. மொத்த மதிப்பீடு 1 இலட்சத்து 2 ஆயிரத்து 476 கோடி ரூபாய்; 2012 மார்ச் திங்கள் 26 ஆம் நாள் தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கை மொத்த மதிப்பீடு 1 இலட்சத்து 21 ஆயிரத்து 667 கோடி ரூபாய்; 2013 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 21 ஆம் நாள் தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கை மொத்த மதிப்பீடு ஒரு இலட்சத்து 41 ஆயிரத்து 518 கோடி ரூபாய். ஒவ்வோராண்டும் படிப்படியாக உயர்ந்து இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மொத்த மதிப்பீடு ஒரு இலட்சத்து 62 ஆயிரம் கோடி ரூபாய்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்கள்மீது, மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டிருக்கும் அன்பிற்கும், பெருகி வரும் அக்கறைக்கும், இந்த நிதிநிலை அறிக்கையே ஒரு சான்று. இப்படி எல்லா வகையிலும் ஒரு முழுமையுடையதாக அனைத்து துறைகளுக்கும் முக்கியத்துவம் வழங்கப்பட்டு, தேவைகள் கண்டறியப்பட்டு அதற்கேற்றவாறு இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில்கூட கூடுதல் வரி விதிப்பு எதுவும் இல்லாமல், உள்ள நிதி ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டே இத்திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்தில்கொள்ள வேண்டுகிறேன். இந்த அளவில் என் பதிலுரை, எழுப்பப்பட்ட முக்கிய கருத்துகளுக்கு நிறைவான விளக்கத்தை அளித்திருக்கும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

பிற்பகல் 1-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைவுரையாக இந்தியத் திருநாடு இன்று ஒரு இக்கட்டான சூழ்நிலையில் நின்றுகொண்டிருக்கிறது. காலங்காலமாக, தலைமுறை தலைமுறையாக பதவி சுகத்தை அனுபவித்துவிட்டு, இன்று அது பறிபோய் விடுமோ என்று பரிதவித்து நிற்கும் கூட்டம் ஒரு புறம்; செய்த ஊழல்களிலிருந்து தப்பிக்க வேண்டுமே, மீண்டும் திகார் சிறை காணாமல் தப்பிப் பிழைக்க வேண்டுமே என்று தவித்துக்கொண்டிருக்கும் கூட்டம் இன்னொரு புறம்; இந்த இரண்டுக்கும் நடுவே, இந்தியத் தேசத்தை திறமுடன் வழிநடத்த, உலக அரங்கில் தலைநிமிர்ந்து நடக்க வைத்திட ஒரு புதிய தலைமை வேண்டும் என்று பாரத மாதா எதிர்நோக்கிக்

காத்திருக்கிறாள். ஆம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆம். ஒரு புதிய தலைமை வேண்டும். அறிவும் ஆற்றலும் நிறைந்த தலைமை; அன்பும் பண்பும் இணைந்த தலைமை; வீரமும் விவேகமும் பிணைந்த தலைமை; வலிவும் தெளிவும் மிகுந்த தலைமை; கூர்ந்த மதியும் குறையிலா சிந்தனையும் கொண்ட தலைமை; கனிவும் துணிவும் கலந்த தலைமை; புதுமைத் திட்டங்களை வகுக்கின்ற தலைமை; புரட்சிகரமாக அதனைச் செயலாக்கும் தலைமை; (மேசையைத் தட்டும் ஒலி) சுயமரியாதையை ஒருபோதும் விட்டுக்கொடுக்காத தலைமை; சுயகௌரவத்தை எவருக்கும் அடகு வைக்காத தலைமை; சமூக விரோதிகளை இரும்புக் கரம் கொண்டு அடக்குகின்ற தலைமை; சாதாரண மக்களை அன்புக் கரம் கொண்டு அரவணைக்கின்ற தலைமை; (மேசையைத் தட்டும் ஒலி) சட்ட விரோதிகளை, தீவிரவாதிகளை தயவு தாட்சண்யமின்றி நாட்டை விட்டே விரட்டுகின்ற தலைமை; தேசியத்தையும் தெய்வீகத்தையும் தனது இரு கண்களாகக் கொண்ட தலைமை; (மேசையைத் தட்டும் ஒலி) தேச ஒற்றுமையைத் தனது உயிரெனக் கருதும் தலைமை; தேசப் பற்றை தனது உயிரைவிட மேலாகக் கருதும் தலைமை; (மேசையைத் தட்டும் ஒலி) அமைதி, வளம், வளர்ச்சி என்னும் தாரக மந்திரத்துடன் பாரத மாதாவை கண் எனக் காத்து பொன் எனப் போற்றுகின்ற புரட்சித் தலைமை; (மேசையைத் தட்டும் ஒலி) இத்தனை தகுதிகளையும் கொண்ட ஒரே தலைமை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒருவர்தான் என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம் இதய தெய்வம் அம்மா அவர்களைப் போல நிருவாகத் திறமை இந்தியாவில் வேறு எந்தத் தலைவருக்கும் இல்லை. நம் இதய தெய்வம் அம்மா அவர்களைப் போல வீரமும் துணிச்சலும் இந்தியாவில் வேறு எந்தத் தலைவருக்கும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இந்து, முஸ்லிம், கிறிஸ்துவர் மற்றும் சிறுபான்மையின மக்களைச் சமமாக நினைக்கின்ற தலைவர்; இந்தியாவில் நம் இதய தெய்வம் அம்மா அவர்களைப் போல வேறு எவருமே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மற்ற இந்தியத் தலைவர்களை விடவும் சிறந்த தகுதிகள் நம் இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு இருக்கின்ற காரணத்தினால்தான் நம் அம்மா அவர்களின் பெருமை தமிழ்நாட்டையும் தாண்டி இந்தியா முழுவதும் பரவிக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு



அம்மா அவர்கள் பாரதப் பிரதமர் ஆவார் என்றும், ஆக்குவோம் என்றும் பல தலைவர்கள் சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். இப்பொழுது இந்தியாவில் எல்லாக் கட்சிகளும் குழப்பத்தில் தவித்துக் கொண்டிருக்கின்றன. யாரோடு கூட்டணி சேருவது, யாரைக் கூட்டணியில் சேர்த்துக்கொள்வது, யாரோடு சேர்ந்தால் வெற்றி பெறலாம், யாரோடு சேர்ந்தால் மானத்தைக் காப்பாற்றிக்கொள்ளலாம் என்று கணக்குப் போட்டுப் பார்த்து கலங்கிப் போயிருக்கின்றன. ஆனால் எந்தக் குழப்பமும் இல்லாமல், தெளிவாக, துணிவாக, 40 தொகுதிகளிலும் வெற்றி பெறுவோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்று உறுதியாக இருக்கின்ற ஒரே தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) அகில இந்தியாவிலும் நம் அம்மா அவர்கள் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவின் தலைமைப் பொறுப்பை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்பது ஒன்றுதான் பாரதம் உலக அரங்கில் தலைநிமிர (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு விடிவைக் காட்டும். இந்த இலக்கை எய்திட, இந்த இலட்சியத்தை அடைந்திட, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் 40-க்கு 40 இடங்களில் வென்று, வெற்றிக் கனியை மாண்புமிகு அம்மா அவர்களின் திருக்கரங்களில் ஒப்படைக்க உறுதி ஏற்போம். (மேசையைத் தட்டும் ஒலி) அதுவரை விழி மூடோம், பசி நோக்கோம், தடை எது வரினும் தயங்காது தகர்த்தெறிந்து தமிழகத்தின் தனிப் பெருமையை நிலைநிறுத்துவோம், வெற்றி பெறுவோம், வெற்றி பெறுவோம் என்று கூறி என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களது அரசின் நான்காவது நிதிநிலை அறிக்கையை இம்மாமன்றத்தில் அளித்திடும் வாய்ப்பினை அளித்து, அதன் தொடர்ச்சியாக அதன் மீதான விவாதங்களுக்குப் பதிலுரை வழங்குகின்ற நல்வாய்ப்பினை எனக்கு நல்கியமைக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் மீண்டும் எனது வணக்கத்தையும் நன்றியையும் சமர்ப்பித்து இந்தப் பதிலுரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

## 9. அரசினர் தீர்மானங்கள்

### (அ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதிகள் 30, 130, 132 ஆகியவற்றைத் தளர்த்தக் கோரும் அரசினர் தீர்மானம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2014), 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2014), 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியின்மையைத் தடுக்கும்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2014), 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2014), 2014 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான இழப்பீடு மற்றும் ஒளிவு மறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு உரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2014) மற்றும் 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2014) ஆகியவை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-15



## 10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2014

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2014), மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2014)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின்

---

@ 20-2-2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)





மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2014

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2014), மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2014)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு

---

@ 20-2-2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2014 பிப்ரவரி 20

எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும்



2014 பிப்ரவரி 20]

பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 1-20

### (இ) சென்னை மாநகர காவல் (சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி மாநகரங்களுக்கு நீட்டிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவு, 2014

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2014 ஆம் ஆண்டு சென்னை மாநகர காவல் (சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி மாநகரங்களுக்கு நீட்டிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2014), மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு சென்னை மாநகர காவல் (சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி மாநகரங்களுக்கு நீட்டிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2014) @ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 17-2-2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2014 பிப்ரவரி 20

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு சென்னை மாநகர காவல் (சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி மாநகரங்களுக்கு நீட்டிப்பு)



2014 பிப்ரவரி 20] [செல்வி ஜெ ஜெயலலிதா]

திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

## (ஈ) தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியின்மையைத் தடுக்கும்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2014

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியின்மையைத் தடுக்கும்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2014), மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியின்மையைத் தடுக்கும்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2014)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 20-2-2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2014 பிப்ரவரி 20

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.



2014 பிப்ரவரி 20]

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியின்மையைத் தடுக்கும்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

## (உ) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2014), மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2014)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

---

@ 20-2-2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2014 பிப்ரவரி 20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.



2014 பிப்ரவரி 20]

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-25

## (ஊ) நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான இழப்பீடு மற்றும் ஒளிவு மறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு உரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2014 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான இழப்பீடு மற்றும் ஒளிவு மறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு உரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2014), மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான இழப்பீடு மற்றும் ஒளிவு மறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு உரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2014)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

---

@20-2-2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு முன்மொழியப்பட்டிருக்கின்ற சட்டமுன்வடிவு என்பது மத்திய அரசினால் நிறைவேற்றப்பெற்றிருக்கிற நிலம் கையகப்படுத்துவது மற்றும் மறு குடியமர்வு சட்டத்தை தமிழ்நாட்டிற்குப் பொருத்துவது என்கின்ற அடிப்படையில் முன்மொழியப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே மத்திய அரசு 13 சட்டங்களை நிறைவேற்றியிருக்கிற சட்டத்திலிருந்து விதிவிலக்குக் கொடுத்து, அந்தச் சட்டத்தின் அடிப்படையிலே நிலம் கையகப்படுத்தப்பட்டால் அதற்கு உயர்ந்த நஷ்டஈடோ மற்றவையோ கோர முடியாது என்று விதிவிலக்கு அளித்திருக்கிறார்கள். அதையே பாராளுமன்றத்தில் எல்லாக் கட்சிகளும் எதிர்த்தும், அதை மீறி அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். இப்பொழுது அந்த 13 சட்டங்களோடு, தமிழ்நாட்டில் இருக்கிற 3 சட்டங்களையும் சேர்க்கிறபொழுது நாம் புதிதாக கொண்டு வந்திருக்கிற நிலம் கையகப்படுத்துகிற சட்டத்தின் அடிப்படையில் அவர்களுக்குரிய நஷ்ட ஈட்டைப் பெற முடியாத நிலைமை தமிழ்நாட்டில் ஏற்பட்டுவிடும். அதிலேயும் குறிப்பாக தொழில் நோக்கங்களுக்காக நிலம் கையகப்படுத்தப்படுகிறபோது அவர்களுக்கு உரிய நஷ்ட ஈடு கிடைப்பதற்கு இந்தச் சட்டம் தடை செய்கிறது. நிலம் கையகப்படுத்தக் கூடாது என்பது அல்ல பிரச்சினை. ஆனால், புதிய சட்டத்தின்படி அவர்களுக்கு உயர்ந்த நஷ்ட ஈடும், மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வில் இருக்கிற அத்தனையும் அந்தச் சட்டத்தினாலே தடை செய்யப்படுகிற காரணத்தினாலே, இதிலே குறைந்தபட்சம் தமிழ்நாடு தொழில் நோக்கங்களுக்காக நிலம் கையகப்படுத்தும் இந்தச் சட்டத்தை ஐந்தாவது இணைப்புப் பட்டியலிலே சேர்ப்பதிலிருந்து விலக்கி, தமிழ்நாட்டிலே நிலம் கையகப்படுத்தப்பட்டால் அதிகபட்சமான நஷ்ட ஈட்டை பெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும். எனவே, இந்த அம்சத்தை நீக்க வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நோக்கக் காரண விளக்க உரையில் சட்டமுன்வடிவைப் பற்றி தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும், மத்திய அரசால் இயற்றப்பட்ட புதிய நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின்கீழ் 4-வது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 13 நிலம் கையகப்படுத்தும் மத்திய சட்டங்களைத் தொடர்ச்சியாகச் செயல்படுத்த பிரிவு 105-ன்கீழ் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், ஒரு வருட காலத்திற்குள் சட்டங்களை மாற்றியமைத்து நில உரிமைதாரர்களுக்கான இழப்பீட்டை புதிய சட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு நிர்ணயம் செய்யவும் வழிவகுக்கப்பட்டுள்ளது. நமது மாநிலத்திலும் நிலம் கையகப்படுத்த மூன்று மாநிலச் சட்டங்கள் உள்ளன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 'விஷன் 2023' இலக்கை அடையவும், வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் பல்வேறு சமூக நலத் திட்டங்களின் நோக்கம் நிறைவேறவும் மேற்படி மூன்று மாநிலச் சட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்துவது அவசியமாகும். அதேநேரத்தில் நில உரிமையாளர்களுக்கு உரிய இழப்பீடு வழங்குவதும் அவசியம். இந்த மாநிலச் சட்டத் திருத்தம் கொண்டு வருவதன்மூலம் வளர்ச்சிப் பணிகளுக்குப் பாதிப்பு ஏற்படாமல், நில உரிமையாளர்களுக்குப் புதிய சட்டத்தில் வரையறுக்கப்பட்ட இழப்பீடு கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, மேற்படி சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

*பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.*

*பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2014 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான இழப்பீடு மற்றும் ஒளிவு மறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறு குடியமர்வு உரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.*

## (எ) தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2014), மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2014)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

---

*@ 20-2-2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2014) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 11. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் பாராட்டு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழிகாட்டுதலோடு, மிகச் சிறந்த நிதிநிலை அறிக்கை வழங்கப்பட்டுள்ளதற்கு பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழர் ஏற்றம் பெற ஏட்டில் அடங்கா எண்ணற்ற திட்டங்கள், எடுத்தியம்ப நேரமில்லை.

மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மக்களைப் பற்றியே எப்போதும் நினைப்பு, அந்த நினைப்பே இந்த அரசின் வனப்பு. அமுதூட்டும் அம்மா உணவகங்கள், இன்றைக்கு இராஜஸ்தானிலும், கர்நாடகாவிலும்!

'மிச்சப்படுத்து காலத்தை, அதிகப்படுத்து உன் படிப்பின் நேரத்தை' என்று சொல்லி, நம் அன்னையின் மிதிவண்டி வழங்கும் திட்டம், இன்றைக்கு கர்நாடகம் தொடங்கி பீகார் வரை!

அறிவூட்டும் அம்மா மடிக் கணினித் திட்டம், உ.பி. தொடங்கி, இன்னும் பிற மாநிலங்களிலும்! இப்படி அம்மாவின் அரசாட்சியைப் பிற மாநிலங்களும் பின்பற்றி நடக்கின்றன. இன்றைக்கு இந்தக் கூட்டம் முடிந்து நாடாளுமன்றத் தேர்தலை நோக்கிச் செல்ல இருக்கிறீர்கள்.

இமயம் நீருக்குள்ளும், இந்துமாக் கடல் நிலமாகியும், நின்ற காலத்தே வாழ்வாங்கு வாழ்ந்து, வரலாறு கண்டவன் தமிழன்! (மேசையைத் தட்டும் ஒலி)

ஏனையோர் உண்ணவும், உடுக்கவும் அறியாத காலத்தே, எண்ணும் எழுத்தும் கண்ணெனக் கொண்டவன் தமிழன், மீனும், வில்லும், புலியும் பொறித்த கொடிகளைப் பட்டொளி வீசிப் பறந்திட வைத்தே, பார் வியக்க செழித்தவன் தமிழன்!

மாண்புமிகு அம்மா, தங்களிடம், கலவரம் இல்லா பூமியாக்கி, காந்தி தேசத்தை அமைதிப் பூங்கா ஆக்கிடும் துணிவு, வாடி நிற்கும் மக்களின் வாட்டம் போக்கும் பரிவு, மனத்தால், இனத்தால், மக்களைப் பிரித்தே பார்க்காமல் இந்தியன் என்னும் ஒற்றைச் சொல்லில் இருக்கும் மக்களை இணைத்துப் பார்க்கும் தாய்மை, நடக்கும் நதிகளை இணைக்கத் துடிக்கும் தாராள ஆளுமை குணம் கொண்ட நம் பாசத் தாயின் பற்றற்ற கரங்களில், பாரதத்தின் அதிகாரம் வருகின்ற காலம்தான் (மேசையைத் தட்டும் ஒலி) அன்னைத் திருநாட்டை அனைத்திலும் முதலாக்கும் என்றே உலகெங்கும் வாழ்பவர் உரைக்கின்றார்.

நாற்பதிலும் வெல்ல, நம் நிலையும் உயர்கிறது. அமைதி, வளம், வளர்ச்சி எனும் அம்மாவின் முயற்சி! அன்னையர் நாட்டிற்கும் ஆக்கிடுமே எழுச்சி! (மேசையைத் தட்டும் ஒலி) வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்னும் முந்தைய கதைகள் முடிவுக்கு வருகின்றன. தெற்கு செழிக்கிறது, தமிழகம் தழைக்கிறது என்னும் நிலைக்குக் காரணியான செந்தமிழ்த் தாயை செங்கோட்டை இரு கரம் நீட்டி அழைக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

நம் தமிழ் அன்னையை உயர் அரியணையில் அமர்த்திட வேண்டி, உங்களோடு நானும் இறைவனிடம் வேண்டுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 1-35

## 9. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுகிறது. நன்றி, வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-35 மணிக்கு, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

## 12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

34. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால், தமிழ்நாடு மின் எபகிர்மான விதித்தொகுப்பிற்கு திருத்தங்கள் செய்தது குறித்து

*6-9-2013 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ/மி.ப.வி/8-17-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

*35. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால், தமிழ்நாடு மின் கட்டமைப்பு விதித் தொகுப்பிற்கு திருத்தங்கள் செய்தது குறித்து 12-9-2013 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ/மி.க.வி./13-2-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

*36. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் நிதிக் கணக்குகள் (தொகுதி 1 மற்றும் 2) (ஆங்கிலம்), நிதி ஒதுக்க கணக்குகள் (ஆங்கிலம்) மற்றும் "கணக்குகள் குறித்த ஒரு மேலோட்டப் பார்வை" (தமிழ், ஆங்கிலம்) ஆகியவற்றை உள்ளடக்கிய குறுந்தகடு. [இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

*37. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தின் தணிக்கை அறிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*38. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் தணிக்கை அறிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*39. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் நாற்பத்தெட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

-ஏதுமில்லை-